
ESANE JEWELLRY
தங்க நகை சேமிப்புத் திட்டத்தில் இணைபவர்களுக்கு முதல் மாதம் இலவசம்!
8, Rue Cail,75010 Paris Tel: 01 42 51 19 03 Port: 06 66 09 55 11



NORD OPTICAL

18, rue Demarquay, 75010 Paris
Gare du Nord (La Chapelle)
Horraires d'ouverture Lundi au Samedi 10h à 19h30 TEL: 01.75.42.92.30



ஐரோப்பியப் பதிப்பு

# ஈழமுரசு

முரசு 05 | 14 - 27 மே 2019 | முழக்கம் 099



உங்கள் வீடுகளை
விற்க | வாங்க
i@D IMMOBILIER
110% கடன்
Gare de Bondy
தொடர்பு: சுதன் 07 64 08 93 83




BHARATH
51.67 Rue Louis Blanc
75010 Paris - France
01 42 09 35 84
01 58 20 06 20
Spécialitées Indienne et Srilankaise
www.restaurantbharath.com
www.cafe-bharath.com


**எரிதணல் கொதித்த நிலம்**
**கந்தகக்காற்று வீசிய நிலம்**
**கண்ணீரும், செந்நீரும்**
**கலந்து இறுகிய உப்புமண்**
**முள்ளிவாய்க்கால் இன்னும்**
**மௌனித்தே கிடக்கின்றது**
**ஒற்றைச் சூரியனின் ஒளியின்றி**
**இருள்மண்டிக் கிடக்கின்றது**
**தமிழர் தாயகம் மட்டுமல்ல**
**உலகத் தமிழர் நெஞ்சமும்**
**ஆனாலும்**
**முள்ளிவாய்க்கால் முடிவல்ல**
**விடுதலையின் வீழ்ச்சியுமல்ல**
**எழுச்சியென்றே ஒருநாளில்**
**வரலாறு எழுதிச் செல்லும்...**




V.T Cash & Carry
www.vtcashcarry.com
11 rue cail, 75010 Paris,
Tel: 01 40 05 07 18 , Fax: 01 40 05 06 92
E-mail: vtsuperstore@organge.fr

Gopal and co Supermarche
72 rue Louis Blanc, 75010 Paris
M°: La chapelle ou Gare du Nord
Tél.: 01 46 07 11 10 | Fax: 01 46 07 13 03

Mohan Jewellery Mart

3/4 Fois sans Frais
(Pièce d'identité + Rib + C.B)
Mo: La Chapelle ou Gare du Nord
201,rue du fg. St. Denis 75010 Paris
Tel: 01 42 05 65 26 Fax: 09 50 31 01 82

IMPORT EXPORT
லாச்சப்பல் நிஷான் சுப்பர் மார்சே
பல்பொருள் வாணிபம்

64, rue louis blanc, 75010 Paris
Tél./Fax: 01 44 72 06 03
M°: La Chapelle Gare du nord

OM MURUGA DESIGN & PRINT

NEW
Ria MONEY TRANSFER
பணம் அனுப்பும் சேவை
BANK CARD மூலம் RIAஇல்
VISA | VISA Electron | Maestro

Crédits - Solutions
வீடு வாங்குவதற்கும் அனைத்து விதமான கடன் தேவைகளிற்கும்
நம்பிக்கையுடன் நாடுங்கள்
திரு.சிவா: 0973255923 - 0665660305
Fond de Commerce மற்றும் Mur Commerciaux
ஆகியவற்றிற்கு கடன் உதவிகள் செய்து தரப்படும்
2-4 rue de l'Orillon - 75011 Paris
email: creditssolutions@gmail.com

VS CO Cash & Carry
www.vsco.com
197, rue du Fbg St.Denis - 75010 Paris
Tél.: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04

# ASCES
30 ஆண்டுகளாக நடைபெறும் பதிவு செய்யப்பட்ட பாடசாலை

100 % சித்தி Bac et Brevet இல் எமது மாணவர்களுக்கு வாழ்த்துக்கள்

விபரங்கள் அறிய எமது இணையத்தளம் www.asces.fr Tél : 07 82 88 59 16 E-mail : asces@free.fr

Brevet, Terminale மீட்டல் வகுப்புகள் ஆரம்பம்

Grande Section, CP, CE,CM, Collège, Lycée வகுப்புகள்
Maths, Français, Physique, Chimie, SVT, Histoire

பெரியவர்களுக்கான புதிய பிரஞ்சு வகுப்புகள்

பெரியவர்களுக்கான புதிய பிரஞ்சு வகுப்புகள்
20-04-2019 சனி காலை 9 மணி ஒருநாள் வகுப்பு
04-05-2019 சனி ஞாயிறு பி.ப 5.30 மணி
15-04-2019 திங்கள் காலை 10.30 மணி
12-06-2019 ஞாயிறு காலை 10.மணி (Nationality வகுப்பு)
24-04--2019 புதன் பி.ப 3.30 மணி (Bobigny)

100 % சித்தி Bac et Brevet இல் எமது மாணவர்களுக்கு வாழ்த்துக்கள்

எமது வெளியீடுகள்
நடைமுறை பிரஞ்சு – பிரஞ்சு இலக்கணம் பயில சிறந்தநூல்
பிரஞ்சு – தமிழ், தமிழ் – பிரஞ்சு அகராதி
பிரஞ்சு பேசுவோம் பகுதி 1 & 2 CD உடன்

LA COURNEUVE இல்
35, rue Maurice Lachâtre - 93120 La Courneuve

BOBIGNY
38, rue Gaston Crépin 93000 Bobigny

PARIS
3, place de Joinville 75019 Paris M° Crimée

Epinay sur seine 42, rue Félix Merlin 93800 Epinay sur Seine

Bridal makeup & cake icing
மணப்பெண் அலங்காரம்.
கேக் அலங்காரம் சனி காலை 9.30 மணி ஆரம்பம்
பதிவுகள் இப்போதே செய்யுங்கள்

புதன், சனி, ஞாயிறுகளில்
தமிழ், நடனம், சங்கீதம், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், ஓர்கன், கிட்டார் வகுப்புகள்
தையல் வகுப்புகள் ஆரம்பம்

கேரளா மூலிகை வைத்தியம்
KERALA HERBEL TRAITEMENT

சனி இருமலுக்கு
ஆண்மை குறைவுக்கு
தோல் வியாதிகள்
முடி கொட்டுதல்
ஞாபக சக்தி
வாயுத் தொல்லை
அல்சர்
ஆஸ்த்துமா
நரம்பு தளர்ச்சி
சுடு
உடல் பருமன் அதிகரிக்க-குறைக்க
அனைத்து உடல் வலிகள்

மூலம்
பக்கவாதம்
நரம்பு வலி
மூட்டுவலி
இடுப்புவலி
முடக்குவாதம்
தலைவலி

100% NATURAL

மற்றும் 360 வியாதிகளுக்கும் பக்கவிளைவுகள் அற்ற மூலிகை சிகிச்சை அளிக்கப்படும்

42 Rue Joseph Hénaff, 93700 DRANCY
RER B BUS 148 - 346 - 247
Tél: 07 73 42 42 63

Baby Baloon
Port : 06 13 06 20 29
Tel : 01 39 80 85 23

பரிஸ் லாச்சப்பலில்
NEW SUTHA COIFFURE
நியூ சுதா சலூன்
10 Rue Demarquay
75010 Paris.
Gare du Nord
லிப்றிற்கு முன் வீதியில்
Sutha
Tél: 06 51 91 67 72

எப்பிநே சூர் சென்னில் RER முன்பாக
NEW SUJAN COIFFURE
5 rue d'orgemont
93800 Epinay sur seine
RER C T8 11 :Epinay sur seine
Tél.: 07 53 54 27 73

Devi Textile & Tailors
சாரி பிளவுஸ் 30 நிமிடங்களில் தைத்துத் தரப்படும்
ஆண் பெண் இருபாலருக்கும் அனைத்து விதமான ஆடைகளும் மற்றும் உங்கள் விருப்பத்திற்கு அமைவான தோற்றத்துடன் உங்கள் எண்ணத்திற்கேற்ப வடிவமைத்துக் கொடுக்கப்படும்.
Tél: 09 51 01 85 59
Suresh: 07 81 29 86 50
29, Bld de la Chapelle
75010 Paris
M°: La Chapelle (ligne 2)

# ஈழமுரசு

mediacentre ஊடகமையம்

முரசு 05 | 14 – 27 மே 2019 | முழக்கம் 099


"இன அழிவில் இருந்து எமது மக்களைப் பாதுகாத்து தேசிய சுதந்திரத்தை முன்னெடுப்பதாயின், எமது தாய்ப்பூமியை ஆக்கிரமித்திருக்கும் எதிரிப் படைகளை விரட்டியடிக்க வேண்டும். இந்தக் கைங்கரியமானது தீர்க்கமான, திட்டமிடப்பட்ட ஆயுதப் போராட்டத்திலும் எமது மக்களின் ஏகோபித்த பங்களிப்பிலும் தங்கியிருக்கிறது."

– தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்



## இன அழிப்பு பத்தாண்டு நிறைவில்

# நீதியைப் பெற்றுக் கொள்ள அனைவரும் ஒன்றிணைவோம்

'கிழக்கில் இருந்து' **எழுவான்**

உலக வல்லரசுகளின் ஒப்புதலுடன் சிறீலங்கா அரசினால் அரங்கேற்றப்பட்ட தமிழ் இன அழிப்புக்கு பத்தாண்டுகள் கடந்துள்ள போதிலும், படுகொலை செய்யப்பட்ட இனத்திற்கான தீர்வு இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை. படுகொலை மேற்கொண்ட தரப்பினருக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டு வெளிநாடுகளின் தூதுவர்களாக மாற்றினர். அதுமாத்திரமல்ல, ஓர் இனத்தின் விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி இரும்புக் கரங்களைக் கொண்டு நசுக்கிவிட்டனர்.

பாதுகாப்பு வலயத்திற்குள் வருமாறு அழைப்பு விடுக்கப்பட்ட மக்கள் கொத்துக் கொத்தாக கொன்று குவிக்கப்பட்டார்கள். உலக நாடுகள் கண்மூடி கைகட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்தார்கள். பயங்கரவாதத்தையும், விடுதலைப் போராட்டத்தையும் வேறுபடுத்தி பார்க்கத் தவறிய உலக நாடுகள் ஓர் இனத்தை அழிக்கக் காரணமாயிற்று. தமிழ் இனத்தின் உரிமைகள் மறுக்கப்பட்டதுடன், தாயகப் பகுதியில் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களாலும் உரிமைப் போராட்டம் வெடித்தது.

முப்பது வருட ஆயுதப் போராட்டத்தின் போது தமிழ் மக்கள் வகைதொகை, பால்வேறுபாடின்றிப் படுகொலை செய்த வரலாறு சிங்கள ஆட்சியாளர்களுக்கு உண்டு. இந்த படுகொலைகள் அனைத்தும் வரவு வைக்கப்படாத கணக்காக உள்ளது. படுகொலைகள் தொடர்பாக விசாரணைகள் நடாத்தப்பட வேண்டும் என தமிழர் தரப்பு அழுத்தங்களை கொடுத்தாலும், கண்துடைப்புக்காக ஆணைக்குழுக்களை அமைத்து விசாரணை என்ற போர்வையில் காலத்தை இழுத்தடித்த போக்குதான் காணப்பட்டது.

ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்களை இன அழிப்புத் தொடர்பாக, ஆதாரங்களுடன்? நேரில் கண்ட சாட்சிகளுடன் நீதி கேட்டு சென்ற போதும், பேரினவாத சக்திகளிடம் எவ்விதமான நீதி நியாயங்களையும் பெற்றுக் கொள்ளமுடியாது என்ற அறுதியான தீர்மானத்தின் பின்புதான் உலகநாடுகளிடம் கையேந்தினார்கள். அவர்களும் பாதிக்கப்பட்ட தரப்புக்களை மதிக்காது, அவர்களுக்கான நீதிவிசாரணைகளை மேற்கொள்ளாது குற்றங்களை இழைத்த தரப்பினரை தப்பித்துக் கொள்ளும் வகையில் கால அவகாசங்களை வழங்கி நீதியை சாகடித்துள்ளனர்.

உலக நாடுகளும், மனிதநேய அமைப்புக்களும் தமிழர் விடயத்தில் ஒருபக்கப் பார்வையைப் பார்ப்பது அவர்கள் மீது வைத்துள்ள நம்பிக்கையை நீர்த்துப்போக வைத்துள்ளது. இன அழிப்பு இடம்பெற்று பத்தாண்டுகளும் தொடர்ந்து நீதி கோரி தொடர் அறவழிப் போராட்டங்களை எமது மக்கள் நடாத்தியுள்ளதுடன், மனித நேச நிறுவனங்களும் இடைவிடாது எழுத்து மூலமாகவும் தமது ஆதாரங்களை வழங்கியுள்ளனர்.

தொடர்ச்சி 04ம் பக்கம்

## உள்ளே...





சிங்களம் உருவேற்றிய இஸ்லாமிய பூதம்




தமிழ் இனப்படுகொலை பத்தாண்டு நிறைவில் மீண்டும் படுகொலை



முள்ளிவாய்க்கால் இறுதிவரை இரவுபகலாகப் பணியாற்றிய தமிழீழக் காவல்துறை!



பயங்கரவாதிகள் போர்வையில் ஏன் குண்டுத் தாக்குதல்கள்?



புலம்பெயர்ந்தவர்களின் வலி சொல்லும் ஒருத்தி

கானல் நீராகிப் போன இராசதந்திரப் போராட்டம்

சாம்பலில் இருந்து உயிர்த்தெழ வேண்டிய காலம்

















# ஈழமுரசு

"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

"MEDIACENTRE"
JOURNAL TAMOUL
bimensuel **Gratuit**

MEDIACENTRE
BP 40
93141 BONDY PDC,
France

Port: 00 33 781 808 116

இணையத்தளம்
www.eelamurazu.com
ஆசிரியர்பீடத் தொடர்புகட்கு:
@: eelamurazu@gmail.com
விளம்பர விநியோகத் தொடர்புகட்கு:
@: eelamurazuadm@gmail.com

**Le Président:** S.Pulenthiran
தலைவர்: சு.புலேந்திரன்

**Redacteur:** K.Jeisanthar
பொறுப்பாசிரியர்: கி.ஜெய்சந்தர்

ஆசிரியர் பீடம்
எழுவான் (தென்தமிழீழம்)
வீரமணி (வடதமிழீழம்)
மதிமாறன் (தமிழகம்)
கந்தரதன் (பிரான்ஸ்)
சோழகரிகாலன் (பிரான்ஸ்)
விவேகன் (பிரான்ஸ்)
சுமந்திரன் (பிரான்ஸ்)
அருணன் (பிரான்ஸ்)
ச.ச.முத்து (பிரித்தானியா)
சேயோன் (பிரித்தானியா)
சேரமான் (ஐரோப்பா)
ஈசன் (கனடா)

விளம்பரம் / விநியோகம்
சுஜி (பிரான்ஸ்)
அருளப்பு (பிரான்ஸ்)
கஜி (பிரான்ஸ்)
கஜன் (பிரான்ஸ்)
மோகன் (பிரித்தானியா)

Impression:
IPS,
ZI de Iscles, 30 av. des Alpines,
13160 Châteaurenard

பிரித்தானியா
Mohan: 00 44 790 4631 883
@: eelamurazu.uk@gmail.com

## சந்தா விபரம்

வருட சந்தா
பிரான்ஸ் 75€
ஐரோப்பா 85€
ஏனைய நாடுகள் 99€

## குறிப்பு:

இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.

ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.



SKYROSE
YUPPTV
14, RUE CAIL - 75010 PARIS
01 77 17 63 58
M° Gare du Nord / La Chapelle



பாரீஸ் அறிவாலயம்
Paris Arivalayam
7, rue Perdonnet, 75010 Paris
Metro : La chapelle Tel: 01 44 72 03 34




# இன அழிப்பு பத்...

ஆனால், அண்மையில் பாகிஸ்தான் நாட்டில் இருந்து நாடு கடத்தப்பட்ட அகதிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் கவலை தெரிவித்துள்ளார். சுயஉரிமைக்காக சுமார் அறுபது ஆண்டு காலமாக அகிம்சை மற்றும் ஆயுதப் போராட்டம் செய்த தமிழ் மக்களை இன அழிப்பு மேற்கொண்டதுடன், கால்நடைகளைப் போல் முட்கம்பிகளுக்குள் அடைத்துவைத்து பல்வேறு கொடுமைகளை சந்தித்த மக்களுக்கு இவ்வாறான அமைப்புக்கள் எவ்விதமான ஆறுதல் வார்த்தைகளை தெரிவித்தார்களா? இல்லை.

உலக நாடுகளின் தேவைக்காக இலங்கைத் தீவை பயன்படுத்தும் நாடுகள், உரிமைப் போராட்டத்தையும், இன அழிப்பையும் மூடிமறைப்பதற்கான அனைத்து செயற்பாடுகளிலும் இறங்கியுள்ளனர். ஐக்கிய அமெரிக்காவில் இடம்பெற்ற இரட்டைக்கோபுர தாக்குதலைக் காரணம்காட்டி தமிழர் போராட்டத்தை நசுக்கியவர்கள், இன்று இலங்கைத்தீவில் முஸ்லிம் உலக பயங்கரவாதிகள் நடாத்திய தாக்குதலைக் காரணம்காட்டி, தமிழர் தரப்புக்கு வழங்கவேண்டிய நீதியை வழங்க மறுக்கின்றனர். பேரினவாத சக்திகளையும், உலக நாடுகளையும் குறை கூறிக்கொள்ளும் இந்தவேளையில், தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என தங்களை அடையாளப்படுத்துபவர்களும் இன்று பாதைமாறி செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. அதுமாத்திரமல்ல, பேரினவாத சக்திகளை குற்றங்களிலிருந்து தப்பித்துக் கொள்ளவைக்கும் சக்தியாக தமிழர் தரப்புமாறி தனது இனத்திற்கு மாபெரும் துரோகத்தை இழைக்கின்றார்கள் என்பது நேரடியாக புலப்படுகிறது. அண்மையில் கூட தமிழர்களை கசக்கி பிழிந்த பயங்கரவாதச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டத்திற்கு தமிழர் தரப்பு அரசியல்வாதிகள் ஆதரவு வழங்கியிருந் தனர். அதன் விளைவு இன்று குடாநாட்டில் பல்கலைக்கழக மாணவர்களை கைது செய்ய வழிவகுத்துள்ளது எனலாம். அதுமாத்திரமல்ல, இன அழிப்பு சம்பவத்தை நினைவேந்தலைக் கூட நடாத்தவிடாது செய்ய அரசாங்கம் கங்கணம் கட்டியுள்ளது.

காணாமல்போன உறவுகளைத் தேடி நடாத்தப்படும் போராட்டங்கள், மண்மீட்புக்கான போராட்டங்கள், தமிழர் அடையாளங்களைத் தடுப்பதற்கான போராட்டங்கள் என அனைத்தையும் நசுக்குவதற்கான வழிவகைகளை தமிழ் அரசியல்வாதிகள் பேரினவாத சக்திகளுக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர். இதேபோன்று புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகள் அந்நிய சக்திக்கு விலைபோகாது, எதிரியின் சூட்சிக்குள் சிக்காது எமது மக்களின் துன்ப துயரங்களில் பங்குகொள்வதுடன், நீதியையும், உரிமையையும் எமது மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு தாம் வாழும் நாடுகளின் அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

எனவே, ஒற்றுமையே பலம் என்பதற்கு அமைவாக இந்த சந்தர்ப்பத்தில் கருத்துவேறுபாடுகள் இன்றி கட்சி வேறுபாடுகளின்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதனூடாகத்தான் எனது உரி மைகளையும் அரசியல் அபிலாசைகளையும் வென்றெடுப்பதுடன், பாதிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு ஒரு விடிவுகாலத்தைப் பெற்றுக் கொடுக்க முடியும் என்பது உண்மை. வாருங்கள் இந்தப் பத்தாண்டிலாவது ஒற்றுமையை வெளிக் காட்டுவோம்.


தமிழர் திருமண மண்டபம்

Palais de La Terrasse
100 முதல் 600 இருக்கைகள்



Aulnay sous bois, Goussainville, Villers le bel, Fosses, Louvres, Les Noues, Sarcelles, Saint denis, Bondy, Bobigny, Drancy, La Courneuve, Le Blanc Mesnil இருந்து

Le Bourget இருந்து

29 avenue louis de broglie
95500 le thillay
facebook: Salle Laterrasse Le Thillay

Salle de l'épi d'Or
Salle - 1
100 முதல் 300 இருக்கைகள்
Salle - 2
100 முதல் 400 இருக்கைகள்





3, Avenue de l'épi d'Or
94800 Villejuif
facebook: salle de l'épi d'or
Métro: 7 ( Arrêt: Porte d'italie)
Bus: 131 ( Arrêt: Youri Gagarine)

தொடர்புகளுக்கு:
06 12 65 73 53 / 06 51 79 74 32 / 06 95 61 39 43



PTP திருமண பொருத்துனர் - பிரான்சு
யாழ்ப்பாணம், பிரான்சு போன்ற நாடுகளிலிருந்து மணமக்களை தெரிவு செய்ய, தொடர்புகொள்ள வேண்டிய சேவை
தொடர்புகளுக்கு: 0695498519
K. பரம் 0753844284
PTP திருமண சேவை - பரிஸ்



Aubervilliers Quatre chemins ல் ஒரு தமிழ்க்கடை
Anna Marché
அனைத்து மளிகைப்பொருட்களுக்கும்...



மொத்தமாக கொள்வனவு செய்வோருக்கு விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்
V.I.P Sarl 4 rue Ernest Prévost, 93300 Aubervilliers. Tél. : 07 52 94 50 65



கபறினா இறைச்சிக்கடை
தினமும் உடன் இறைச்சி வகைகளையும், விசேடமாக ஆட்டிறைச்சிப் பங்கையும் பெற்றுக்கொள்ள...



BOUCHERIE GABARINA
62, Rue Louis Blanc 75010 Paris
Mo : La Chapelle Ou Gare du Nord
Tel : 01 40 34 05 35
Fax : 01 40 34 09 76
207, rue fbg st Denis 75010 Paris
Tel : 01 46 07 46 35
Fax : 01 46 07 41 30



மாங்கல்யம் நகை மாடம்
தரம் - நிறம் - விலை - டிசைன் - உத்தரவாதம்



122 Av Paul Vaillant Couturier - 93120 La Courneuve
Tél & Fax: 01 48 36 40 75
email: mangalyam93120@gmail.com
www.mangalyam-jewels.com

ஈழமுரசு

# மீண்டும் ஒரு முள்ளிவாய்க்கால் வரலாற்றுத் தவறை, தவிர்ப்போம்

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பத்தாண்டுகள் நிறைவடையவுள்ளது. விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் முடிவிற்கு வரும்போதே தமிழர்களுக்கு நிம்மதியான, நிலையான சமாதானம் கிட்டும் என்று தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தைப் பயங்கரவாதப் போராட்டமாகச் சித்தரித்த உலகம், ஆயுதப் போராட்டம் முற்றுப்பெற்று பத்தாண்டுகளை கடக்கும் நிலையிலும் தமிழர்களுக்கான நீதியை பெற்றுக்கொடுக்க மட்டுமல்ல, தமிழர் தாயகத்தில் அமைதியையும் இன்றுவரை ஏற்படுத்த முடியவில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் மையம் சிறீலங்காவிற்கு மீண்டும் இரண்டாவது தடவையாக வழங்கியுள்ள 2021 மார்ச் வரையிலான இரண்டு ஆண்டு கால அவகாசத்தில் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை. மாறாக இன்றைய நிலையையும் விட மிக மோசமான நிலைமைக்கே தமிழர் தாயகம் செல்லப் போகின்றது என்பதை இலங்கையின் தற்போதைய நிலவரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

இலங்கைத் தீவில் நாள்தோறும் நடக்கும் கைதுகளும், அட்சய பாத்திரம் போல் அள்ள அள்ளக் குறையாமல் கிடைக்கும் ஆயுதங்களும் அடுத்த முள்ளிவாய்க்கால் நோக்கி சிங்களப் பேரினவாத சக்திகள் நகர்ந்து வருவதை உணர்த்தி நிற்கின்றன.

தமிழர்களின் பலமான பாதுகாப்பு சக்தியான விடுதலைப் புலிகளை அழித்துவிட்டதால் தமிழர்களால் இனி துணிந்தெழ முடியாது என்ற நம்பிக்கையில், இப்போது மீண்டும் முஸ்லீம்கள் மீது சிங்களப் பேரினவாதம் தமது பார்வையைத் திருப்பியுள்ளது. கத்தோலிக்க மக்களின் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடந்த பயங்கரவாதத் தாக்குதல்கள், பயங்கரவாதத்தின் பெயரால் முஸ்லீம்களையும் சர்வதேச ஆதரவுடன் ஒடுக்குவதற்கான வாசலை சிங்களப் பேரினவாத சக்திகளுக்கு திறந்து கொடுத்துள்ளன.

முஸ்லீம் மக்கள் மீது சிங்களப் பேரினவாதம் தமது கொடுங்கரங்களை நீட்டுவது இதுவொன்றும் முதற்தடவையல்ல. தமிழர்கள் மீதான இனப்படுகொலையை ஆரம்பிப்பதற்கு முன்பாகவே முஸ்லீம்கள் மீதான ஒடுக்குமுறைகளை அது ஆரம்பித்துவிட்டது.

இற்றைக்கு சரியாக நூறு ஆண்டுகளுக்கு முன்பு, 1915ம் ஆண்டு இலங்கையில் சிங்கள - முஸ்லீம் இனக்கலவரம் ஒன்று வெடித்தது. முஸ்லீம்களின் பொருளாதார வளர்ச்சியால் பொறாமை கொண்ட சிங்கள இனவாதிகள் கட்டவிழ்த்துவிட்ட இனக்கலவரம் அது. இந்த வன்முறையில் முஸ்லீம் சமூகம் மீண்டெழ முடியாதளவிற்கு அழிவுகளைச் சந்தித்தது. இந்த இனக்கலவரத்திற்கு முன்னணி சிங்கள அரசியல் தலைவர்களான டி.எஸ்.சேனநாயக்க, டி.எஸ்.விஜேவர்தன, டொக்டர் நெயிசர் பெரேரா, ஈ.டி.த.சில்வா, ஆர். டயஸ் பண்டாரநாயக்கா, எச்.அமரசூரிய. ஏ.எச்.மொலமூறே போன்றவர்களே காரணமாக இருந்தனர். இதனை இந்தச் சிங்கள அரசியல் தலைவர்களே முன்னின்று திட்டமிட்டு நடாத்தியதாகக் குற்றம்சாட்டிய அப்போது இலங்கையை ஆட்சிய செய்த பிரித்தானிய அரசு, இனக்கலவரத்திற்கு காரணமான இந்தத் தலைவர்களைக் கைது செய்தது மட்டுமல்ல, இவர்களில் சிலருக்கு மரண தண்டனையை தீர்ப்பாக வழங்கியது.

சிங்களம் கொந்தளித்தது. தங்கள் தலைவர்களைக் காப்பாற்றும் திறமை வாய்ந்தவர்கள் தங்களிடம் இல்லாமல் தத்தளித்தது.

முஸ்லீம்களை பாதுகாப்பதில் அக்கறை காட்டியிருக்கவேண்டிய அன்றைய தமிழ்த் தலைமைகள், சிங்கள இனவாத சக்திகளை காப்பாற்றுவதில் அக்கறை காட்டின. ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் இனத்திற்கு ஆதரவு கொடுத்திருக்கவேண்டிய தார்மீக பொறுப்புக்கொண்ட தமிழ்த் தலைமைகள், ஒடுக்குமுறையாளர்களைக் காப்பாற்ற களமிறங்கினர். பிரித்தானியா வரை சென்று, பிரித்தானிய அரசை எதிர்த்து வாதாடி சிங்களத் தலைவர்களை மீட்டு வந்த சேர் பொன். இராமநாதன் போன்றவர்களை தங்கள் தோள்களில் சுமந்து கொண்டாடியது சிங்கள இனவாதம். இதில் புழகாங்கிதம் அடைந்திருந்த தமிழ்த் தலைமைகள் எடுத்த வரலாற்றுத் தவறே, இன்றுவரை தமிழினம் அழிவைச் சந்திப்பதற்கும், தங்கள் இறையாண்மையை இழந்துவருவதற்கும் காரணமாக அமைந்துவிட்டது.



முஸ்லீம்களை ஒடுக்க நினைத்த அதே கரங்கள், தமிழ் மக்களின் கழுத்தையும் நாளை நெரிக்கும் என்ற தூர நோக்குச் சிந்தனையுடன், முஸ்லீம்கள் மீதான அந்த வன்முறையை தமிழர்கள் அப்போதே எதிர்த்திருக்கவேண்டும். ஆனால் நடந்ததோ நேர்மாறானது. தமிழ் தலைமைகள் தீர்க்கதரிசனமான முடிவொன்றை அன்றைய காலகட்டத்தில் எடுத்திருந்தால், இன்று வரலாறே மாறிப்போயிருக்கும். ஏன் தமிழர்களுக்கான தனி நாடு கூட அமைந்திருக்கும்.

முஸ்லீம்களை ஆதரித்து நின்றிருந்தால், சிங்களப் பேரினவாதம் தமிழர்களையும் விரோதியாகப் பார்த்திருக்கும். பிரித்தானியா வெளியேறியதன் பின்னர் தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட வன்முறைகளை, அப்போதே அது கட்டவிழ்த்துவிட்டிருக்கும். அவ்வாறு நிகழ்ந்திருந்தால், பிரித்தானியா இலங்கையை விட்டு வெளியேறியபோது, சிங்களவர்களுடன் சேர்ந்து வாழமுடியாது எங்கள் நாட்டை எங்களிடமே ஒப்படைத்துவிட்டுச் செல்லுங்கள் என்று தமிழர்களும் கோரியிருப்பார்கள்.

சிங்களப் பேரினவாதிகளின் இனவெறி மனநிலையை அப்போது நன்கு புரிந்து வைத்திருந்த பிரித்தானியாவும் நாட்டை இரு தரப்பிடமும் பிரித்துக்கொடுத்துவிட்டுச் சென்றிருக்கும். ‘பழம் நழுவி பாலில் விழுந்திருக்க வேண்டிய அற்புதமான வாய்ப்பு, தமிழ்த் தலைமைகளின் தவறான சிந்தனையால் இரத்தச் சகதிக்குள் விழுந்துவிட்டது.’

அன்றைய தமிழ்த் தலைமைகள் விட்ட வரலாற்றுத் தவறுதான், அகிம்சைப் போராட்டம், விடுதலைக்கான ஆயுதப் போராட்டமாக மாறுவதற்கும் இன்று இலங்கைத் தீவே சிங்களப் பேரினவாதத்தின் ஆக்கிரமிப்பிற்குள் முழுமையாக மூழ்கும் நிலைக்கு வந்ததற்கும் காரணமாக அமைந்துவிட்டது.

ஆனால் ஆயுதம் தாங்கிப் போராடிய விடுதலைப் புலிகள் தமிழ் மக்களும், முஸ்லீம் மக்களும் இணைந்ததே தமிழர் தாயகம் என்பதை எப்போதும் ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள். சிங்களப் பேரினவாதிகளுடன் இணைந்து தமிழ் மக்கள் மீதான இனஅழிப்பிற்கு சில முஸ்லீம் மதவாத சக்திகள் முண்டுகொடுத்து நின்றதால், யாழ்.குடாநாட்டில் இருந்து முஸ்லீம் மக்களை வெளியேற்றவேண்டிய நிர்ப்பந்தத்திற்கும், கிழக்கில் முஸ்லீம் ஊர்காவல் படை, ஜிகாத் குழுக்களுக்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டிய நிலைமைக்கும் விடுதலைப் புலிகள் தள்ளப்பட்டிருந்தாலும், முஸ்லீம் தலைமைகளை சந்தித்துப் பேசி தமிழ் - முஸ்லீம் உறவைக் கட்டியெழுப்புவதில் விடுதலைப் புலிகள் எப்போதும் அக்கறை காட்டியே வந்திருக்கின்றார்கள். சமாதான காலத்தில் முஸ்லீம் தலைமைகளை தமிழீழத் தேசியத் தலைவர் நேரடியாகச் சந்தித்துப்பேசி முஸ்லீம்களின் கலாச்சாரம், பாதுகாப்பு குறித்து உறுதி மொழிகளையும் வழங்கியிருக்கின்றார்.

ஆனால், தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை அழிப்பதற்கு முஸ்லீம்களைப் பயன்படுத்திய சிங்களப் பேரினவாதம், இன்று பயங்கரவாதத்தின் பெயரால் முன்னெடுக்கும் முஸ்லீம்கள் மீதான இன்னொரு ஒடுக்குமுறைக்கு தமிழர் தரப்பைப் பயன்படுத்த முயன்றுவருகின்றது. முஸ்லீம் பயங்கரவாதத்தை அழிப்பது என்ற பெயரில், இன்னொரு ஒடுக்குமுறைக்கு தயாராகி நிற்கும் சிங்களப் பேரினவாதத்திற்கு தமிழர்கள் தோள் கொடுத்து நின்றால், அது மிகப்பெரும் வரலாற்றுத் தவறாகவே இருக்கும். அது தமிழர் - முஸ்லீம் உறவை நிரந்தரமாகத் தகர்த்தெறிவது மட்டுமல்ல, தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்திற்கான அர்ப்பணிப்புக்களை கொச்சைப்படுத்தி, நீதிக்கான தமிழர்களின் போராட்டத்தையும் கேலிக்குரியதாக மாற்றி விடும் என்பது உறுதி.

## பொய்க் குற்றச்சாட்டு போராளி விடுதலை

மட்டக்களப்பு வவுணதீவில் இரண்டு சிறீலங்கா நாட்டுக் காவல்துறையினர் படுகொலை செய்யப்பட்டது தொடர்பில் பொய்க் குற்றச்சாட்டுடன் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகள் உறுப்பினர் அஜந்தன் என அழைக்கப்படும் கதிர்காமத்தம்பி ராஜகுமாரன் விடுக்கபட்டுள்ளார். கடந்த ஆண்டு மாவீரர்நாளுக்கு முன்பாக வவுணதீவு காவலரணில் இருந்த இரண்டு காவல்துறையினர் சுட்டும் வெட்டியும் கொலைசெய்யப்பட்டிருந்தனர். இது தொடர்பில் விடுதலைப்புலி உறுப்பினர் அஜந்தன் உட்பட இருவர் கைதுசெய்யப்பட்டிருந்த நிலையில்



ஒருவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் அஜந்தன் தொடர்ந்து சிறீலங்கா பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வந்தனர்.

இந்த நிலையில் கடந்த 21ம் திகதி மட்டக்களப்பு சீயோன் தேவாலயம் உட்பட இலங்கையின் பல பாகங்களிலும் நடைபெற்ற குண்டுத்தாக்குதலை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் பிரதான தாக்குதல்தாரியாக அடையாளப்படுத்தப்பட்டிருந்த சஹ்ரானின் வாகன சாரதி கைதுசெய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் வவுணதீவு தாக்குதலை தாங்களே நடத்தியதாகவும் காவல்துறையினரைன் கொலைசெய்ததாக வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இதனடிப்படையில் அஜந்தன் மற்றும் கிளிநொச்சியை சேர்ந்த கதிர்காமத்தம்பி ராஜகுமாரன் ஆகியோரை விடுதலை செய்யுமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்ததற்கு அமைவாக கடந்த 11ம் திகதி மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற பதில் நீதிபதி தியாகேஸ்வரன் முன்னிலையில் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இதனைத்தொடர்ந்து பிணையில் விடுவித்த பதில் நீதிவான் எதிர்வரும் 13ம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகி விடுவிப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் பணித்தார்.

இதேவேளை, தனக்கு நடந்தது போன்று இனி எவருக்கும் நடக்கக் கூடாது என்று தெரிவித்த விடுதலையான போராளி அஜந்தன், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் தமிழ் இளைஞர்கள் நிலைமை இப்படியாகிவிடக் கூடாது என்றும் கவலை வெளியிட்டார்.



## உழவு இயந்திரம் – தொடருந்து மோதல்

கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவையில் உழவு இயந்திரம் தொடருந்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியது. தனியார் பழச்சாறு உற்பத்தி தொழிற்சாலை கழிவுகளை ஏற்றி சென்ற தனியார் உழவு இயந்திரம், குறித்த கழிவுகளை கொட்டிவிட்டு திரும்புகையில், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த உருத்திராதேவி தொடருந்துடன் மோதியதில் குறித்த விபத்து சம்பவித்துள்ளது. இதன்போது உழவு இயந்திரம் பலத்த சேதங்களிற்கு உள்ளாகியுள்ளது. சாரதி எவ்வித காயங்களும் இல்லாது தப்பித்துக்கொண்டார்.

## ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் சிறீலங்காவில் சந்திப்பு

சிறீலங்காவிற்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் துங்–லாய் அந்நாட்டின் பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் எஸ்.எச்.எஸ்.கோட்டேகொடவை கடந்த 7ம் திகதி சந்தித்துள்ளார். பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற இச்சந்திப்பில் ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் மற்றும் பாதுகாப்பு



செயலாளர் ஆகியோருக்கிடையே கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றதுடன் இச்சந்திப்பினை நினைவு கூறும்வகையில் அவர்களிடையே நினைவுச்சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. இந்நிகழ்வில் சிறீலங்கா இனப்படுகொலைக் கடற்படையின் தளபதி வைஸ் அட்மிரல் பியால் டி சில்வா, ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதி தூதுவர் திரு. தோர்ஸ்டென் பார்க்பிரெட் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## யாழில் 2 கோடி ரூபா பெறுமதியான அபின் மீட்பு!

யாழ்ப்பாணம் வடரமாட்சி, தொண்டமனாறு பகுதியில் சுமார் 2 கோடி ரூபா பெறுமதியான அபின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது. வடமராட்சி கெருடாவில் பகுதியில் உள்ள தோட்டம் ஒன்றில் சந்தேகத்துக்கு இடமான இருவர் நடமாடிய போது, அவர்கள் சிறீலங்காக் காவல்துறை வருவதைக் கண்டதும் பொதி ஒன்றை போட்டுவிட்டு தப்பியோடியுள்ளனர். குறித்த பொதியினை சோதனையிட்டபோது அதிலிருந்து ஒன்றரைக் கிலோ அபின் மீட்டுள்ளனர்.






# செய்திகளும் எழும் கேள்விகளும்

**தெய்வமகள்**

**செய்தி:-** இலங்கையில் நிரந்தர இராணுவத்தளமொன்றை அமைப்பதற்கான திட்டம் எதுவுமில்லை என சிறீலங்காவிற்கான அமெரிக்க தூதுவர் அலைனா டெப்பிலிட்ஸ் தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** அப்போ தற்காலித் தளம் அமைக்கப்போகின்றார்களோ..? தற்காலத் தளத்தை அகற்றவே அமெரிக்காவிற்கு ஐம்பது, அறுபது ஆண்டுகள் பிடிக்குமே..?

★★★★ ★★★★

**செய்தி:-** பயங்கரவாத சவால்களை இலங்கையிலிருந்து முற்றாக ஒழிப்பதற்கான ஆற்றல் சிறீலங்காவின் தற்போதைய ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவுக்கு இருப்பதாக பிரித்தானிய பாதுகாப்பு மற்றும் பொருளாதார குற்றங்கள் தொடர்பான இராஜாங்க அமைச்சர் பென் பலாஸ் (Ben Wallace) தெரிவித்துள்ளார்.?

**எழும் கேள்வி:-** முற்றாக ஒழிக்கும் வரைக்கும் மைத்திரியார் ஆட்சியில் இருப்பாரோ..?

★★★★ ★★★★



**செய்தி:-** கைது செய்யப்படும் சந்தேகநபர்களிடம் விசாரணைகளை மேற்கொள்வதற்கு, இராணுவத்தினருக்கு அரசாங்கம் அனுமதி அளிக்க வேண்டும் என சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தின் தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

**எழும் கேள்வி:-** அதற்குள் அடுத்த இனப்படுகொலைக்கு தயாராகி விட்டார்களோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு பதிலாக புதிதாக கொண்டுவர அரசாங்கம் முயற்சிக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை ஒருபோதும் ஆதரிக்கப்போவதில்லை என சிறீலங்கா எதிர்க்கட்சி தலைவரும் இனப்படுகொலையாளியுமான மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேனவிடம் தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** இனஅழிப்புச் செய்ய இந்தச் சட்டத்தில் அதிக வசதிகள் இல்லையோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** இஸ்ரேலுக்கு எதிரான பயங்கரவாத செயல்களால் காசா மக்களுக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை என்றும், இதனால் துயரம் தான் அதிகரிக்கும் என்றும் தெரிவித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், வன்முறையை நிறுத்திவிட்டு அமைதியை நோக்கி காசா மக்கள் செயல்பட வேண்டும் என வலியுறுத்தி உள்ளார்.

**எழும் கேள்வி:-** ஏன் இதனை இஸ்ரேலுக்கு சொல்லமாட்டாரா..?

★★★★ ★★★★

**செய்தி:-** ஐ.எஸ். இன் பெயரை நாடாளுமன்றத்தில மைத்திரி உச்சரிக்கவில்லை. அந்த நான்கு எழுத்து பயங்கரவாதத்தை நாம் பாவிப்பது அவர்களை நாம் அங்கீகரிப்பதை போன்று ஆகிவிடும் என சிறீலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறீசேன தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** அட அப்படியா..?

★★★★ ★★★★

**செய்தி:-** ஆசியாவில் 10வது பணக்காரராக தெரிவு செய்யப்படும் தகுதியில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் இருக்கிறார் என்று சிங்கள இன, மதவாத அமைப்பான பொதுபல சேனாவபின் தேரர் விதாரந்தெனிய நந்த தெரிவித்துள்ளார். சொப்பின் பையுடன் கொழும்பு வந்த ரி'ாத் பதியுதீன் இன்று இவ்வளவு வளர்ச்சி அடைந்துள்ளார் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

**எழும் கேள்வி:-** ஓர் இனத்தை அழித்துச் சுருட்டியதல்லவா..?

★★★★ ★★★★

**செய்தி:-** அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல் நகரில் ஒரே வீட்டில் இருந்து 1,000ற்கும் மேற்பட்ட துப்பாக்கிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**எழும் கேள்வி:-** சிறீலங்கா போன்று அமெரிக்காவும் தீவிர தேடுதல் வேட்டையில் இறங்கிவிட்டதோ..?

# அவலச் சாவுகளும் அகால மரணங்களும்

### கிளிநொச்சி வாகன விபத்தில் ஒருவர் பலி

கிளிநொச்சி சேவியர் கடை சந்தி பகுதியில் கடந்த 30ம் திகதி மாலை துவிச்சக்கர வண்டியில் சென்ற முதியவரை பின்னால் உந்துருளியில் வந்தவர் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் குறித்த முதியவர் உயிரிழந்தார். குறித்த துவிச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த சதாசிவம் சங்கநிதி வயது 83 என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். படுகாயமடைந்த அவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று சிகிச்சை அளித்தபோதும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளில் பயணித்தவரும் பலத்த காயங்களுடன் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார்.

### யாழில் குளவி கொட்டி குடும்பஸ்தர் பலி

யாழ் மிருசுவில் பகுதியில் குளவி கொட்டியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், இருவர் படுகாயமடைந்துள்ளனர். யாழ் மிருசுவில் பகுதியில் கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 68 வயதுடைய நபரே உயிரிழந்தவராவர். அவரது மனைவி, மனைவியின் சகோதரி ஆகிய இருவரும் குளவிகொட்டுக்கு இலக்கான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர். அவர்களின் வீட்டு வேலியில் இராட்சத குளவி கூடு காணப்பட்டதாகவும் அவை காற்று வீசியமையால் கலைந்து வீட்டில் இருந்தவர்களை கொட்டியதாக தெரிவிக்கப்படுகின்றது. குளவி கொட்டுக்கு இலக்காகிய மூவரும் அவல குரல் எழுப்பிய போது அயலவர்கள் காவோலைகள், தென்னோலைகளில் தீ மூட்டி சென்று குளவி கொட்டுக்கு இலக்கானவர்கள் அங்கிருந்து மீட்டு கொடிகாமம் வைத்தியசாலையில் அனுமதித்தனர். அங்கிருந்து மூவரும் மேலதிக சிகிச்சைக்க யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதோடு, குளவி கொட்டுக்கு இலக்கான நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

### யானை தாக்கியதில் தாய் பலி, மகள் படுகாயம்

கிளிநொச்சி முழங்காவில் கிராங்சி பகுதியில் கடந்த 2ம் திகதி காலை யானை தாக்கியதில் தாய் பலியானதுடன், 3 வயது பிள்ளை படுகாயமடைந்த நிலையில் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது. குறித்த பகுதியல் உயிரிழந்த நபரின் காணியில் காலை 7 மணியளவில் யானை தென்னங்கன்றுகளை உட்கொண்டிருந்த வேளை, குறித்த யானையை துரத்த முற்பட்டபோது குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த சம்பவத்தில் சிவநேயசன் சுகாசினி என்ற தாய் உயிரிழந்ததுடன், அவரது 3 வயது பெண் பிள்ளையும் படுகாயமடைந்துள்ளார். காயமடைந்த தாய் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைகளிற்காக அழைத்து செல்லப்பட்டபோதே உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

### சுன்னாகம் விபத்தில் பெண் பலி

யாழ் – பலாலி பிரதான வீதியில் யாழ்ப்பாணம் நோக்கி சென்ற வான் எதிரே சென்ற துவிச்சக்கரவண்டியுடன் சுன்னாகம் பகுதியில் மோதி விபத்துக்குள்ளானது. இதன்போது பலத்தகாயங்களுக்குள்ளான துவிச்சக்கரவண்டியில் பயணித்த இருவர் யாழ்ப்பாண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் சுன்னாகம் பகுதியை சேர்ந்த 49 வயதுடைய சுசிலா சந்திரன் எனத் தெரியவந்துள்ளது. இச்சம்பவம் கடந்த 5ம் திகதி இடம்பெற்றுள்ளது.

### யாழில் வாள்வெட்டு
### முதியவர் பலி - 7 பேர் படுகாயம்

யாழ். தென்மராட்சி, கொடிகாமம் பாலாவிப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டு வன்முறையில் முதியவர் ஒருவர் உயிரிழந்த நிலையில் மேலும் ஏழு பேர் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவம் கடந்த 30ம் திகதி இடம்பெற்றது. கொடிகாமம் பாலாவிப் பகுதியில் சுமார் முப்பது பேர் கொண்ட கும்பல் ஒன்று வாள்கள், ஈட்டிகள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் வீதியில் நின்றவர்கள், வீட்டில் இருந்தவர்கள், பெண்கள், முதியவர்கள் என அனைவர் மீதும் தாக்குதல் நடாத்தினர்.

சம்பவத்தில் தனது வீட்டில் இருந்த பாலாவியைச் சேர்ந்த 62 வயதான தம்பிராஜா பொன்னுத்துரை என்பவருடைய மார்பில் ஆயுதக் கும்பல் ஈட்டியால் (பாரை) குத்தியதில் அவர் சம்பவ இடத்திலேயே துடிதுடித்து உயிரிழந்தார். மேலும் வீதியால் சென்ற பாலாவியைச் சேர்ந்த யே.திலிசாந் (25), பாலாவி வடக்கைச் சேர்ந்த சோ.கணேசமூர்த்தி (39), தம்பிராஜா யோகராஜா (46), த.கவிதரன், நடராஜா வளர்மதி (52), செல்வராஜா குமார் (35) மற்றும் வைரமுத்து தவசீலன் (39) ஆகியோர் வாள் வெட்டு மற்றும் கல் வீச்சுத் தாக்குதலில் படுகாயமடைந்தனர்.

தொடர்ச்சி 30ம் பக்கம்



# பயங்கரவாதிகள் போர்வையில் ஏன் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன?

**'தாயகத்தில் இருந்து' காந்தரூபன்**

சர்வதேசப் பயங்கரவாதிகளால் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல் ஒட்டுமொத்த இலங்கைத் தீவையும் சீரழித்திருக்கின்றது. சிறீலங்காவின் பொருளாதாரத்தை சின்னாபின்னமாக்கியிருக்கின்றது. சிங்கள தேசத்தையே ஒட்டுமொத்தமாக உலுக்கியிருக்கின்றது. சிறீலங்காவின் வரலாற்றில், எப்போதும் இடம்பெறாத மிலேச்சத்தனமான பயங்கரவாதத் தாக்குதலால் சிங்கள தேசம் கதி கலங்கி நிற்கின்றது.

இந்தத் தாக்குதலில் 300 வரையான பொது மக்கள் உயிரிழந்து வருந்தத்தக்கது. அதிலும், அதிகளவான தமிழ் மக்களை தமிழர் தேசம் இழந்திருக்கின்றமையானது வரலாற்றுத் துயரம். மீண்டும் ஒரு முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை எனக் கூறும் அளவிற்கு முஸ்லிம் பயங்கரவாதிகளால் தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்டிருக்கின்றனர்.



எது எப்படியிருக்கின்ற போதிலும், இந்தத் தாக்குதலுக்கு பின்னர், சிங்கள தேசம் தமிழர் தாயகத்தை மீண்டும் போர்க்களம் ஆக்கியிருக்கின்றது. இந்தத் தாக்குதலை அரசு ஊதிப் பெருப்பித்திருக்கின்றது என்றே சொல்லத் தோன்றுகின்றது. பயங்கரவாதிகளைக் கண்டுபிடிக்கின்றோம் என்ற போர்வையில் மக்களைத் தேவையற்ற பீதிக்குள் கொண்டு சென்றிருக்கின்றது. பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்ட தென்னிலங்கை மற்றும் இதர பிரதேசங்களைக் காட்டிலும் வடக்கு மாகாணத்தில் படையினரின் கெடுபிடிகள் அதிகரித்திருக்கின்றன.

வன்னி மற்றும் யாழ்ப்பாணம் யுத்தப் பிரதேசம் போலக் காட்சியளிக்கின்றது. வீதிகளில் பவள் கவச வாகனங்களில் போர்க் கோலத்தில் படையினர் நடமாடுகின்றனர். மக்களை அச்சமூட்டும் வகையில் முகங்களை மூடி மறைக்கும் தலைக்கவசங்கள் மற்றும் கறுப்புத் துணிகளைக் கட்டிய படையினரின் பீல்ட் பைக் குறூப் வீதிகளில் ரோந்து செல்கின்றது.

வடக்கு நோக்கி வெடிகுண்டுகளுடன் 20 வாகனங்கள் சென்றிருக்கின்றன என அறிவித்திருக்கின்ற சிறீலங்கா படைத்தரப்பு, வாகனங்களின் இலக்கங்கள் அச்சிடப்பட்ட ஒரு துண்டுப் பிரசுரத்தையும் வெளியிட்டிருக்கின்றது. உண்மையிலேயே இது போலியான இலக்கங்கள். இந்த இலக்கங்களில் எந்த வாகனங்களும் இல்லை. வடக்கு மக்களை அச்சமடைய வைத்து, அங்கு பாதுகாப்பை இறுக்குவதற்காகவே படையினர் இந்தப் புரளியை கட்டவிழ்த்து விட்டிருக்கின்றனர்.

எங்கு பார்த்தாலும் திடீர் சுற்றிவளைப்புக்கள், சோதனைகள். ஏ-9 நெடுஞ்சாலையில், ஆனையிறவு, மாங்குளம், ஓமந்தை உட்பட பல இடங்களில் சோதனைச் சாவடிகள். இதேபோன்று, தீவகம், வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் என அனைத்து இடங்களிலும் முக்கிய நகரங்கள், சந்திகளில் சோதனைச் சாவடிகள். தீவகத்திற்குள் நுழைகின்ற மண்டைதீவுச் சந்தி, அல்லைப்பிட்டிச் சந்தி, பொன்னாலைச் சந்தி போன்ற இடங்களில் நிரந்தர சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.



பேருந்துகளிலும் இதர வாகனங்களிலும் போக்குவரத்துச் செய்யும் மக்கள் இறக்கி நடக்க விடப்பட்டு சோதனைகள் இடம்பெறுகின்றன. குறிப்பாக, தமிழர் தேசம் மீண்டும் ஒரு யுத்த சூழலுக்குள் தள்ளப்பட்டிருக்கின்றது. தமிழர்களை பயப்பீதிக்குள் வைத்திருக்கவேண்டும் என்ற சிங்கள தேசத்தின் எண்ணக்கரு செயல் வடிவம் பெற்றிருக்கின்றது.

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளின் பெயரால் குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டாலும் இது ஆட்சி மாற்றத்திற்கான குண்டுத் தாக்குதல்கள் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளின் இலக்காக இலங்கை இருந்திருக்க முடியாது என்பதே பலரது வாதம். குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் ஆட்சி மாற்றம் ஒரு பக்கமும் தமிழர்களை அடக்கி ஆளவேண்டும் என்ற எண்ணம் மறுபக்கமுமாக இருந்திருக்கின்றது.

இந்தத் தாக்குதலானது மகிந்த ராஜபக்சவினதும் அவரது சகோதரர்களினதும் ஏற்பாட்டில் நடைபெற்றிருக்கின்றது என சிங்களத் தலைவர்களில் சிலர் கூறியிருக்கின்றனர். தமிழ் அரசியல் அவதானிகளும் இதே கருத்தை முன்வைத்திருக்கின்றனர்.

பயங்கரவாதிகளின் குண்டுத் தாக்குதல்களால் மக்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்டு, இரத்த வாடை ஆற முன்னர், சிறீலங்காவின் முன்னாள் ஆட்சியாளர்களான மகிந்த ராஜபக்சவும் கோத்தபாய ராஜபக்சவும் விடுத்திருந்த அறிவிப்புக்கள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவை. 'நாட்டில், சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது, சரியான பாதுகாப்பு இருந்திருந்தால் இவ்வாறு குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றிருக்காது. விரைவில் அவ்வாறான பாதுகாப்பு முறையை நாம் ஏற்படுத்துவோம்' என மகிந்த ராஜபக்ச கூறினார்.

குண்டுத் தாக்குதல்களால் உயிரிழந்த சிலரின் இறுதிக் கிரியைகளில் மகிந்த ராஜபக்சவின் மகன் நாமல் ராஜபக்ச கலந்துகொள்ளச் சென்றபோது, அங்கிருந்த சில பெண்கள், 'அப்பாவை எப்போது வருவார், அவர் இருந்திருந்தால் இப்படி நடந்திருக்காது, அவரை விரைவில் ஆட்சிக்கு வரச்சொல்லுங்கள்' எனக் கதறியிருக்கின்றனர். இது முன்னரே திட்டமிட்டு ஏற்பாடு செய்யப்பட்டது என அப்பகுதி மக்கள் தற்போது தெரிவித்துள்ளனர். மகிந்த சார்பு ஊடகங்கள் இந்தக் காட்சியை விசேடமாக ஒளிபரப்பின.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும் மகிந்த ராஜபக்சவின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ச, 'நான் ஜனாதிபதியாக வந்து ஒட்டுமொத்த பயங்கரவாதத்தையும் இல்லாதொழிப்பேன்' எனக் கொக்கரித்தார். மக்களின் வலிகளைப் பற்றி கிஞ்சித்தும் அக்கறையற்று தாங்கள் பதவிக்கு வருவதையே இவர்கள் இலக்காகக் கொண்டிருக்கின்றனர்.

தொடர்ச்சி 24ம் பக்கம்

**இப்படிச் செய்தால் மட்டுமே தமிழினத்தின் முப்பது ஆண்டு காலப் போராட்டத்திற்கும், அதற்கு விலையாகிப்போன நாற்பதாயிரத்திற்கு மேற்பட்ட மாவீரர்களுக்கும் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களுக்கும் நாம் கொடுக்கும் மதிப்பும் மரியாதையும் ஆகும்.**

## மைத்திரி சீனா பயணம்

சிறீலங்கா ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன சீனா செல்லவுள்ளார். பீஜிங்கில் 15ம் திகதி நடைபெறும் நிகழ்வொன்றில் உரையாற்றவுள்ள மைத்ரிபால சிறிசேன, பின்னர் அந்நாட்டின் முக்கிய தலைவர்களை சந்திக்கவுள்ளார். இலங்கையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களையடுத்து சீன முதலீடுகளில் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளதாக விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில் மைத்ரிபால சிறிசேனவின் இந்தப் பயணம் முக்கியத்துவம் பெறுகின்றது.

## இலங்கையர்களை திருப்பி அனுப்பிய பிரான்ஸ்!

பிரான்சுக்குச் சொந்தமான இந்தியப் பெருங்கடலில் உள்ள ரியூனியன் தீவில் அடைக்கலம் தேடிய 60



இலங்கையர்கள் கடந்த 29ம் திகதி சிறப்பு விமானம் மூலம், கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். 120 இலங்கையர்கள் மீன்பிடிப் படகு மூலம் கடந்த ஏப்ரல் 13ம் திகதி, ரியூனியன் தீவைச் சென்றடைந்தனர். இவர்கள், 4000 கிலோ மீற்றர் பயணத்



துக்கு, 2350 தொடக்கம், 5580 வரையான ஈரோக்களை ஒவ்வொருவரும் செலுத்தியிருந்தனர். மீன்பிடிப் படகின் மாலுமிகளான, இந்தோனேசியர்கள் மூவரும், சட்டவிரோத குடியேற்றத்துக்கு உதவியதாக குற்றம்சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையிலேயே, 60 இலங்கையர்கள் விமானம் மூலம் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டனர். 2018 மார்ச் தொடக்கம், 273 இலங்கையர்கள் ரியூனியன் தீவில் அடைக்கலம் கோரியிருந்தனர். அவர்களில் 130 பேர் இன்னமும் அங்கு தங்கியுள்ளனர். அவர்கள் புகலிடக் கோரிக்கை தொடர்பாக, பிரான்சின் அகதிகள் மற்றும் நாடற்றவர்களின் பாதுகாப்புக்கான பணியகத்தின் பதிலுக்காக காத்திருக்கின்றனர். ஏனையவர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.



## மூவர் உயிரிழப்பு சாரதிக்கு கடூழியச்சிறை

ஆபத்தான முறையில் வாகனத்தைச் செலுத்தி சிறுமி உள்ளிட்ட மூவரின் உயிரிழப்புக்கு காரணமாக விருந்த வான் சாரதிக்கு கடுமையான தண்டனை வழங்கி யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் தீர்ப்பளித்தார். விபத்தை ஏற்படுத்தக் காரணமாக இருந்து மூவரின் உயிரிழப்பை ஏற்படுத்திய குற்றவாளிக்கு 2 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை வழங்கப்படுகிறது. அத்துடன், விபத்தில் உயிரிழந்த சிறுமி மற்றும் அவரது பாட்டனாரின் குடும்பத்துக்கு எதிரி 5 இலட்சம் ரூபா இழப்பீட்டை வழங்க வேண்டும். அதனை வழங்கத் தவறின் ஒரு வருட சிறைத் தண்டனையை எதிரி அனுபவிக்க வேண்டும். உயிரிழந்த முச்சக்கர வண்டிச் சாரதிக்கு 3 இலட்சம் ரூபா பணத்தை எதிரி இழப்பீடாக வழங்கவேண்டும். அதனைச் செலுத்தாவிடின் ஒரு வருட சிறைத் தண்டனையை எதிரி அனுபவிக்க நேரிடும். மேலும் எதிரியின் சாரதி அனுமதிப் பத்திரத்தை நிரந்தரமாகத் தடை செய்யும் ஆணை போக்குவரத்துத் திணைக்களத்துக்கு நீதிமன்று வழங்குகிறது என்று நீதிவான் தீர்ப்பளித்தார்.

## இனப்படுகொலை இராணுவத்திலிருந்து விலகும் படையினர் அதிகரிப்பு!

பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட நிலையில் சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தில் இருந்து விலகும் படையினரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனை இராணுவ ஊடகம் தெரிவித்துள்ளது. சிறீலங்காப் பாதுகாப்பு அமைச்சு மற்றும் இராணுவ தளபதியின் பரிந்துரைக்கமைய முப்படைகளின் முனைஞரும் பிரதானியும் மற்றும் பாதுகாப்பு அமைச்சருமான ஜனாதிபதி இராணுவ சேவையில் இருந்து விலகிய அனைத்து இராணுவத்திரையும் இராணுவ சேவையில் இருந்து உத்தியோகபூர்வமான விலகலை பெற்றுக் கொள்வதற்கான பொதுமன்னிப்பு காலவரையறை 22.04.2019 தொடக்கம் 10.05.2019 வரை நான்கு நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்கியபின்னர் இதுவரைக்கும் கடந்த நான்கு ஆண்டுகளில் விலகிய 2 அதிகாரிகள் உட்பட 2882 படையினர் இராணுவத்தில் இருந்து விலகுவதற்கான விருப்பத்தினை தெரிவித்துள்ளனர்.




# தமிழ் இனப்படுகொலை

# பத்தாண்டு நிறைவில் மீண்டும் படுகொலை




2009 ஆம் ஆண்டில் உலகின் மிகப் பெரிய இனப்படுகொலை தமிழீழத்தில் அரங்கேறியது. இந்திய அரசும் உலக நாடுகளும் வேடிக்கை பார்க்க தமிழ் இனப்படுகொலையை சிறீலங்கா அரசு நடத்தியது. ஒன்றரை இலட்சம் தமிழர்களை கொன்று குவித்து 2009 மே 18 ஆம் நாளில் தனது போரை நிறைவு செய்வதாக அறிவித்தது சிறீலங்கா அரசு. இந்த இனப்படுகொலையை தொடர்ந்து தமிழர்களின் அடையாளங்கள் அழிக்கப்பட்டு, அவர்களின் நிலங்கள் பறிக்கப்பட்டு, உள்நாட்டிலேயே அகதிகளாக, கைதிகளாக மாற்றப்பட்டனர் தமிழர்கள்.

இந்த நாளை சிறீலங்கா அரசு தமிழர்களை கொன்று வெற்றி வாகை சூடிய நாளாக ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக கொண்டாடுகிறது. ஆனால் தமிழர்கள் இந்த நாளை சர்வதேச இனப்படுகொலை நாளாக ஆண்டு தோறும் அனுசரித்து, தமிழர்களின் கறுப்பு தினமாக உலகத் தமிழர்களால் கருதப்படுகிறது. அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர்கள் மே 18 ஆம் நாளில் மாபெரும் நினைவேந்தல் நிகழ்சிகளை நடத்துகின்றனர். இந்த மே 18ம் நாள் தமிழர் நெஞ்சங்களில் ஆறாத ரணமாக பதிவாகி உள்ளது என்றால் அது மிகையல்ல.

தமிழ் மக்களது உரிமைப் போராட்டத்திற்கு எதிராக இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்றதும் இடம்பெறுவதும் இனப்படுகொலைதான். போர்க்குற்றங்களை வலியுறுத்தும் மேற்குலகத் தரப்புக்கள் இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்டது மனித நேயத்திற்கு எதிரான குற்றம் என்பதனை வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றனரே தவிர, அதற்கு அப்பால் நடைபெற்றது ஓர் இனப்படுகொலை (Genocide) என வலியுறுத்துவதை இயலுமான வரையில் தவிர்க்கவே முற்படுகின்றனர்.

இனப்படுகொலை என்பதனை ஏற்றுக் கொள்வதன் உச்ச கட்டம், தமிழ்த் தேசத்தை சிங்களத் தேசத்திடம் இருந்து காக்கும் முகமாக தனிநாட்டினை உருவாக்குவதே ஆகும். இந்த பாரதூரமான அரசியல் விளைவுகளைத் தவிர்த்துக் கொள்வதற்காகவும் போர்க் குற்றங்களை வலியுறுத்துகின்ற தரப்புக்கள் இனப் படுகொலையே நடைபெற்றது என்ற உண்மையை எந்தளவு தூரம் தவிர்க்க முடியுமோ அந்தளவிற்குத் தவிர்த்தே வருகின்றனர்.

பொஸ்னியாவில் 1995 இல் ஏழாயிரம் பேர் படுகொலை செய்யப்பட்டதனைத் தான் இனப்படுகொலை என 2007 ஆம் ஆண்டு கேக்கிலுள்ள சர்வதேச நீதிமன்றம் (International Court of Justice) சுட்டிக்காட்டியிருந்தது. இச் சுட்டிக்காட்டலுக்காக பொஸ்னியாவில் ஓர் இனப்படுகொலை நடந்தது என வாதாடிய சட்டத்தரணி பேராசிரியர் பிரான்சிஸ் அன்ரனி பொயெல் (Prof. Francis. Anthony Boyle) இலங்கையில் தமிழ்த் தேசத்திற்கு எதிராக நடைபெற்றுக்கொண்டிருபது ஓர் இனப்படுகொலை எனக் கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்டதாக சர்வதேசம் ஏற்றுக்கொண்ட தொகையுடன் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களின் எண்ணிக்கையினை மட்டுப்படுத்தி விடமுடியாது. ஏனெனில், முள்ளிவாய்க்கால் யுத்தத்தில் சர்வதேசம் ஏற்றுக்கொள்ளும் எண்ணிக்கையினைக் காட்டிலும் அதிகமானோரே படுகொலை செய்யப்பட்டனர் என்பதே உண்மை. இத்துடன் காலாகாலமாக போர் மற்றும் வன்முறைகள் ஊடாக எமது மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டே வருகின்றனர் என்பது கவனிக்கத்தக்கது.

கடந்த 21.04.2019 இடம்பெற்ற இசுலாமிய பயங்கரவாத அமைப்பு மேற்கொண்ட தாக்குதலின் போதும் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதை நோக்க வேண்டும். சிறீலங்காவில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களை குறிவைத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக எடுத்துக் கொண்டாலும், மட்டக்களப்பு, கொழும்பு, நீர்கொழும்பு ஆகிய இடங்களில் கொல்லப்பட்டவர்களில் அதிகமானவர்கள் தமிழர்கள். நீர்கொழும்பில் பெரும்பான்மை இன மொழி பேசினாலும், அவர்களின் பூர்விகம் தமிழ் அவ்வாறுதான் கொழும்பிலும். எனவே இலங்கைத் தீவில் உள்ள தமிழர்களை படுகொலை செய்வதென்பது மிகவும் இலகுவான விடயமாகவுள்ளது.

2009ஆம் ஆண்டு இடம்பெற்ற படுகொலையில் சர்வதேச நாடுகளுக்கு எவ்வறான வகிபாகங்கள் உள்ளதோ அதேபோன்று உயிர்த்த ஞாயிறு மனித வெடிகுண்டுத் தாக்குதலில் உலகநாடுகளின் பங்குள்ளது. இதற்கு முக்கியமாக தென்னிலங்கையில் எழுந்துள்ள அரசியல் குழப்பத்திற்கு பலிக்கிடாவாக அப்பாவித் தமிழர்கள் பலியெடுக்கப்படுகிறார்கள். சிறீலங்காவில் தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெறவுள்ள தகவல்கள் 15 தடவைக்கு மேல் நாட்டின் அதிபருக்கு வழங்கப்பட்ட

பயங்கரவாத தடைச்சட்டம், அவசரகாலச் சட்டங்கள் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டமை மீண்டும் தாயகப்பகுதியில் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காகத்தான். அன்றி குற்றம் புரிந்தவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்கோ அல்லது குற்றத்தை தடுப்பதற்கோ அல்ல. காரணம். தமிழர்கள் அனுஸ்ட்டிக்கும் மே 18 இனப் படுகொலை தினத்தை தடுத்து நிறுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசாங்கம் அவசர அவசரமாக எடுத்துள்ளது. தமிழர்களை மீண்டும் இன அழிப்பு செய்வதற்காக சிறீலங்கா அரசு திட்டமிட்ட முறையில் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு உலக நாடுகளும் உந்துசக்தியாக செயல்படுவதுதான் இலைமறைகாயாக தென்படும் விடயம்.

செப்டம்பர் 11 தாக்குதல்களின் பின்னர் அமெரிக்க அதிகாரிகள் அபரிமிதமான முறையில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும், அரசியல் அமைப்பு பற்றி கவனம் செலுத்தவில்லை என சிறீலங்காவிற்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் றொபர்ட் ஓ பிளக் தெரிவித்துள்ளார்.

எனினும், வெளியுலகம் அரசியல் ரீதியான உள்நோக்கங்களுடனேயே இனப்படுகொலை இலங்கைத் தீவில் நடைபெறவில்லை எனக் கூறிவருகிறது. ஆயினும், அரசியல் உள்நோக்கங்களுக்கும், சட்டப்பொறிமுறைகளுக்கும் இடையில் வேறுபாடுள்ளது. சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் பார்க்கையில், இலங்கைத் தீவில் இடம்பெற்றது இனப்படுகொலைதான் என்பதற்கான சான்றுகளே அதிகமாக வெளிப்படுகின்றன.

சுயநிர்ணய உரிமையினை அங்கீகரிக்க வேண்டும் எனவும் அதனூடாக மட்டுமே நடைபெற்றதும் நடைபெற்றுவருவதுமான இனப்படுகொலையில் இருந்து தமிழர் தப்புவதற்கு தீர்வு கிடைக்கும் என்பது நிதர்சனம். இதற்கு தமிழ் தரப்புக்களின் ஒற்றுமையும் முக்கியமானதாக உள்ளது.

## ‘கிழக்கில் இருந்து’ எழுவான்

போதிலும் அதில் அவர் கவனம் செலுத்தவில்லை என சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஆனால், விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்த திட்டமிட்டுள்ளதாக சிறிய தகவல்கள் கசிந்தால் கூட பெருமெடுப்பில் படையினர் குவிக்கப்பட்டு தேடுதல்கள் என்ற போர்வையில் இராணுவக் கெடுபிடிகள் மூடுக்கிவிடப்பட்டிருக்கும். தற்போதும், குற்றவாளிகள் அரசாங்கத்துடன் கூடி உலாவுகின்ற வேளையில் எவ்விதமான சட்டநடவடிக்கையும் எடுக்காது விட்டுவிட்டு, தமிழர் தாயகப்பகுதியில் வேண்டத்தகாத செயல்களை அரசாங்கம் செய்துகொண்டிருக்கின்றது.

பரிஸ்தமிழ் www.ParisTamil.Com .கொம்
பிரான்ஸ் செய்திகள்
பிரான்ஸ் நிர்வாக தகவல்கள் — தமிழில்
WWW.PARISTAMIL.COM

# கானல்நீராகிப் போன இராசதந்திரப் போராட்டம்

கலாநிதி சேரமான்

146,679 தமிழ் உயிர்களை சிங்களம் நரபலி கொண்ட முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு நிகழ்ந்தேறி இவ் வாரத்தோடு பத்தாண்டுகள் கடக்கின்றன.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமவுரிமை கோரி இருபத்திரண்டு ஆண்டுகள் அறவழியில் போராடி, அதன் பின்னர் தமிழீழத் தனியரசு கோரி முப்பத்தொன்பது ஆண்டுகள் ஆயுதம் ஏந்திப் போராடிய தமிழீழ மக்களைப் பொறுத்த வரை பத்தாண்டுகள் என்பது சிறியதொரு காலப்பகுதி அல்ல.

அதாவது மலையகத் தமிழர்களின் குடியுரிமையையும், வாக்குரிமையையும் பறித்தெடுத்த குடியுரிமைச் சட்டம் 20.08.1948 அன்று இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து தந்தை செல்வா அவர்களின் தலைமையில் வெடித்த தமிழர்களின் சமவுரிமைக்கான அறவழிப் போராட்டம் 09.04.1958 அன்று பண்டா-செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்படுவதோடும், அதனைத் தொடர்ந்து ஏறத்தாள ஒன்றரை மாதங்கள் கழித்து இனக்கலவரம் என்ற பெயரில் கட்டவிழ்ந்த 1958 வைகாசித் தமிழினப் படுகொலைகளோடும் பத்தாண்டுகளை எட்டியது.

**தமிழீழ மக்களின் ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் இடைநிறுத்தம் பெற்றுப் பத்தாண்டுகளை எட்டியிருக்கும் இன்றைய சூழமைவில் தமிழர்களுக்குத் தேவைப்படுவது தமது உரிமைகளை அறவழியில் வென்றெடுப்பதற்குத் தம்மை அர்ப்பணிக்கக்கூடிய தந்தை செல்வா போன்ற தலைவர்கள் தான்.**



A crowd greeting Chelvanayakam at Colombo airport in 1961, when he was on his way to Britain to be treated for Parkinson's disease. The police escort is because he was officially in detention at the time.

ஆயினும் இன்றைய தமிழ் அரசியல் தலைவர்களோடு ஒப்பிடும் பொழுது தமிழர்களின் உரிமைப் போராட்டத்தைத் தந்தை செல்வா அவர்கள் முன்னின்று வழிநடத்திய விதம் மெச்சத் தக்கது. ஏனென்றால் இன்றைய அரசியல் தலைவர்கள் போல் நாடாளுமன்ற ஆசனங்களை கட்டிப் பிடித்தவாறு அவர் சாய்நாற்காலி அரசியல் செய்யவில்லை. அல்லது இராசதந்திரப் போராட்டம் என்ற பெயரில் சிங்களத்திடம் யாசகம் செய்யும் அரசியலையும் அவர் புரியவில்லை. மாறாக சமவுரிமை கோரித் தமிழர்கள் திறந்த ஒவ்வொரு அறப்போர்க் களங்களையும் அவரே வழிநடத்தினார்.

தனிச்சிங்களச் சட்டத்திற்கு எதிராக 05.06.1956 அன்று காலிமுகத் திடலில் தமிழர்கள் முன்னெடுத்த குந்துமறியல் போராட்டத்திற்குத் தந்தை செல்வா அவர்களே தலைமை வகித்தார். ஆயுதம் தாங்கிய சிங்களக் குண்டர்களை ஏவி விட்டு தமிழ்ப் போராட்டவாதிகளின் மண்டையை பண்டாரநாயக்கா அரசாங்கம் பிளந்த பொழுதுகூட தந்தை செல்வா தளர்ந்து விடவில்லை.

அதன் பின்னரும் தமிழர்களின் உரிமைகளுக்காக இலங்கை நாடாளுமன்றில் அயராது குரல் கொடுத்தார். பண்டா-செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்து தனிச் சிங்களச் சட்டத்தை சிங்கள அரசு அமுல்படுத்திய பொழுது அதற்கு எதிராகக் களத்தில் குதித்த தந்தை செல்வா, சிங்களச் சிறீ பொறிக்கப்பட்ட வாகனங்களின் இலக்கத் தகடுகள் மீது தார்பூசும் போராட்டத்தை தானே முன்னின்று நெறிப்படுத்தினார்.

அதற்காகவும், அரச ஆணையை மீறித் தனது வாகனத்தில் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட இலக்கத் தகடுடன் பயணித்தமைக்காகவும் கைது செய்யப்பட்டு ஒரு வார காலத்திற்குச் சிறையில் அடைக்கப்பட்டார்.

ஆனாலும் அதனையிட்டு தந்தை செல்வா அலட்டிக் கொள்ளவில்லை. அடங்காத் தமிழனாக சிங்கள ஆட்சியாளர்களுக்கு எதிரான ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்குவதற்கான ஏற்பாடுகளில் இறங்கினார். அதற்காக 04.06.1958 அன்று தமிழரசுக் கட்சி தடை செய்யப்பட்டது. தந்தை செல்வாவும், தமிழரசுக் கட்சியின் ஏனைய தலைவர்களும் கைது செய்யப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர்.

1958ஆம் ஆண்டின் இறுதியில் தமிழர்களின் அறவழிப் போராட்டம் பத்து ஆண்டுகளை நிறைவு செய்த பொழுதே தந்தை செல்வாவும், தமிழரசுக் கட்சியின் ஏனைய தலைவர்களும் வீட்டுக் காவலில் இருந்து விடுவிக்கப்பட்டனர். அதன் பின்னர் பண்டாரநாயக்காவின் படுகொலை, டட்லி-செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டமை, சிறீமாவோ-செல்வா இணக்கப்பாடு செல்லாக்காசாகியமை என பல்வேறு வரலாற்று நிகழ்வுகள் கட்டவிழ்ந்த பொழுது காந்தியடிகளின் வழியில் ஒத்துழையாமை இயக்கம் என்ற ஆயுதத்தைத் தந்தை செல்வா அவர்கள் தனது கையில் எடுத்தார்.

அதன்படி தமிழீழ தாயகத்தில் சுயாட்சி அதிகாரம் கொண்ட தமிழ் மாநில அரசை அமைப்பதற்கான மக்கள் இயக்கம் எழுச்சி கொண்டது. 20.02.1961 அன்று வீதிகளில் இறங்கி யாழ் மாவட்ட செயலகத்தை முற்றுகையிட்ட மக்கள், சிங்கள அரச இயந்திரத்தை முடக்கினார்கள். போராட்டவாதிகளை விரட்டியப்பதற்காக சிங்களக் காவல்துறையினர் தடியடிப் பிரயோகம் செய்த பொழுதும், மக்களின் எழுச்சியை அவர்களால் முடக்க இயலவில்லை. தமிழர்களின் ஒத்துழையாமை இயக்கம் தமிழீழம் முழுவதும் பரவியது. தமிழீழ மண்ணில் சிங்கள அரச இயந்திரம் முடங்கிப் போனது.

அதன் உச்ச கட்டமாக 14.04.1961 அன்று தமிழீழ தாயகத்தில் தமிழரசு என்ற தபால் தலை வெளியிடப்பட்டு தமிழீழ தாயகத்திற்கான தனியான அஞ்சல் சேவையும் தொடங்கப்பட்டது. இதனால் வெகுண்டெழுந்த சிறீமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கம், நான்கு நாட்கள் கழித்து 18.04.1961 அன்று அவசர கால நிலைமையைப் பிரகடனம் செய்து தமிழீழ மக்கள் மீது தனது இராணுவ இயந்திரத்தை ஏவி விட்டது. நிராயுதபாணிகளாக அறப்போர் தொடுத்து நின்ற தமிழ்ப் போராட்டவாதிகள் மீது வெறிகொண்டு சிங்கள ஆயுதப் படைகள் தாக்குதல் தொடுத்தன.

தந்தை செல்வா உட்பட பெரும் எண்ணிக்கையிலான தமிழ்ப் போராட்டவாதிகள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். சுயாட்சி அதிகாரம் பொருந்திய தமிழ் மாநில அரசு கோரி அறப்போர் தொடுத்தது தவறு என்று தமது கைப்பட எழுதிக் கொடுத்தவர்கள் மட்டும் விடுதலை செய்யப்பட்டார்கள். இவ்வாறு தமது கைப்பட எழுதிக் கொடுத்தவர்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இன்றைய தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன் முதன்மையானவர்: தனது தனிப்பட்ட சுகபோகங்களுக்காக 1961ஆம் ஆண்டே தமிழர்களின் உரிமையைக் காற்றில் பறக்க விட்டவர்.

ஆனால் தந்தை செல்வா மட்டும் அடிபணிய மறுத்தார். பனாகொட படை முகாமில் ஏனைய போராட்டவாதிகளுடன் சிறை வைக்கப்பட்டார். இறுதியில் அவரது உடல் நலம் குன்றிய நிலையிலேயே அவர் விடுவிக்கப்பட்டார்.

அதன் பின்னர் உடல்நலம் ஓரளவு தேறி, 1964ஆம் ஆண்டில் இன்னுமொரு ஒத்துழையாமை இயக்கத்தை தொடங்குவதற்கான ஆயத்தங்களில் தந்தை செல்வா ஈடுபட்ட பொழுது மீண்டும் அவரது உடல்நலம் குன்றியது.


தொடர்ச்சி 14ம் பக்கம்

## தமிழீழத் தேசியத் தலைவரைப் புகழும் பிக்கு!

தமிழீழத் தேசியத் தலைவரின் செயற்பாடுகள் இன்றிப்போயுள்ளமை தமிழ் மக்கள் கிழக்கு மாகாணத்தை இழக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளமையையும், தமிழ் மக்களுக்கு அவர்களின் சொந்த நிலங்களை இழந்து வருவதையும் பௌத்த பிக்கு ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்ன தேரர் இது குறித்து தெரிவித்துள்ளதாவது, நான் கடந்த முப்பது வருடங்களில் யுத்தத்தை நன்கு அறிந்த பிக்கு, நான் தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் நான் இங்கு இருந்தேன், அப்போது நான் வாகரை, கொக்கட்டிச்சோலை ஆகிய பகுதிகளுக்குச் சென்றுள்ளேன். அந்த பகுதிகளுக்குச் சென்ற நான் விகாரைகளைப் புனரமைப்பதற்காக விடுதலைப் புலிகளிடம் இருந்து பல உதவிகளைப் பெற்றுள்ளேன். அதன்போது என்னை எவரும் விரல் நீட்டி பேசியதில்லை. எனக்கு அச்சுறுத்தல் விடுத்ததில்லை. தற்போது உள்ள அரசியல் தலைமைகள், தமிழ் தலைமைகள் உள்ளிட்ட பலர் என்மீது பல குற்றச்சாட்டுக்களை



முன்வைக்கின்றனர். யுத்த காலத்தில் கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்த இரண்டாயிரம் சிங்கள மற்றும் தமிழ் மக்களுக்கு இதுவரை காணிகள் கிடைக்கவில்லை.

தொடர்ச்சி 10ம் பக்கம்



## தமிழீழத் தேசியத்...

அடிப்படை வசதிகள் எதுவும் இன்றி தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவற்றை தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்காக பலமுறை ஆட்சியாளர்களுடன் விவாதத்தில் ஈடுபட்டேன். அப்போது தமிழ் மக்களின் தலைமைகள் என சொல்லிக் கொள்ளும் தமிழ் அரசியல்வாதிகள் இது இனத்துவேசம் என என்மீது குற்றம் சுமத்தினர். குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பிரதேசமான புனானை பிரதேசத்தில் மூவினங்களைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி கற்பதற்கான திறந்தவெளி பல்கலைக்கழகம் கிழக்கு ஆளுநர் ஹிஸ்புல்லாஹ்வினால் அமைக்கப் படுகின்றது.

தமிழ் மக்களுக்கு சொந்தமான 400 ஏக்கர் நிலப்பரப்பை தமிழ் மக்களுக்கு வழங்காமல் திறந்தவெளி பல்கலைக்கழகம் அமைப்பதற்கு எவ்வாறு அரசாங்கம் அனுமதி கொடுத்தது. விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இருந்திருந்தால்



இந்த புனானையில் கட்டடம் கட்டப் பட்டிருக்குமா? கிழக்கு பறிபோயிருக்குமா? எதிர்காலத்தில் நாட்டில் சுபீட்சம் நிலவுவதற்கு எதிர்காலத்தில் பிரபாகரனே மீண்டும் வரவேண்டும் என எண்ணத் தோன்றுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுஇவ்வாறிருக்க, மதத்தை அடிப்படையாகக்கொண்டு ஆரம்பிக்கப்படவுள்ள மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகத்தை அரசாங்கம் தடுத்து நிறுத்த வேண்டும். அல்லது முழுமையாக அரசாங்கத்துக்கு கீழ் கொண்டுவரப்படவேண்டும் என பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர் மனோஜ் வீரசிங்க தெரிவித்தார்.

அத்துடன் தற்போது மட்டக்களப்பில் இன அடிப்படையிலான பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டு வருகின்றது. இதில் முஸ்லிம்களின் ஷரீஆ கல்வி பீடம் ஒன்று இருக்கின்றது. இதற்கான விரிவுரையாளர்கள் வெளி நாடுகளில் இருந்தே அழைத்துவரப்பட இருக்கின்றது. ஆனால் இதில் ஷரீஆ பீடம் இல்லை என இந்த பல்கலைக்க–ழகத்தின் பொறுப்பாளராக இருக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவிக்கின்றார். ஆனால் மட்டக்களப்பு பல்கலைக் கழகத்தில் அமையப்பெற்றிருக்கும் பீடங்கள் தொடர்பான பரிந்துரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. அதில் ஷரீஆ பீடமும் இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.




# சாம்பலில் இருந்து உயிர்த்தெழ வேண்டிய காலம்...




வணக்கம் குஞ்சுகள்.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நடந்து பத்து ஆண்டுகள் எட்டியிருக்கிற நிலையில் இன்றைக்கு எல்லோருக்குமே இருக்கிற கேள்வி இந்தப் பத்து வருசத்தில் நாங்கள் எதைச் சாதிச்சிருக்கிறம் என்பது தான்.

உண்மை தான் பிள்ளையள்.

எல்லா நாடுகளிலும் ஆயுதப் போராட்டங்கள் வெற்றி பெறுகிறதில்லை தான். ஆனால் அதற்காக போராடும் இனங்கள் ஓய்ந்து போகிறது கிடையாது. ஏதோ ஒரு விதத்தில் தங்கடை உரிமைகளை வென்றெடுப்பதற்காக அந்த மக்கள் போராடிக் கொண்டு தான் இருப்பீனம்.

உதாரணத்திற்கு குர்திஸ்தான் மக்களை எடுத்துக் கொள்ளுவம் பிள்ளையள். இந்த வல்லரசு நாடுகளால் தொடர்ந்தும் ஏமாற்றப் பட்டுக் கொண்டிருக்கிற ஒரு இனம் இந்தக் குர்திஸ் இனம். இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் பிரிட்டனும், பிரான்சும், அமெரிக்காவும் மத்திய கிழக்கில் ஒற்றாமான் சாம்ராச்சியத்தை விழுத்துவதற்கு உறுதுணையாக நின்ற விழுத்துறதுக்கு நீங்கள் உதவி செய்தால் உங்களுக்குத் தனிநாடு பெற்றுத் தாறம்' என்பது தான். அப்படியே குர்திஸ் மக்களும் செய்தீனம். ஈராக்கின்ரை வடக்கில் குர்திஸ் மக்கள் வாழும் மாநிலம் ஒரு சுயாட்சிப் பிராந்தியமாக மாறிச்சுது.

பிறகு உந்த பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்று சொல்லி திரும்பவும் 2003ஆம் ஆண்டு சதாம் உசேனுக்கு எதிராக அமெரிக்கா போர் தொடுக்கேக்குள்ளை கூட களத்தில் நின்று போராடினது குர்திஸ் மக்கள் தான். அதுக்குப் பிறகாவது தங்களுக்கு தனிநாடு கிடைக்கும் என்று குர்திஸ் மக்கள் நினைச்ச போது, திரும்பவும் குர்திஸ் மக்களை அமெரிக்காவும் மற்ற மேற்குலக வல்லரசுகளும் நட்டாற்றில் கைவிட்டவை.

அப்படியிருந்தும் சும்மா இருக்காமல் தங்கடை படை பலத்தையும், பொருளாதார பலத்தையும், அரசியல் பலத்தையும் தக்க மேந்திப் போராடியது குர்திஸ் மக்கள் தான். அந்த நேரத்தில் சிரியாவில் உள்ள குர்திஸ் மக்களுக்கு சுயாட்சி பெற்றுத் தருகிறம் என்றும், ஈராக்கில் உள்ள குர்திஸ் மக்களுக்கு தனிநாடு பெற்றுத் தருகிறம் என்றும் வாக்குறுதிகளை அள்ளி வீசின அமெரிக்காவும் மற்ற நாடுகளும், ஐ.எஸ்.ஐ.எஸ் என்ற கும்பல் வாலைச் சுருட்டிக் கொண்டு சிரியாவை விட்டும், ஈராக்கை விட்டும் ஓடத் தொடங்கினதும் அப்படியே வாக்குறுதிகளை பறக்க விட்டவை.





மக்கள் தான் உந்த குர்திஸ் மக்கள். உந்த மேற்குலக வல்லரசுகளுக்காக குருதி சிந்தித் தாங்கள் போராடினால், நிச்சயம் ஒற்றாமான் சாம்ராச்சியத்திடம் இருந்து தங்களுக்கு விடுதலை கிடைக்கும் என்று தான் அந்தக் காலகட்டத்தில் குர்திஸ் மக்கள் நம்பினவையள்.

ஆனால் கடைசியல் என்ன நடந்தது?

குர்திஸ்தான் மக்களுக்குத் தனிநாடு எடுத்து தருகிறம் என்று சொல்லி அவர்களைப் போராட வைச்ச உந்த மேற்குலக வல்லரசுகள், கடைசியில் குர்திஸ்தானை நாலு துண்டாகப் பிரிச்சு, ஒரு துண்டை ஈராக்கிட்டையும், இன்னொரு துண்டை ஈரானிட்டையும், மற்றொரு துண்டை சிரியாவிட்டையும், பெரியதொரு துண்டை துருக்கியிட்டையும் கொடுத்தவையள்.

அதுக்காக அந்த மக்கள் சளைச்சுப் போகேல்லை. அடக்குமுறைக்கு எதிராகத் தொடர்ந்து போராடினவையள். எப்ப எல்லாம் தங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைச்சுதோ அப்ப எல்லாம் களத்தில் இறங்கிப் போராடினவை.

1991ஆம் ஆண்டு வளைகுடா யுத்தத்தில் சதாம் உசேனின் படையளை குவைத்தை விட்டு அமெரிக்காவும் நேச நாடுகளும் விரட்டியடித்த உடனே ஈராக்கில் இருந்த குர்திஸ் மக்கள் கிளர்ந்தெழுந்து போராடினவையள்.

அதுக்காக பல ஆயிரக்கணக்கான குர்திஸ் மக்களை சதாம் உசேனின்ரை இராணுவம் கொன்று குவிச்சது. ஆனாலும் அந்த மக்கள் தளரவில்லை.

அந்த நேரத்தில் அந்த மக்களுக்கு அமெரிக்காவும், மற்ற நேச நாடுகளும் கொடுத்த வாக்குறுதி, 'சதாமை ஆட்சியில் இருந்து வைச்சு தேசப் பற்றோடு தான் குர்திஸ் மக்கள் இருந்தவையள். அப்படி குர்திஸ் மக்கள் இருந்திருக்காவிட்டால், உந்த ஐ.எஸ்.ஐ.எஸ் என்கிற மதவெறி பிடிச்சு ஜிகாத் கொலைவெறிக் கும்பல் முழுக் குர்திஸ் மக்களையும் அழிச்சிருக்கும். தங்கடை இராணுவ பலத்தைப் பயன்படுத்தி குர்திஸ் மக்கள் போராடினவையள். ஈராக்கின்ரை பல பகுதிகளை ஐ.எஸ்.ஐ.எஸ் என்கிற கொலைவெறிக் கும்பலிட்டை இருந்து மீட்டெடுத்தவையள்.

சிரியாவிலையும் உது தான் நடந்தது. உந்த ஐ.எஸ்.ஐ.எஸ் என்கிற கொலைவெறிக் கும்பல் சிரியாவுக்குள் உள்ள குர்திஸ் பகுதிகளுக்குள்ளை நுழைஞ்ச போது, அதுக்கு எதிராக ஆயுத

**சிரியாவில் உள்ள குர்திஸ் மக்களுக்கு சுயாட்சி பெற்றுத் தருகிறம் என்றும், ஈராக்கில் உள்ள குர்திஸ் மக்களுக்கு தனிநாடு பெற்றுத் தருகிறம் என்றும் வாக்குறுதிகளை அள்ளி வீசின அமெரிக்காவும் மற்ற நாடுகளும், ஐ.எஸ்.ஐ.எஸ் என்ற கும்பல் வாலைச் சுருட்டிக் கொண்டு சிரியாவை விட்டும், ஈராக்கை விட்டும் ஓடத் தொடங்கினதும் அப்படியே வாக்குறுதிகளை பறக்க விட்டவை.**

அதுக்காக குர்திஸ் மக்கள் தளர்ந்து போகவில்லை பாருங்கோ.

தான் பின்னின வலை ஒவ்வொரு தடவை சிதைக்கப்பட்டதும், திரும்ப திரும்பத் தளராமல் புதிய வலையைப் பின்னும் சிலந்தி போலத் தான் இன்றைக்கும் குர்திஸ் மக்கள் போராடிக் கொண்டு இருக்கீனம். இன்றைக்கு இல்லையென்றாலும் என்றைக்கோ ஒரு நாள் தங்களுக்கு குர்திஸ்தான் என்றொரு தனிநாடு அமையும் என்று அந்த மக்கள் உறுதியாக நம்புகீனம்.

இது தான் பிள்ளையள் நாங்கள் கற்றுக் கொள்ள வேண்டிய படிப்பினை.

இந்த இடத்தில் இன்னொரு விடயத்தையும் நான் சொல்ல வேண்டும் பிள்ளையள். தமிழீழத்தில் எங்கடை பிள்ளையள்... அது தான் எங்கடை புலிச்சேனை வீரம் செறிந்த போராட்டத்தை நடத்தேக்குள்ளை குர்திஸ் மக்கள் முன்னுதாரணமாக எடுத்துக் கொண்டது தமிழர்களைத் தான்.

தனிச்சு நின்று, எந்த நாட்டின்ரை உதவியும் இல்லாமல் தனிநாடு அமைக்கிறதுக்காகப் போராடுகிற எங்கடை இனத்தைப் பார்த்து அன்றைக்கு குர்திஸ் மக்கள் வியந்து போனவையள். எங்கடை பெண் போராளிகளை முன்னுதாரணமாகக் கொண்டு தான் குர்திஸ்தானில் பெண் போராளிகள் உருவாகினார்கள் என்றால் பாருங்கோவன் பிள்ளையள்.

முள்ளிவாய்க்காலிலை எங்கடை ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட அந்த நாட்களில், அதுவும் சரியாகக் குறிப்பிடுகிதென்றால்

தொடர்ச்சி 23ம் பக்கம்

அலாவுதீனும் அற்புத விளக்கும் என்ற கதையை நாம் எல்லோரும் கேள்விப்பட்டிருக்கின்றோம். அந்தற அற்புத விளக்கை உரசும்போது பணிவுடன் தோன்றும் பூதமானது அலாவுதீன் இடும் கட்டளைகள் அனைத்தையும் செய்து முடித்துவிடும். இதுதான் அலாவுதீனின் அந்த அற்புத விளக்குக் கதை.

ஆனால், இலங்கைத் தீவில் கதை மாறி விட்டது. இனவெறி பிடித்த சிங்கள அரசு, தமிழ் - முஸ்லீம் உறவைச் சீர்குலைத்து இசுலாமிய அடிப்படைவாத உருவேற்றி




# சிங்களம் உருவேற்றிய இஸ்லாமிய பூதம்

**ரஞ்சித்**
**முன்னாள் தமிழீழ காவற்துறை அதிகாரி**

தனது சிங்களப் பேரினவாதத்திற்கு சேவகம் செய்ய வைத்தது. ஆனால் காட்சி மாறிய ஒரு கட்டத்தில் இலங்கை இசுலாமிய பூதம் அனைத்துலக இசுலாமிய பூதத்துடன் கை கோர்த்து தன்னை உருவேற்றி விட்டவனின் சொல்லை ஏற்காமல்போன கதைதான் இப்போது நடந்துள்ளது.

### ஈழ யுத்தமும் இசுலாமிய அடிப்படை வாதமும்

1970களில் ஈழப் போராட்டம் ஆரம்ப கட்டத்தில் இருந்தபோது, இலங்கை வாழ் முஸ்லீம்கள் தமிழ் மக்கள் மீது பரிவுடன் காணப்பட்டனர். ஏனெனில் தாங்களும் ஒரு சிறுபான்மை இனம் என்ற எச்சரிக்கை உணர்வு மிகுந்து காணப்பட்டிருந்தது. அதைவிட இலங்கை வாழ் முஸ்லீம் மக்களுக்கு ஒரு தொடர்ச்சியான நிலப்பரப்பு இல்லாமல் தீவு முழுவதும் சிதறிக் காணப்பட்டதாலும், பெருமளவு முஸ்லீம் மக்கள் தமிழ்ப் பிரதேசங்களில் வாழ்ந்து வந்தமையினாலும் இந்தச் சாய்வு ஏற்பட்டிருந்தது.

ஆனால் 1978ம் ஆண்டு அரசியலமைப்பு ஊடாக கொண்டுவரப்பட்ட விகிதாசாரத் தேர்தல் முறைமூலம், அதிகளவு பிரதிநிதித்துவத்தை பெறக்கூடிய சூழ்நிலை ஏற்பட, நிலைமை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திய முஸ்லீம் தலைமைகள், 1981ம் ஆண்டு சிறீலங்கா முஸ்லீம் கொங்கிரசை உருவாக்கினர். தமது தனிப்பட்ட அரசியல் இலாபங்களிற்காக முஸ்லீம் மக்களை தமிழர்களிடம் இருந்து பிரிக்கும் வகையிலான நச்சுக் கருத்துக்களை விதைக்கத் தொடங்கினர். குறிப்பாக தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை கொச்சைப்படுத்தும் செயல்களில் ஈடுபட்டனர்.

உதாரணமாக சர்வதேச ஊடகமொன்றுக்கு செவ்வியளித்த சிறீலங்கா முஸ்லீம் கொங்கிரசின் ஸ்தாபகரும் அதன் தலைவருமாக இருந்த திரு M.H.F.அஷ்ரப் அவர்கள் '**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு கிறிஸ்தவ சார்புடைய, மேற்குலகக் கைக் கூலிகள்**' என்று குறிப்பிட்டிருந்தார். முஸ்லீம் மக்களிடம் பொதுவாகவே இருக்கக் கூடிய மேற்குலக, கிறிஸ்தவ எதிர்ப்புணர்வை தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகத் திருப்பிவிட்ட முஸ்லீம் தலைவர்களின் கள்ளமும் கரவும் மிக்க மனநிலையை இதனூடாக புரிந்து கொள்ள முடியும்.

1985ம் ஆண்டு, இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம் காடையர்களால் தமிழ் மக்கள் பல இடங்களிலும் தாக்கப்பட்டனர்.

இக்காலப் பகுதியில் இலங்கையின் தேசிய பாதுகாப்பு பந்தோபஸ்து அமைச்சராக இருந்த திரு.லலித் வில்லியம் சமரசேகர அத்துலத்முதலி (Lalith William Samarasegara Athulathmudeliயினால் முஸ்லீம் ஊர்காவல் படை உருவாக்கப்பட்டு இசுலாமிய அடிப்படைவாதிகளை ஆயுதமயப்படுத்தினார்.

**இசுலாமிய அடிப்படைவாதிகள் பங்குகொண்ட இனவழிப்பு நடவடிக்கைகளில் அவர்களின் மதவெறியை முத்திரை குத்தும் ஏதோ ஒரு சம்பவம் நடைபெற்றிருக்கும்.**

பரவலாக ஜிகாத் என அறியப்பட்ட இந்த அமைப்பு தனித்தும் சிங்களப் படைகளுடன் இணைந்தும் தமிழர் தாயகத்தில் நடத்திய இளவழிப்பு நடவடிக்கைகள் ஏராளம். அதிலும் இசுலாமிய அடிப்படைவாதிகள் பங்குகொண்ட இனவழிப்பு நடவடிக்கைகளில் அவர்களின் மதவெறியை முத்திரை குத்தும் ஏதோ ஒரு சம்பவம் நடைபெற்றிருக்கும்.

### 01) உடும்பன் குளம் அறுத்துவீசப்பட்ட ஆண்குறிகள்!

19.02.1986ம் நாள் மட்டக்களப்பு மாவட்டம் உடும்பன்குளம் பகுதியில் வயல்வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தமிழ் விவசாயத் தொழிலாளர்களை சுற்றி வளைத்த சிங்களப் படையினரும் இசுலாமிய அடிப்படைவாதிகளும் இணைந்து மேற்கொண்ட இனவழிப்பு நடவடிக்கையில் 1347 பேர் கொல்லப்பட்டனர். பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர். விருத்த சேதனம் செய்யப்படாத தமிழ் ஆண்களின் ஆணுறுப்புகள் அறுவடைக்குப் பயன்படுத்தப்படும் கத்திகளினால் அறுத்து வீசப்பட்டன.

### 02) சேவியர்புரம் தகர்க்கப்பட்ட தேவாலயம்

அம்பாறை மாவட்டம் சேவியர்புரம் என்ற இடத்தில் பழங்குடி இன (குறவர்) மக்கள் வாழ்ந்து வந்தனர். இவர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் எந்தவொரு பகையும் இருந்ததில்லை. அருகில் இருந்த முஸ்லீம் விவசாயிகளின் வயல்களிலேயே தினக்கூலிகளாக தொழில்புரிந்து வந்தனர். 07.08.1990ம் நாள் இவர்களின் கிராமத்தைச் சுற்றிவளைத்த இசுலாமிய அடிப்படைவாதிகள் ஆண், பெண் என அனைவரையும் ஓரிடத்தில் ஒன்று சேர்த்தபின் பாலியல் வல்லுறவு மற்றும் சித்திரவதைகளை மேற்கொண்டனர். இதன் பின்னர்...

தொடர்ச்சி 26ம் பக்கம்

## ஊடகவியலாளர் சிவராமின் நினைவேந்தல்!

சிறீலங்கா இனப்படுகொலையின் ஓர் அங்கமாக செய்திகளை மக்களுக்கு எடுத்துச்சென்ற ஊடகவியலாளர்களும் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களில் மாமனிதர் தராகி







சிவராமும் ஒருவர். படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மாமனிதர் தராகி டி.சிவராமின் 14ம் ஆண்டு நினைவு நாளும், தீவிரவாதத் தாக்குதலில் கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் யாழ்ப்பாணம் நீதிமன்ற கட்டட தொகுதிக்கு அருகில் உள்ள நினைவு தூபியில் கடந்த 30ம் திகதி நடைபெற்றது. படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக பொது சுடர் ஏற்றப்பட்டு, நினைவு தூபிக்கு மலர் மாலை அணிவித்து, படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சிவராமின் திருவுருவ படத்துக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து கடந்த ஈஸ்டர் தினத்தன்று கொழும்பு, நீர்கொழும்பு மற்றும் மட்டக்களப்பு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலை தாக்குதல்களில் கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.



## உலகை உலுக்கிய ஏழு இனப் படுகொலைகள்...

**1.ஆர்மீனிய இனப்படுகொலை (1915 - 1923)**

துருக்கியைச் சேர்ந்த ஓட்டோமன் பேரரசு, முதல் உலகப்போர் தொடங்கும் சமயத்தில் தங்களது இருப்பினைத் தக்கவைத்துக்கொள்ள அந்தப் போரில் ஈடுபட முடிவு செய்தது. 1915 முதல் 1918-ம் ஆண்டு வரை ஓட்டோமன் அரசு, ஆர்



மீனியர்களைக் கொன்றது. 5 முதல் 12 இலட்சம் ஆர்மீனியர்கள் இதில் கொல்லப்பட்டனர். 20ம் நூற்றாண்டில் நடந்த இனப்படுகொலைகளில் ஆர்மீனிய இனப்படுகொலையே, முதல் இனப் படுகொலை என பொப் ஆண்டவர் பிரான்சிஸ் கருத்து தெரிவித்தார்.

**2. யூத இனப்படுகொலை (1939-1945)**

ஹிட்லரால் ஜெர்மனியில் யூதர்கள் திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். இரண்டாம் உலகப்போர் நடந்துகொண்டிருந்த சூழலில் யூதர்கள் தொடர் வண்டிகள்



மூலம் நூற்றுக்கணக்கான மைல்கள் தொலைவில் இருந்த வதை முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். பலர் வழியிலேயே இறந்து போயினர். எஞ்சியோர் நச்சுவாயு அறைகளுள் அடைத்துக் கொல்லப்பட்டனர்.

தொடர்ச்சி 13ம் பக்கம்




# மனிதர்களை அழித்தல் மட்டுமல்ல, மொழி




































# யை அழித்தலும் ஓர் இனப்படுகொலைதான்




































தொடர்ச்சி 14ம் பக்கம்




## உலகை உலுக்கிய..

இரண்டு வகையான முகாம்களை நாஜிக்கள் அமைத்தனர். ஒன்று, சாதாரண கைதி முகாம். இதில் கைதிகளை அடிமை போல் நடத்தி, அவர்களை கசக்கிப் பிழிந்து வேலை வாங்குவார்கள். தேவையில்லாமல் கொல்லமாட்டார்கள். இன்னொன்று வதை முகாம்கள், இவை யூதர்களை கொல்வதற்காகவே உருவாக்கப்பட்டது. 6 மில்லியன் யூதர்கள் திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்டார்கள்.

### 3. கம்போடிய இனப்படுகொலை (1975-1979)

1953ம் ஆண்டு கம்போடியா பிரான்சிடமிருந்து விடுதலை அடைந்தது. சிஹானக் கம்போடியா அரசனாகப் பொறுப்பேற்றார். கம்போடியன் கொம்யூ-னிஸ்ட் கட்சியின் (கிமர் ரூஜ்) தலைவர் ஆன பொல் பொட் 1976ல் பிரதமராகப் பதவியேற்றார். வணிகம், மருத்துவம், தொழில்துறை எனப் பல துறை



கள் எல்லாம் நிறுத்தப்பட்டன. உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற வேண்டும் என்று எண்ணினார் பொல் பொட். அனைவரும் விவசாயம் செய்ய வேண்டும் எனக் கட்டாயப் படுத்தப்பட்டனர். மக்களின் சொத்துக்கள் அனைத்தும் பொதுவுடைமை ஆக்கப்பட்டு, அரசால் கைப்பற்றப்பட்டது. ஆட்சியாளர்களை எதிர்த்து போராடிய மக்களைச் சிறையிலடைத்து சித்திரவதை செய்தும் பசி, பட்டினி மற்றும் சட்டவிரோதமான முறையிலும் படுகொலைகள் அரங்கேற்றப்பட்டன. சுமார் 20 இலட்சம் மக்கள் இம்முறையில் செத்து மடிந்தனர்.

### 4. ருவாண்டா இனப்படுகொலை (1994)

ஜேர்மனியின் கொலனியாதிக்கத்தின்கீழ் இருந்த நாடு ருவாண்டா, புருண்டி. இங்கு டுட்சி, ஹூட்டு என்ற இரண்டு இன குழுக்கள் வாழ்ந்து வந்தனர். பல நூற்றாண்டுகளாக டுட்சி இன மக்கள் ஆண்டுவர,

தொடர்ச்சி 14ம் பக்கம்



## உலகை உலுக்கிய..

பல நூற்றாண்டு காத்திருப்புக்குப் பிறகு, 1972ல் புருண்டியில் ஹ?ட்டுகளின் புரட்சி தொடங்கியது. 1994 ஏப்ரல் 7 அன்று ஹூட்டு இன மக்கள், டுட்சி இனத்தவரை கொல்லத் திட்டமிட்டனர். பெரியவர், சிறியவர் எனப் பாரபட்சம்



இல்லாமல் அனைவரையும் கொன்று குவித்தனர் ஹ?ட்டு இனத்தினர். மிகக் குறைந்த நாட்களில் உலகில் நடந்த மிகப்பெரும் படுகொலை இது. சுமார் 8 இலட்சம் மக்கள் கொல்லப்பட்டார்கள். பெருந் தொகையானோர் ஊனமாக்கப் பட்டோர். பெரும் உடைமை அழிவும் நிகழ்ந்தது. பல இலட்சக் கணக்கானோர் அகதிகளாக அண்டை நாடுகளில் தஞ்சமடைந் தனர்.

**5. பொஸ்னியா இனப்படுகொலை (1992-1995)**

யூகோஸ்லாவியாவிடமிருந்து பிரிந்த நாடு பொஸ்னியா. புதிதாக உருவாக்கப்பட்ட தேசம் என்பதால் நாடு முழுவதும் குழப்பம் ஏற்பட்டது. பொஸ்னியர்கள், சேர்பியர்கள், குரேஷி



யர்கள் என மூன்று வகையான இன மக்கள் வாழ்ந்து வந்தனர். குரோஷிய அதிபருக்கும், பொஸ்னிய அதிபருக்கும் ஓர் ஒப்பந்தத்தில் முரண்பாடு ஏற்பட, அங்கிருந்து தொடங்கியது இப் பிரச்சனை. பொஸ்னியா மீது 1993ம் ஆண்டில் படுகொலையைத் தொடங்கினர். 1992-1995 காலகட்டத்தில் இரண்டு இலட்சம் பேர் கொல்லப்பட்டனர். நான்கு இலட்சம் பேர் காணாமல் போனார்கள்.

தொடர்ச்சி 15ம் பக்கம்




# கானல்நீராகிப் போன...

அதன் பின்னர் ஆறு ஆண்டுகள் கழித்து 1970ஆம் ஆண்டில் பொன்.சிவகுமாரன் போன்ற போர்க்குணம் மிக்க இளைஞர்களைக் கொண்ட தமிழ் மாணவர் பேரவை என்ற அமைப்புத் தோற்றம் பெற்றமையும், தனது பதினைந்தாவது வயதில் அவ்வமைப்பில் இணைந்து செயலாற்ற முற்பட்டு, அதற்கான வாய்ப்புக்கள் மறுக்கப்பட்ட நிலையில் 1972ஆம் ஆண்டில் புதிய தமிழ்ப் புலிகள் என்ற ஆயுத எதிர்ப்பியத்தைத் தலைவர் பிரபாகரன் உருவாக்கி, பின்நாட்களில் அது தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற மாபெரும் சேனையாகவும், நிழல் அரசாகவும் தோற்றம் பெற்றமை வரலாறு.

'வரலாறு எனது வழிகாட்டி' என்று தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் குறிப்பிடுவார். முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பின் பத்தாம் ஆண்டு நினைவெழுச்சி நாட்களில் நாம் கால் பதிக்கும் இத் தருணத்தில், 1948ஆம் ஆண்டு முதல் 1958ஆம் ஆண்டு வரையான பத்தாண்டு காலப்பகுதியில் தமிழர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு எவ்வாறான முயற்சிகளை தந்தை செல்வா எடுத்தார் என்பதையும், பண்டா–செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டதோடு பத்தாண்டுகளை தமிழர்களின் அறவழிப் போராட்டம் எட்டிய பொழுது, அதனை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் செல்வதற்கு எவ்வாறான மூலோபாயங்களை தந்தை செல்வா அவர்கள் வகுத்துச் செயற்படுத்தினார் என்பதையும் நாம் இங்கு பதிவு செய்வதன் நோக்கம், முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு நிகழ்ந்தேறிய கடந்த பத்தாண்டுகளில் இராசதந்திரப் போராட்டம் என்ற பெயரில் நாம் எதனை சாதித்தோம் என்பதை சுயவிசாரணைக்கு உட்படுத்துவதே ஆகும்.

தமிழீழ தாயகத்தில் சுயாட்சி அதிகாரம் பொருந்திய தமிழ் மாநில அரசை உருவாக்குவதற்கு தந்தை செல்வா உருவாக்கிய மக்கள் மயப்படுத்தப்பட்ட ஒத்துழையாமை இயக்கம் ஆயுத முனையில் நசுக்கப்பட்டமை அன்று தமிழர்களுக்கு ஒரு செய்தியை இடித்துரைத்தது.

வெறுமனவே அறவழியில் போராடுவதன் மூலம் தமது உரிமைகளைத் தமிழர்கள் வென்றெடுக்க முடியாது என்பது தான் அந்தச் செய்தி. இது தான் இன்னொரு பத்தாண்டுகள் கழித்துத் தமிழீழ மண்ணில் போர்க்குணம் மிக்க இளைய தலைமுறையொன்று எழுச்சி கொள்வதற்கும், பின்நாட்களில் அந்தத் தலைமுறைக்கு பிரபாகரன் என்ற விடுதலைத் தீப்பொறி தலைமை வகித்து தமிழீழத் தனியரசை நிறுவுவதற்கான தேச சுதந்திரப் போராட்டத்தை ஆயுத வழியில் முன்னகர்த்துவதற்கும் வழிகோலியது.

முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு நிகழ்ந்தேறிய கடந்த பத்தாண்டுகளில் இராசதந்திரப் போராட்டம் என்ற பெயரில் புலம்பெயர் தமிழ்த்தேசிய செயற்பாட்டாளர்கள் உருப்படியாக சாதித்தது, தமிழீழ தேச சுதந்திரப் போராட்ட அசைவியக்கத்தை தக்க வைத்ததும், தமிழீழ விடுதலைப் புலிகள் முன்னெடுத்த ஆயுதப் போராட்டத்தின் ஊடாக அனைத்துலக மயப்படுத்தப்பட்ட தமிழர்களின் தேசியப் பிரச்சினையைத் தொடர்ந்தும் அனைத்துலக ரீதியில் பேசுபொருளாக உயிர்ப்புடன் வைத்திருப்பதும் தான்.

மறுபுறத்தில் இராசதந்திரப் போராட்டம் என்ற பெயரில் தமிழீழ தாயகத்தில் உள்ள சனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட தமிழர்களின் பிரதிநிதிகள் சாதித்தது, நாடாளுமன்ற அரசியல் தமிழர்களின் உரிமைகளை வென்றெடுக்கும் விடயத்தில் ஓர் கானல்நீர் என்பதை நிரூபித்தது மட்டுமே.

இந்தியா, அமெரிக்கா போன்ற வல்லாதிக்க சக்திகளின் ஆசீர்வாதத்துடன், நாடாளுமன்ற அரசியல் ஊடாக தமிழ் மக்களின் இறைமையை நிலைநாட்டுவதற்கான மாநில சுயாட்சியை வென்றெடுக்கப் போவதாகப் பத்தாண்டுகளுக்கு முன்னர் இரா.சம்பந்தரின் தலைமையிலான தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு மேற்கொண்ட சூளுரை இன்று அர்த்தமிழந்துள்ளது.

மறுபுறத்தில் ஐ.நா. மன்றின் ஊடாகத் சிறீலங்கா அரசை பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றில் முன்னிறுத்தித் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட இனவழிப்பிற்கான பரிகார நீதியாகத் தமிழீழத் தனியரசை வென்றெடுக்கப் போவதாகக் கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு களமிறங்கிய புலம்பெயர் தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள் பலர் இன்று தம்மை மேற்குலகம் ஏமாற்றிவிட்டது என்ற விரக்தியில் செய்வதறியாது திணறி நிற்கின்றனர்.

ஒரு விதத்தில் 1948ஆம் ஆண்டு தொடங்கிய தமிழர்களின் அறவழிப் போராட்டம், பண்டா–செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டதோடு பத்தாண்டுகளை நிறைவு செய்த பொழுது எவ்வாறான நிலையில் நின்றதோ, அவ்வாறான நிலையிலேயே இன்று தமிழினம் நிற்கின்றது. இவ் வரலாற்றுக் கட்டத்தில் தான் தந்தை செல்வா போன்று அடுத்த கட்ட மூலோபாயங்களை வகுக்க வேண்டியவர்களாக நாம் இருக்கின்றோம். அன்று தந்தை செல்வா மக்களை அணிதிரட்டி வீதிகளில் இறங்கி அறப்போர் புரிந்தார். அதற்காக அவர் பல தடவைகள் சிறையும் சென்றார்.

தமிழீழ மக்களின் ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் இடைநிறுத்தம் பெற்றுப் பத்தாண்டுகளை எட்டியிருக்கும் இன்றைய சூழமைவில் தமிழர்களுக்குத் தேவைப்படுவது தமது உரிமைகளை அறவழியில் வென்றெடுப்பதற்குத் தம்மை அர்ப்பணிக்கக்கூடிய தந்தை செல்வா போன்ற தலைவர்கள் தான். அமிர்தலிங்கம் போன்று தமது சுக போகங்களுக்காகத் தமிழர்களின் உரிமைகளை காற்றில் பறக்கவிடும் தலைவர்கள் அல்ல.

இவ்வாறான நிலை இன்னுமொரு பத்தாண்டுகளுக்குத் தொடருமேயானால், தமிழீழ மண்ணில் போர்க்குணம் மிக்க இளைய தலைமுறை எழுச்சி கொள்வதையும், அமிர்தலிங்கத்திற்கும், அவர் போன்ற சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளுக்கும் நிகழ்ந்தது இன்றைய தமிழ்த் தலைமைகளுக்கு எதிர்காலத்தில் நிகழ்வதையும் எவராலுமே தடுத்து நிறுத்த முடியாது.

---

## ஒப்ரேசன் டமிள் எட்ஜ்

அடுத்த இதழில் தொடரும்...

# தமிழினம் அழிக்கப்பட்ட போதும் அறப்போர் புரிந்தவர் தலைவர்

இலங்கைத் தீவில் முஸ்லிம் பயங்கரவாதிகள் தேவாலயங்களிலும் விடுதிகளிலும் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து சிங்களப் படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. பாடசாலைகளில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. காவல்துறையினர், விசேட அதிரடிப் படையினருடன் பெற்றோரும் பாடசாலை வாயிலில் நின்று மாணவர்களின் புத்தகப் பைகளைச் சோதனையிட்டு வருகின்றனர்.



1995 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 22 ஆம் திகதி வட தமிழீழத்தில் நாகர்கோயில் மகா வித்தியாலயத்தின் மீது சிறிலங்கா விமானப் படையினர் நடத்திய கொடூரமான குண்டுவீச்சுத் தாக்குதலில் 39 மாணவர்கள் கொல்லப்பட்டனர். 200 இற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இந்தச் செய்தி ஊடகங்கள் வாயிலாக வெளியாகியபோது சிங்களதேசம் பெரும் பதட்டத்துக்கும் அச்சத்துக்கும் உள்ளானது. புலிகள் இதற்கு பழிவாங்குவார்கள், தென்னிலங்கைப் பாடசாலைகளை அவர்கள் தாக்குவார்கள் என்ற வதந்திகள் பரவியதால் பாடசாலைகளை அரசு தற்காலிகமாக மூடியது.

இச்சந்தர்ப்பத்தில் புலிகளின் தலைமையைத் தொடர்பு கொண்ட ஊடகவியலாளர்கள், சம்பவம் தொடர்பாக கேட்டனர். தென்னிலங்கைப் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமை தொடர்பாகவும் வினா எழுப்பினர்.

இதன்போது, எந்தச் சந்தர்ப்பத்திலும் அப்பாவி பாடசாலை மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படமாட்டாது என புலிகளின் தலைமை உறுதியளித்தது. தனது பாதுகாப்பு ஏற்பாடுகளில்கூட நம்பிக்கை வைக்காத சிறீலங்கா அரசு, பிரபாகரன் அறத்தை மீறமாட்டார் என்பதில் நம்பிக்கை வைத்துப் பாடசாலைகளைத் திறந்தது.

இதன் பின்னரும் 2006 ஆம் ஆண்டு ஆதரவற்ற குழந்தைகளின் இல்லமான செஞ்சோலை மீது சிங்களதேசம் கொடூரமான குண்டு வீச்சை நடத்தியது. இதன் மூலம் 61 மாணவிகளைப் படுகொலை செய்தது. 100 இற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இறுதிப் போரின் இக்கட்டான நிலையில்கூட புலிகள் அதற்குப் பதிலாக அப்பாவி சிங்கள மாணவர்களைப் பழிவாங்க நினைக்கவில்லை. முள்ளிவாய்க்காலில் இறுதிச்சமரில் தமிழீழ விடுதலைப் புலிகள் மௌனிக்கப்படும் வரை தேசியத் தலைவர் பிரபாகரன் எந்தப் பாடசாலைகளையும் இலக்குவைக்கக்கூடாது என தளபதிகளுக்கு இறுக்கமான உத்தரவிட்டிருந்தார்.

ஆனால், தற்போது முஸ்லிம் பயங்கரவாதிகளின் தாக்குதல்க



ளுக்கு அஞ்சி சிங்கள தேசம் அனைத்துப் பாடசாலைகளுக்கு முன்பாகவும் தனது படைகளைக் குவித்து வைத்திருக்கின்றது. தமிழீழ தேசியத் தலைவரும் புலிகளும் அறத்தின் அடிப்படையிலேயே போரிட்டனர் என்பதை இப்போதாவது சிங்கள தேசம் உணர்ந்துகொள்ள வேண்டும். உணர்ந்துகொள்ளுமா..?

அமெரிக்க அதிபராக டொனால்ட் டிரம்ப் பதவியேற்றதன் பின்னர் உலக நாடுகளுடனான உறவை அவர் சிதைத்தே வருகின்றார். அருகிலுள்ள மெக்சிக்கோ தொடக்கம் வெனிசுவேலா, ரஷ்யா, சீனா, ஈரான் என நாடுகளுடன் பகையை வளர்த்தபடியே வருகின்றார். இதில் மிகக்கடும் பகை நாடான வடகொரியாவுடன் அவர் கைகுலுக்கியது வரலாற்று மாற்றமாக, அமைதிக்கான நோபல் பரிசே டொனால்ட் டிரம்பிற்கு வழங்கவேண்டும் என பரிந்துரைக்கும் அளவிற்கு வந்தது. ஆனால் அந்த உறவும் இப்போது உடைந்து வருகின்றது. கடந்த வாரம் வடகொரிய ஏவுகணைகளைப் பரிசோதனை செய்தமையும், வடகொரிய கப்பலொன்றை அமெரிக்கா கைப்பற்றியுள்ளமையும் இரு நாடுகளுக்கும் இடையில் மீண்டும் பதற்றத்தை அதிகரித்துள்ளது.

இந்தநிலையில்தான் ஈரான் நோக்கி அமெரிக்கா தனது விமானம் தாங்கிப் போர்க் கப்பலை அனுப்பிவைத்துள்ளது. இதனால் வளைகுடா பெரும் பதட்டத்திற்கு உள்ளாகியுள்ளது. இந்தப் பதட்டம் உலக அளவில் எரிபொருளுக்கான விலையை அதிகரித்து, பொருளாதாரத்தை ஆட்டக்காண வைத்துவிடுமோ என்ற அச்சம் சூழ்ந்துள்ளது. ஏனெனில் அமெரிக்கா - ஈரான் முறுகல் போக்கு காரணமாகவே சர்வதேச சந்தையில் கடந்த ஒரு மாதத்தில் மசகு எண்ணெய் விலை 10 சதவீதம் அதிகரித்துள்ளது. போர் தொடங்கினால் இந்த அதிகரிப்பு எந்த எல்லை வரை செல்லும் என்பது யாருக்கும் தெரியாது.

அமெரிக்காவும் - ஈரானும் அதிகமாக பகை நாடுகளாகவே இருந்துவருகின்றன. இஸ்ரேலை ஒரு நாடாக அங்கீகரிக்க மறுத்து, இஸ்ரேலுக்கு எதிரான நகர்வுகளை ஈரான் முன்னெடுப்பதால் அமெரிக்காவிற்கு அந்நாட்டின் மீது கடும் சினம் உண்டு. அத்துடன், 1979ம் ஆண்டு ஈரானுக்குள் இருந்த தமது தூரகத்திற்குள் நுழைந்து துவம்சம் செய்ததுடன், அமெரிக்க தூதரக அதிகாரிகள் மற்றும் குடும்பத்தினர் 56 பேரை பணயக் கைதிகளாக 444 நாட்கள் பிடித்துவைத்துக்கொண்ட வரலாற்று அவமானத்தையும் அது மறப்பதற்கில்லை. 1980ல் ஈரான் மீது ஈராக் போர் தொடுத்தது. 1988 வரை நீடித்த இந்தப்போர் யாருக்கும் வெற்றியின்றி 20ம் நூற்றாண்டில் நீண்ட, கடும் அழிவுகளை மட்டுமே ஏற்படுத்தி, ஐ.நா. சபையின் அனுசரணையுடன் முடிவுக்கு வந்தது. இந்தப் போரின் போது தன் கணக்கை முடித்துக் கொள்ள அமெரிக்கா போட்ட திட்டங்களும் பெரியளவில் கைகொடுக்கவில்லை. அதனால், ஈரான் மீதான கணக்கை முடிப்பதற்கு அமெரிக்கா எப்போதும் எதிர்பார்த்தே இருக்கின்றது. காத்திருந்து கணக்கு முடிப்பதில் அமெரிக்கா கில்லாடி. எத்தனை காலம் ஆனாலும் தன் கணக்கை முடிக்காமல் அது ஓயாது. தன் காலத்தில் இந்தக் கணக்கை முடிக்கவேண்டும் என்பது டிரம்பின் எதிர்பார்ப்பு. இதனால்தான் ஒபாமா போட்ட உடன்படிக்கையையும் கிழித்தெறிந்தார்.

அமெரிக்க அதிபராக பராக் ஒபாமா இருந்த போது, வல்லரசு நாடுகளுடன் இணைந்து ஈரானுடன் 2015ம் ஆண்டு அணுசக்தி உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. அணுசக்தி ஒப்பந்தம் என்று அழைக்கப்பட்ட இந்த ஒப்பந்தத்தின்படி ஈரான் தனது அணு ஆயுத கையிருப்பை படிப்படியாக குறைக்கவேண்டும். அதற்கு பிரதிபலனாக அந்நாட்டின் மீது விதித்த பொருளாதார தடைகளை மேற்கூறிய வல்லரசு நாடுகள் திரும்பப்பெற வேண்டும்.

அதாவது, தங்களது அணுசக்தி திட்டங்கள் அணு ஆயுதங்கள் தயாரிப்பதற்கானவை இல்லை என்பதை ஈரான் உறுதி செய்யவும், அதற்குப் பதிலாக ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா, ரஷ்யா, பிரித்தானியா, சீனா, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய வல்லரசு நாடுகள் விலக்கிக் கொள்வதற்குமான வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தம் இது. ஆனால், ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதைத் தடுப்பதற்குப் போதுமான வலுவானதாக இந்த ஒப்பந்தம் இல்லை எனக் கூறி, தற்போதைய அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அந்த ஒப்பந்தத்தைக் கைவிடுவதாக கடந்த 2018ம் ஆண்டு மே மாதம் 8ம் திகதி அறிவித்தார். அதனைத் தொடர்ந்து, அணு சக்தி ஒப்பந்தம் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளையும் அவர் மீண்டும் நடைமுறைப்படுத்தினார்.

இதனால் இருநாடுகளின் உறவில் மீண்டும் விரிசல் ஏற்பட்டது. அமெரிக்காவின் தடைகளால் ஈரான் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கிக்கொண்டது. இந்த நிலையில், அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகி, ஓராண்டு நிறைவடைந்த நிலையில், ஈரான் அதிரடி அறிவிப்பு ஒன்றை கடந்த வாரம் வெளியிட்டது. அணுசக்தி ஒப்பந்தத்தின் சில நிபந்தனைகளை தற்காலிகமாக புறக்கணிப்பதாக ஈரான் அதிபர் ஹசன் ருஹானி அறிவித்தார்.

அதாவது, ஒப்பந்தத்தின்படி தம்மிடம் உள்ள மிகுதியான செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை விற்க வேண்டும் என்ற நிபந்தனையை புறக்கணிப்பதோடு, நிர்ணயிக்கப்பட்ட அளவை விட அதிகமான யுரேனியத்தை செறிவூட்டும் பணியில் இனி ஈரான் ஈடுபடும். அத்துடன் அமெரிக்காவை தவிர்த்து,


## விவேகன்

அணுசக்தி ஒப்பந்தத்தில் அங்கம் வகிக்கும் மற்ற 5 நாடுகளும் (பிரித்தானியா, சீனா, பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா), இந்த ஒப்பந்தத்தை பாதுகாப்பதாக அளித்த வாக்குறுதியை 60 நாட்களுக்குள் நிறைவேற்றாவிட்டால் ஒப்பந்தத்தின் மேலும் சில நிபந்தனைகளை ஈரான் மீறும் என்றும் ஹசன் ருஹானி எச்சரித்தார்.

ஈரானின் இந்த நடவடிக்கைக்கு பதிலடியாக அந்நாட்டின் உலோக ஏற்றுமதி மீது அமெரிக்கா உடனடியாக அடுத்த பொருளாதார தடையை விதித்தது. அத்துடன் நின்றுவிடாமல் டொனால்டு டிரம்ப், ஈரான் மீது இராணுவ நடவடிக்கை எடுக்க தயங்க போவதில்லை என்றும் எச்சரித்தார். எச்சரிக்கையுடன் மட்டும் நின்றுவிடாது யுஎஸ்எஸ் ஆபிரஹாம் லிங்கன் என்ற அமெரிக்காவின் அணுசக்தி விமானம் தாங்கி போர்க்கப்பலை ஈரான் கடற்பகுதிக்கு அனுப்பியுள்ளார்.

ஈரானை சுற்றி போர் மேகங்கள் சூழ்ந்துள்ள நிலையில் அமெரிக்காவின் நிலைப்பாட்டிற்கு ஜேர்மனி எதிர்ப்பு தெரிவித்துள்ளது. ஆனால் அதேவேளை, அணுசக்தி ஒப்பந்தத்தைப் பாதுகாப்பதாக அளித்த வாக்குறுதியை 60 நாள்களுக்குள் நிறைவேற்ற வேண்டும் என்று அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு ஈரான் விதித்த கெடுவை அந்த நாடுகள் நிராகரித்துள்ளன. மேலும், அந்த ஒப்பந்தம் இரத்தாகாமல் இருக்கும் வகையில் அதில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளைத் தொடர்ந்து நிறைவேற்றும்படி ஈரானிடம் அவை வலியுறுத்தியுள்ளன. இதுகுறித்து, ருமேனியாவின் சீபுயு நகரில் கடந்த 9ம் திகதி வியாழக்கிழமை நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றிய மாநாட்டில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், வல்லரசு நாடுகளுடன் செய்து கொண்டுள்ள அணுசக்தி ஒப்பந்தத்தின் அம்சங்களை தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஈரானை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம். இந்த விவகாரத்தில் பதற்றத்தை ஏற்படுத்தும் வகையிலான எந்த நடவடிக்கைகளையும் ஈரான் மேற்கொள்ளக்கூடாது. அணு ஆயுதத் தயாரிப்பைத் தவிர்ப்பதற்கான உறுதிப்பாட்டை ஈரான் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும். மற்றபடி இந்த விவகாரத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கு ஈரான் விதித்துள்ள 60 நாள் கெடு போன்ற எந்த நிபந்தனைகளையும் நாங்கள் ஏற்கமாட்டோம் என்று அந்த கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 30ம் பக்கம்




## எரிபொருள் விலை அதிகரிக்குமோ என உலக நாடுகள் அச்சம்

## உலகை உலுக்கிய..

### 6. சூடான் இனப்படுகொலை (1983-2003)

ஆபிரிக்காவின் சூடானில் உள்ள தார்ஃபுர் மாநிலத்தில் நடைபெற்ற இப்படுகொலை பொருளாதார ரீதியாக முக்கியமானதாகும். சூடானின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகள் சண்டையிட்டுக் கொள்



வதையே வழக்கமாகக் கொண்டிருந்தன. இந்நிலையில் மேற்கு சூடானில் உள்ள தார்ஃபுரில் எண்ணெய் வளம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் வடக்கு மற்றும் தெற்கு பிரச்சனை மேலும் கொளுந்துவிட்டு எரிந்தது. இவ்வாறாக 1972ல் உள்நாட்டு யுத்தம் முடிந்தது. 1983ல் மீண்டும் துளிர்விட ஆரம்பித்தது. கிட்டத்தட்ட 20 வருடங்களில் 20 இலட்சம் பேர் உயிரிழந்தனர். 40 இலட்சம் பேர் வீடுகளை இழந்து அகதிகளாகினர்.

### 7. இலங்கை இனப் படுகொலை (1958 - 2009)

பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்கள் சிங்களப் பெரும்பான்மையிடம் நாட்டை ஒப்படைத்துவிட்டுப் போனதால் தொடங்கிய இனப்பிரச்சினை.



1958, 1977 எனத் தொடர்ந்த தமிழர்கள் மீதான வன்முறை, 1983ம் ஆண்டு 'கறுப்பு ஜூலை' கலவரமாகக் கொழுந்துவிட்டெரிந்தது. ஆயுதப் போராட்டம் பெரும் வளர்ச்சியடைந்து உலக நாடுகளின் ஒத்துழைப்புடன் முள்ளிவாய்க்காலில் மிகப் பெரும் அழிப்புடன் போர் முடிவுக்கு வந்தது. 21ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நடந்த முதலாவது மிகப்பெரும் இன அழிப்பாக கருதப்படுகின்றது. இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டு, பல்லாயிரக் கணக்கானவர்கள் காணாமல் போனார்கள். பல இலட்சம் மக்கள் நாட்டைவிட்டு அகதிகளாகப் புலம்பெயர்ந்தனர்.



## இலங்கையில் நிரந்தர இராணுவத் தளம்!

### அமெரிக்கா – சிறீலங்கா பலப்படும் நட்பு

இலங்கையில் நிரந்தர இராணுவதளமொன்றை அமைப்பதற்கான திட்டம் எதுவுமில்லை என சிறீலங்காவிற்கான அமெரிக்க தூதுவர் அலைனா டெப்பிலிட்ஸ் தெரிவித்துள்ளார். இலங்கை ஊடகங்களில் நான் இதனை தொடர்ந்தும் வாசித்து வருகின்றேன்.ஆனால் நான் உங்களிற்கு உண் மையை தெரிவிக்கவேண்டும் அமெரிக்காவிடம் அவ்வாறான திட்டம் எதுவும் இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.



இலங்கையில் தாக்குதல்களை மேற்கொள்வதற்கான திட்டங்கள் தொடர்ந்து இடம் பெறுகின்றன என அமெரிக்கா கருதுவதையே அதன் பயண எச்சரிக்கை வெளிப்படுத்துகின்றது என அமெரிக்க தூதுவர் தெரிவித்துள்ளார். அமெரிக்கக் குடிமக்களைக் பாதுகாக்கவேண்டியது எங்களின் கடமை என குறிப்பிட்டுள்ள அவர், இதன் காரணமாகவே நாங்கள் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளோம் என குறிப்பிட்டுள்ளார். பாடசாலை செல்லும் சில அமெரிக்கச் சிறுவர்களை அமெரிக்காவிற்குத் திருப்பி அனுப்பினோம். குறிப்பிட்ட காலத்திற்கு எச்சரிக்கையுடன் இருப்பதற்காக இதனை செய்தோம் என அவர் தெரிவித்துள்ளார். உயிர்த்தஞாயிறு தாக்குதல்கள் குறித்த விசாரணைகளில் அமெரிக்கா சிறீலங்காவிற்கு முழுமையான உதவிகளை வழங்கி வருகின்றது. சிறீலங்காவுடன் பாதுகாப்பு புலனாய்வு விவகாரங்களில் அமெரிக்கா ஒத்துழைக்க விரும்புகின்றது எனவும் தூதுவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி 17ம் பக்கம்




# முள்ளிவாய்க்கால் இறுதிவரை இரவுபக

**தமிழீழக் காவல்துறையில் ஒரு முதன்மை ஆய்வாளராகவும் முல்லைத்தீவு மாவட்ட கண்காணிப்பாளராகவும் பணியாற்றி முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தம் வரை தமிழீழ மக்களோடு மக்களாக நின்று தமிழீழக் காவல்துறையின் பொறுப்பதிகாரியாகவும் கடமையாற்றி இனவழிப்பின் சாட்சியமாகவும் இருந்துவரும் திரு.ரஞ்சித்குமார் அவர்கள். முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை 10 ஆண்டு நிறைவை முன்னிட்டு எமது ஈழமுரசு வாசகர்களுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணல்.**



**கேள்வி: தமிழீழக் காவல்துறையின் ஆரம்பமும் அதன் நடைமுறைகள் பற்றிக் குறிப்பிடுங்கள்?**

**பதில்:** தமிழீழக் காவல்துறையின் ஆரம்பம் பற்றிக் கூறுவதென்றால், 1990களில் தமிழர் தாயகத்தின் பெருமளவு பிரதேசங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருந்தமை எல்லோருக்கும் தெரியும். அந்தக்காலப் பகுதியில் அங்கு வாழ்ந்த எமது மக்கள் ஏறக்குறைய 7 இலட்சத்திற்கும் மேல் என நினைக்கின்றேன். அவர்களின் பரிபாலனமும் தமிழீழ விடுதலைப் புலிகளினால் செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

ஆரம்பத்தில் அரசியல் பிரிவினரால் பல ஊரகக்கட்டமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு, அங்கு சிவில் நிர்வாகத்தின் ஒரு மாதிரியை அமைத்து செயற்படுத்தப்பட்டு வந்தமை எல்லோருக்கும் தெரியும். ஆனால், அது நடைமுறையில் பல பிரச்சினைகளை எதிர்கொண்டது. இந்த அனுபவங்களைக் கொண்டு ஒரு தொழில் சார் காவல்துறையை அமைக்கவேண்டிய தேவை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எழுந்தது. அந்த வேளையில் எமது தேசியத் தலைவர் அவர்களினால் ஒரு தீர்க்க தரிசனமான சிந்தனையின் அடிப்படையில் இந்த காவல்துறை உருவாக்கத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. எல்லோருக்கும் தெரியும் 1981 மே மாதம் 31 ஆம் திகதி யாழ்ப்பாணப் பொதுநூலகம் எரிக்கப்பட்டிருந்தது. அதாவது சிறீலங்காவின் சிங்களக் காவல்துறையினரால். அந்த நாளை நினைவுகொள்ளும் முகமாக 1991 யூன் மாதம் 1 ஆம் திகதி தமிழீழக் காவல்துறையினருக்கான பயிற்சிகள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டன. 6 மாதப் பயிற்சியின் நிறைவில் 19 நவம்பர் 1991 அன்று யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் நடைபெற்ற அணிவகுப்பை தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, தமிழீழக் காவல்துறையினை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்திருந்தார். தமிழீழக் காவல்துறையானது யாழ் மாவட்டத்தில் தனது செயற்பாட்டை ஆரம்பித்து, படிப்படியாக வன்னியிலும் பின்னர் திருகோணமலை, மட்டக்களப்பிலுமாக தமிழர் தாயகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் தனது சேவையை விஸ்தரித்திருந்தது. 2009 மே மாதம் போரின் இறுதி வரை தமிழீழக் காவல்துறையினர் தமது கடமையைச் செய்திருந்தனர்.

**கேள்வி: தமிழீழக் காவல்துறையில் உங்களை இணைத்துக்கொண்ட விடயம் எவ்வாறு ஏற்பட்டது?**

**பதில்:** நான் தமிழீழக் காவல்துறையில் முதலாம் அணியில் பயிற்சி பெற்றிருந்தேன். 1991 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் திகதி நான் இணைந்துகொண்டேன். பயிற்சியின் நிறைவின் பின்னர் யாழ்.சுன்னாகம் பகுதியில் இயங்கிய காவல்பணிமனையில் ஓர் உப பரிசோதகராக எனது கடமையை ஆரம்பித்து, பின்னர் யாழ்.சாவகச்சேரியில் இயங்கிய காவல்துறை பணிமனைக்கு பொறுப்பாளராக நியமிக்கப்பட்டு, அதன்பின்னர் வன்னிப் பெருநிலப்பரப்பில் எனது கடமைகளைப் புரிந்துள்ளேன். அதாவது, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களில் பணியாற்றியுள்ளேன். போர்நிறுத்தகால புரிந்துணர்வு ஒப்பந்தம் 2002 இல் கைச்சாத்திட்ட வேளையில், நான் கிளிநொச்சி மாவட்டத்திற்குப் பொறுப்பாக இருந்துள்ளேன். அதன்பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் கண்காணிப்பாளராக இறுதிவரை பணியாற்றியுள்ளேன்.

**கேள்வி: யுத்தகாலத்தில் தமிழீழக் காவல்துறையினரின் பங்களிப்பு என்பது அதிமுக்கியம் வாய்ந்தது. அதுபற்றி..?**

**பதில்:** வெவ்வேறுபட்ட காலப்பகுதியில் தமிழீழக் காவல்துறை தன்னுடைய கடமைப் பயணத்தைச் செய்திருக்கின்றது. ஆரம்பத்தில் தமிழீழக் காவல்துறையினர் செய்த முதலாவது கடமை, அவர்கள் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 1991 ஆம் ஆண்டு, யூலை மாதம் ஆனையிறவை மீட்பதற்கான ஆகாய கடல் வெளித் தாக்குதல் சமர் நடந்து கொண்டிருந்தபோது, பளையில் இருந்து யாழ்ப்பாணம் வைத்தியசாலை வரையான பிரதான வீதியில், தமிழீழக் காவல்துறையினர் வீதி ஒழுங்குக்கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தமையே அவர்களின் முதலாவது கடமை. அதன்பின்னர் 1991 நவம்பர் மாதம் யாழ். குடாநாட்டில் ஏற்பட்ட பொருளாதாரத் தடையின்போது, உணவு பதுக்கல்களில் ஈடுபட்டிருந்தவர்களைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் தமிழீழக் காவல்துறையினர் ஈடுபட்டிருந்தனர். இந்த இரண்டு நடவடிக்கைகளும் ஒரு பயிற்சி நடவடிக்கையாகவே அப்போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால், தமிழீழக் காவல்துறை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட பின்னர், காலத்துக்குக் காலம் ஏற்பட்ட இடப்பெயர்வுகளின்போது, அல்லது போர் அனர்த்தங்களின் போது, மக்களை ஒழுங்குபடுத்தி பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பிவைப்பதில், காவல்துறை எந்நாளும் ஈடுபட்டிருக்கின்றது. அதைவிட விமானத்தாக்குதல், எறிகணைத்தாக்குதல் நடத்தப்படும் வேளைகளில், தமிழீழக் காவல்துறை உறுப்பினர்கள் உடனடியாக அந்த இடங்களுக்குவிரைந்து, காயக்காரர்களை மீட்டெடுக்கும் நடவடிக்கைகளில் துரிதமாக செயற்பட்டிருக்கின்றார்கள். இதனால், அநேகமான உயிர்கள் தமிழீழக் காவல்துறையினரால் காப்பாற்றப்பட்டிருக்கின்றன. அதைவிட போரின்போது தவறவிடப்பட்ட குடும்பங்கள் உறவுகளைத் தொடர்புபடுத்திவிடும், மீள இணைக்கும் பணிகளிலும் தமிழீழக் காவல் துறையினர் ஈடுபட்டிருக்கின்றனர்.

**கேள்வி: இறுதி யுத்த காலப்பகுதியில் தமிழீழக் காவல்துறையினரின் பங்களிப்பு என்பது வார்த்தைகளால் சொல்லமுடியாதவையே. அவை பற்றி இங்கே குறிப்பிட்டே ஆகவேண்டும்...**

**பதில்:** இறுதி யுத்தம் வன்னியில் இடம் பெற்றது என்று சொன்னால், 2006ம் ஆண்டில் இருந்து ஆரம்பித்த யுத்தத்தைக் கூறலாம். நான் ஏற்கெனவே சொன்னதுபோல சிறீலங்கா ஆழஊடுருவும் படையணி வன்னியின் சகல பகுதிகளுக்குள்ளும் ஊடுருவி ஒரு தாக்குதலைச் செய்துகொண்டிருக்கின்றது. அந்த நேரம் வன்னியின் பிரதான வீதிகளை 24 மணி நேர கண்காணிப்புக்குள் கொண்டுவந்து, தமிழீழக் காவல்துறையின் உள்ளகப் பாதுகாப்புப்பிரிவு பாதுகாத்துவந்தது. பல இடங்களில் சிறீலங்கா ஆழஊடுருவும் படையணியை தமிழீழக் காவல்துறையினரே முறியடித்துள்ளனர். பல மோதல் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளது. அப்போது வீதிகளைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் தமிழீழக் காவல்துறையினரே முழுமையாக இறங்கினர். அதன் பின்னர் வன்னியில் செறிவான ஒரு விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் இடம்பெறத் தொடங்கியிருந்தன. அதாவது ஒவ்வொருநாளும் குண்டுவீச்சு என்ற கட்டத்துக்கு வன்னி வந்துவிட்டது. அத்தாக்குதல்களில் அதிகளவானோர் காயமடைவார்கள். குறித்த சம்பவ இடங்களுக்கு உடனடியாகச்சென்று காயமடைபவர்களை தூக்கி வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லும் வேலையை தமிழீழக் காவல் துறையே செய்துவந்தது. அதைவிட விமானக்குண்டு வீச்சுக்களினால் வீதிகள் போக்குவரத்திற்குத் தடைப்பட்டுவிடும். உடனடியாக அந்த இடத்தை சீரமைத்து போக்குவரத்திற்கு ஒழுங்குசெய்துகொடுப்பதையும் எமது காவல் துறையினரே செய்தனர். சண்டை இப்படியே நெருங்கி நெருங்கி கிளிநொச்சியையும் தாண்டி பரந்தன், விசுவமடு என்று நெருங்கி வர ஆரம்பித்தது. இந்நிலையில் ஒரேயொரு பிரதான வீதியே விடுதலைப்புலிகளுக்கு எஞ்சியிருந்தது. அந்த வீதியால்தான் மக்கள் இடம்பெயர்ந்துபோனால் என்ன, காயமடைந்தவர்கள் போனால் என்ன, உணவுவண்டிகள்




# கப் பணியாற்றிய தமிழீழக் காவல்துறை!



போனால் என்ன, இதைவிட சண்டைக்குத் தேவையான படையணி போனால் என்ன, வெடிபொருட்கள், ஆயுதங்கள் போனால் என்ன எல்லாம் ஒரே வீதிதான். இதனால் பயங்கரமான ஒரு நெருக்கடி நிலைமை ஏற்பட்டுவிட்டது. அதனால், இரவுபகலாக தமிழீழக் காவல்துறையினர் தான் வீதி ஒழுங்குப் பணியை மேற்கொண்டிருந்தனர். இதேவேளை மக்கள் பட்டினிச் சாவை எதிர்கொள்ளும் நிலை வந்துவிட்டது. மக்களுக்கு கஞ்சிவழங்கும் திட்டம் ஒன்றைத் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் செய்கின்றது. தமிழீழ நிர்வாக சேவையும் இவர்களோடு இணைந்து செயலாற்றியது. இவர்களுடன் தமிழீழக் காவல்துறையும் இணைந்து செயலாற்றியது. சில இடங்களில் தமிழீழக்காவல்துறையினரே கஞ்சிக்கொட்டில்களை ஆரம்பித்து, விநியோகங்களைச் செய்தது. அதைவிட நாளாந்தம் பெரும் எண்ணிக்கையான மக்கள் கொல்லப்பட்டுக்கொண்டிருந்தனர். இன்னும் வன்னியில் இறந்த மக்களைக் கணக்கெடுப்பதில் ஒரு பெரிய பிரச்சினை உள்ளது. அதாவது, சடலங்கள் முறைப்படி அகற்றப்படவில்லை. ஒரு கூடாரத்தின் மீது எறிகணை விழுந்தால், அதில் இறந்தவர்களை அவர்களின் உறவினர்கள் பதுங்குகுழிகளில் போட்டுப் புதைத்து விட்டு, வேறு இடங்களுக்குச் சென்று விடுவார்கள். அதனால் இறந்தவர்களைக் கணக்கிடுவது எமக்கு பிரச்சினையாக இருந்தது. அவ்வாறு இல்லாவிட்டால் சடலங்கள் கைவிடப்பட்டுவிடும். அவ்வாறான சடலங்களை காவல்துறையினராகிய நாங்களே எடுத்து புதைத்திருக்கின்றோம். அல்லாவிட்டால் எரித்திருக்கின்றோம்.

இதைவிட இறுதிப்போர் இடம்பெற்றகாலத்திலும் அங்கு காயமடைபவர்களைத் தூக்கும் நடவடிக்கையில் நாங்கள் ஈடுபட்டிருந்தோம். அத்தோடு முள்ளிவாய்க்கால் பாடசாலையில் இயங்கிய வைத்தியசாலையில் காவல்துறை குழு ஒன்று 24 மணிநேரமும் நின்று, காயமடைபவர்களை கப்பலுக்கு ஏற்றிவிடும் பணிகளையும் செய்தது. அதைவிட முள்ளிவாய்க்கால் பகுதியில் இறப்பவர்களை ஒரு பொதுவான இடத்தில் புதைக்கும் நடவடிக்கையையும் காவல்துறையினர் செய்தனர். அதைவிட முள்ளிவாய்க்கால் பகுதியில் உணவு விநியோகத்தை சீர்செய்யும் நடவடிக்கையில் ஏனைய கட்டமைப்புக்களுடன் இணைந்து, காவல்துறையினர் மேற்கொண்டனர். முள்ளிவாய்க்காலில் தமிழீழக் காவல்துறையின் படையணியைச் சேர்ந்தவர்கள் தமிழீழ விடுதலைப்




**சந்திப்பு: கந்தரதன்**



புலிகளுடன் இணைந்து சண்டைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

**கேள்வி: சிறீலங்கா அரசினால் பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட பகுதிகளுக்குள்ளும் கடுமையான தாக்குதல்கள் நடத்தப்பட்டனவே...?**

**பதில்:** உயர் பாதுகாப்புவலயம் என்ற இந்த ஏற்பாட்டை சிறீலங்கா அரசும், அதன் படைத்துறைத் தலைமையுமே அறிவிக்கின்றது. முதலில் சுதந்திரபுரம் பகுதியை உயர்பாதுகாப்பு வலயம் என்று பிரகடனப்படுத்தி அங்கு பொதுமக்களை எல்லாம் அங்கு செல்லும்படி வன்னியின் சிறீலங்கா இராணுவக் கட்டளை மையம் அறிவிக்கின்றது. அது எல்லாச் செய்திகளிலும் வருகின்றது. உலக ஊடகங்களும் இதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது. ஏற்கனவே மக்கள் மன்னாரில் இருந்து 10 ஆவது இடத்திற்கு இடம்பெயர்ந்துவிட்டனர். மக்கள் விரக்தியடைந்த நிலையில் இருக்கும் போது தான் நீங்கள் உயிர் தப்பவிரும்பினால் இந்த வலயத்துக்குள் வாருங்கள் என்று சிறீலங்கா அரசாங்கம் அறிவிக்கின்றது. மக்கள் அதனை நம்பி அந்தப் பாதுகாப்பு வலயம் என்று அறிவிக்கப்பட்ட பகுதிக்குள் செல்கின்றனர். இதனை விடுதலைப் புலிகளும் தடுக்கவில்லை. இதனையடுத்து சுதந்திரபுரம் பகுதிக்குள் மக்கள் குவிந்தனர். இதன் பின்னர் சுதந்திரபுரம் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரால் செறிவான எறிகணைத் தாக்குதல் நடத்தப்படுகின்றது. அந்த எறிகணைத்தாக்குதல் முதலில் மக்கள் குடியிருப்புக்கு மேலே பரவலாக நடக்கும். அதன்பின்னர் ஒரு அரை மணிநேரம் கழித்து அந்தப் பகுதிக்கு அண்மையில் எங்கு மருத்துவமனை உள்ளதோ அதற்குமேல் செறிவான எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டது. இதுதான் சிறீலங்கா இராணுவத்தினரின் உத்தியாக இருந்துள்ளது. எங்கு காயமடைந்தாலும் இறுதியில் புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்குத்தான் கொண்டு செல்ல வேண்டும். அங்கும் பரவலாக எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதுதான் பாதுகாப்பு வலயம் என்று அறிவிக்கப்பட்டதன் நோக்கம். அதன்பின்னர் சுதந்திரபுரம் பாதுகாப்பு இல்லை என அறிவித்துவிட்டு தேவிபுரத்தினை உயர்பாதுகாப்புவலயமாக அறிவிக்கின்றார்கள். தேவிபுரத்திற்கும் இவ்வாறே நடந்தது. அதன்பின்னர் வலைஞர்மடம், பொக்கணை என்று அவர்களின் பாதுகாப்புவலயம் போய்க்கொண்டிருந்ததே தவிர அதாவது அதற்கு பெயர்தான் பாதுகாப்பு வலயம் என்பது, ஆனால், அங்கு எதுவும் இல்லை.

இந்த இடத்தில் மற்றொரு விடயத்தையும் குறிப்பிடவேண்டும். போர் நெருங்கிக்கொண்டிருக்கும் போது, சிறீலங்கா அரசாங்கம் திடீரென ஒருநாள் அறிவிக்கின்றது, வன்னியில் செயற்படும் ஐ.நா. அலுவலர்களையெல்லாம் வன்னியைவிட்டு வெளியேறும்படி அறிவிக்கின்றது. இந்த அறிவிப்பையடுத்து ஐ.நா.சபையின் வாகனங்கள் திடீரென வன்னியைவிட்டு வெளியேறுகின்றன. கரடிப்போக்குச் சந்தியில் உள்ள ஐ.நா. அலுவலகம் முன்பாக மக்கள் போகவேண்டாம் என்று போராட்டம் செய்தபோதிலும் அதனைக் கருத்தில் கொள்ளாமல் வெளியேறினர். மற்றொரு சம்பவம் உணவுத் தொடரணி ஒன்று ஒட்டுசுட்டானில் இருந்து புதுக்குடியிருப்புக்கு வருகின்றது. ஒட்டுசுட்டானுக்கு கொஞ்சம் மேலே இராணுவம் வந்து நிற்கின்றது. அந்தநிலைமையில் ஐ.நா.வின் வாகனத் தொடரணிக்குப் பின்னால் இராணுவம் வந்து புதுக்குடியிருப்புக்கு அண்மையில் நிற்கின்றது. இதனால் அந்த வாகனங்களையும் மறித்துவைத்து பேச்சுவார்த்தையின் பின்னர் வாகனங்கள் விடுவிக்கப்பட்டன. சுதந்திரபுரம் பாதுகாப்பு வலயத்தில் ஐ.நா. அலுவலகம் திறந்துவைத்து, மக்களுக்கான உணவு விநியோகத்தை ஐ.நா. பிரதிநிதிகள் சிலர் நின்று ஏற்பாடுசெய்தனர். ஐ.நா. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் நிற்கின்றனர். மக்கள் அந்த ஐ.நா. அலுவலகத்தினைச் சுற்றி குடிசைகளை அமைத்துக் குவிந்து கிடக்கின்றனர். அந்த வேளையில், இருக்கின்ற அனைவரும் பதுங்குகுழி அமைத்து இருக்கும்படி நாங்கள் கூறினோம். நாங்கள் ஐ.நா.வுக்கு அருகில் இருக்கின்றோம். வெள்ளைக்காரர்கள் இருக்கிறார்கள். எங்களுக்குப் பயம் இல்லை என்று மக்கள் கூறினார்கள். அன்று இரவு அடி விழுகின்றது. அந்த ஐ.நா. அலுவலகத்திற்கு பக்கத்தில் இருந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் இறந்தார்கள். மரங்களில் கூட உடல் பாகங்கள் தொங்கிக்கொண்டிருந்தன. ஐ.நா. அலுவலர்கள் பதுங்குகுழி அமைத்திருந்ததனால் அவர்களுக்கு எதுவும் ஆகவில்லை. இதேநேரம் சுமார் 500 இற்கும் மேற்பட்ட தமிழீழக் காவல்துறையினர் இறுதி யுத்த காலத்தில் தமது கடமையின் போது வீரச்சாவடைந்துள்ளனர்.

**சிறீலங்கா ஆழ ஊடுருவும் படையணியின் தாக்குதல்கள், கேணல் சங்கர் வீரச்சாவிற்கு காரணமான ஆழ ஊடுருவும் படை அதிகாரியை விடுதலைப் புலிகள் கணக்கு முடித்த வரலாறு... இன்னும் பல வரலாற்றுப் பதிவுகளுடன் அடுத்த இதழிலும் காவல்துறை அதிகாரி ரஞ்சித்குமார் அவர்களுடனான செவ்வி தொடரும்...**

## இலங்கையில் நிரந்..

இதேவேளை, ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல் போன்ற தாக்குதல்களைத் தவிர்ப்பதற்கு நட்பு நாடுகளுக்கிடையே புலனாய்வுத் தகவல்கள் பரிமாற்றம் முக்கியமான காரணியாகும் என்று அமெரிக்கத் தூதுவர் சிறீலங்கா எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவிடம் நேரில் தெரிவித்திருக்கிறார். மகிந்த ராஜபக்சவை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் கடந்த 10ம் திகதி சந்தித்தார். இதன்போது கொடூரமான பயங்கரவாதத் தாக்குதல்களில் பலியான அமெரிக்கப் பிரசைகளுக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களை மகிந்த ராஜபக்ச



அமெரிக்கத்தூதுவரிடம் வெளிப்படுத்தியதாகவும், பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் சிறீலங்காவிற்கு அமெரிக்க அரசாங்கத்தின் முழுமையான ஆதரவை தூதுவர் தெரிவித்ததாகவும் எதிர்க்கட்சித் தலைமை வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. 9/11 தாக்குதல் அமெரிக்காவிற்கு பல பாடங்களைக் கற்றுத்தந்ததாகவும், அமெரிக்கப் புலனாய்வு சேவைகள் பலப்படுத்தப்பட்டதாகவும் தூதுவர் டெப்லிட்ஸ் மகிந்த விடம் கூறியதாகவும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, அமெரிக்க-சிறீலங்கா இருதரப்பு உறவுகளில் புதிய அத்தியாயம் ஒன்றைத் திறக்கும் வகையில், அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக்கேல் றிச்சர்ட் பொம்பியோ தலைமையிலான குழுவுக்கும், சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன தலைமையிலான குழுவுக்கும் இடையில், உயர்மட்டப் பேச்சுக்கள் இடம்பெறவுள்ளன. வரும் 16ம் திகதி வியாழக்கிழமை அமெரிக்காவில் இந்தப் பேச்சுக்கள் இடம்பெறவுள்ளது. ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களுக்குப் பின்னர், நடைபெறும் இந்தப் பேச்சுக்களில், பிரதானமாக தீவிரவாத முறியடிப்பு, பாதுகாப்பு, மற்றும் ஒருங்கமைக்கப்பட்ட, நாடுகடந்த குற்றங்கள் உள்ளிட்ட விடயங்களில் முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளது.


தொடர்ச்சி 19ம் பக்கம்



## 23 வருடங்களுக்குப் பின் தமிழக மீனவர் இலங்கையில் கண்டுபிடிப்பு !

1996ம் ஆண்டு மே மாதம் 5ம் திகதி தங்கச்சிமடம் பகுதியை சேர்ந்த ஜோன்சன் என்பவருக்கு சொந்தமான விசைபடகில் விஜி, பரதன், சேவியர், ராஜா ஆகிய நான்கு பேர் மீன்பிடிக்கு கடலுக்கு சென்ற நிலையில் மறுநாள் கரை திரும்ப வேண்டிய மீனவர்கள் கரை திரும்பாததால் இவர்கள் நிலை என்னவென்று தெரியாமல் உறவினர்கள் பல நாட்களாக தேடிய நிலையில் மீன்பிடித் துறை சார்பாக கடலில் மாயமானவர்கள் பட்டியலில் இந்த நான்கு பேரும் சேர்க்கப்பட்டனர்.

இதனிடையே கடந்த மே மாதம் 9ம் திகதி இலங்கை யாழ்ப்பாணத்தில்



இருந்து ஒளிபரப்பாகிய காணொளி ஒன்று யூடியூப்பில் ஒளிபரப்பாகியது. அதில் கொழும்பு பகுதியில் உள்ள மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பிச்சை எடுப்பவர்களின் படங்கள் ஒளிபரப்பப்பட்டது. இதனை பார்த்த ராமேஸ்வரத்திலுள்ள முச்சக்கரவண்டி சாரதியான ராஜேஷ் என்பவர் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் நரைத்த தலைமுடியுடன் முகத்தில் தாடியுடன் ஒரு பெரியவரை பார்த்தபோது அது தனது பெரியப்பா போல் உள்ளதை அறிந்துஉடனேதனது அக்காவிடம் இந்த தகவலை தெரிவித்தவுடன் உறவினர்கள் அனைவரும் ஒன்றுகூடி படத்தில் இருந்தது மீனவர் பரதன் என்பதை உறுதி செய்துள்ளனர்.

இந்நிலையில் குடும்பத்தினரை சந்தித்த மீன்பிடித்துறை அதிகாரிகள் பரதன் காணாமல் போனது குறித்து எழுத்துபூர்வமாக மனு எழுதி பெற்று கொண்டனர். மேலும் இதுகுறித்து குடும்பத்தினர் கூறுகையில், கடந்த 23 ஆண்டுகளுக்கும் முன் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றவர் மாயமானதாகவும் படகு உரிமையாளரிடம் கேட்டபோது தனது மகனையும் காணவில்லை என தெரிவித்துள்ளார். ஆனால் என்ன செய்வது என்று தெரியாமல் மாயமான நாளை பரதன் இறந்த நாளாக நினைத்து வருட வருடம் குடும்பத்தினர் வழிபாடு நடத்தி வந்துள்ளனர். இந்நிலையில் இலங்கையில்அவர்உயிருடன்மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் இருப்பதைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்த அதேவேளை, அவரது நிலையைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தாகவும், மனநிலை பாதிக்கப்பட்ட கொழும்பு பகுதியில் சுற்றித் திரியும் பரதனை மீட்டு வர இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரை சந்தித்து கோரிக்கை மனு அளித்துள்ளதாகவும் கூறியுள்ளனர்.








# இத்தனையும் நடந்துவிட்டது. இழப்புக்கள்தான். மன்னித்து, தமிழ் மக்கள் நிம்மதியான ஒரு எதிர்காலத்தை இலங்கையில் அமைத்துக்கொள்ளக் கூடாதா..?

**கேள்வி:–** இத்தனையும் நடந்துவிட்டது. இழப்புக்கள்தான். மன்னித்து தமிழ் மக்கள் நிம்மதியான ஓர் எதிர்காலத்தை இலங்கையில் அமைத்துக்கொள்ளக் கூடாதா..?

கதிர்காமநாதன் ரவிக்குமார் பொபினி பிரான்ஸ்

**பதில்:–** 'ஒரு மனிதன் தேவ நிலையை அடைய வேண்டுமெனில் மன்னிப்பும் அவனிடம் இருக்க வேண்டும்' என்கிறது பகவத் கீதை. இஸ்லாம் கடவுளை 'அல் கபிர்' என்கிறது. 'முழுமையாய் மன்னிப்பவர்' என்பது அதன் அர்த்தமாம். 'ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைக் காட்டு' என்ற யேசுவின் தத்துவமும் 'மன்னிக்க மறுப்பவர்கள் சொர்க்கம் செல்லவே முடியாது' என்கிற கத்தோலிக்கர்களின் நம்பிக்கையும் மன்னிப்பதன் தார்ப்பரியத்தையே உணர்த்துகின்றன. எனவே, மன்னிப்பது மகத்துவமானது என்பதற்கு மாற்றுக் கருத்தில்லை. ஆனால் யாரை மன்னிப்பது என்பது மிகவும் முக்கியமானது.

இது அமெரிக்காவில் நடந்த ஒரு உண்மைச் சம்பவம். சற்கர நாற்காலியில் நீதிமன்றிற்கு அழைத்துவரப்பட்டிருந்தாள் Kai Leigh Harriott என்ற அந்த ஐந்து வயதுச் சிறுமி. அமெரிக்காவின் பாஸ்டன் நகர நீதிமன்றத்தில் அந்த





வழக்கு நடந்துகொண்டிருந்தது. 2003ம் ஆண்டில் அவளுக்கு மூன்று வயதாக இருக்கும் போதுதான் அந்தத் துயரம் நடந்தது. 2003 யூலை முதலாம் திகதி கேய் தனது சகோதரிகளுடன் உற்சாகமாய் இருந்தபோது எங்கிருந்தோ பறந்து வந்த மூன்று துப்பாக்கிக் குண்டுகள் அவளுடைய முதுகெலும்பை உடைத்தன. வாழ்க்கையைத் தொடங்கும் வயதில் சற்கர நாற்காலியே நிரந்தர வாழ்க்கையாக அவளுக்கு மாறிப்போனது.

நீதிமன்றத்தில் அவளுக்கு முன்னால் நின்றிருந்தான் இருபத்தொன்பது வயதான அன்ரனி வாரன் என்ற அந்த இளைஞன். வீதியில் நின்று நடத்திய துப்பாக்கிச் சூட்டில் வீட்டினுள் இருந்த அந்தச் சிறுமியைக் காயப்படுத்தியவன் இவன்தான். விசாரணையின் முடிவில் நீதிமன்றம் அவனைக் குற்றவாளி என தீர்ப்பிட்டது.

சிறுமி கேய் தன் சற்கர நாற்காலியை உருட்டிக்கொண்டு அவனருகில் சென்றாள். திடீரென தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள். பார்த்தவர்களெல்லாம் கலங்கினார்கள். பின் சிறுமி அவனிடம் சொன்னாள், 'நீங்கள் செய்தது தவறு. ஆனாலும் உங்களை நான் மன்னிக்கிறேன்.'

ஐந்து வயதுச் சிறுமியின் அச்செயல் அந்த நீதிமன்றத்தையே நிலைகுலைய வைத்தது. பார்த்துக் கொண்டிருந்தவர்களெல்லாம் நெகிழ்ந்தார்கள். அதுவரை சுட்டவன் மீது கொடும் பகையுடன் இருந்த அவளுடைய தாயும் உட



**2003ம் ஆண்டு சிறுமியைக் காப்பாற்றி மருத்துவமனைக்கு எடுத்துச்சென்ற காவல்துறையினர் அச்சிறுமி வளர்ந்து 18 வயதாகிய நிலையில் கடந்த 2018ம் ஆண்டு சந்தித்தபோது...**




னடியாக அந்த நபரை மன்னித்தார். தன் தவறை அந்தக் குற்றவாளியும் உணர்ந்து கலங்கினான். இந்த நிகழ்வு அமெரிக்காவின் அனைத்துத் தொலைக் காட்சிகளிலும் ஒளிபரப்பாகி பலரின் நெஞ்சத்தையும் தொட்டது. ஆனாலும் நீதிபதி அவனது குற்றத்திற்கான சிறைத் தண்டனையை வழங்கினார். மன்னிக்கப்பட்டவன் தன் தவறை உணர்ந்துகொண்டிருக்கின்றான். அதனால் இங்கு மன்னிப்பு மகத்தானதாக உள்ளது.

ஆனால் சிங்களப் பேரினவாத அரசு அந்த நிலையிலா உள்ளது. ஆசையே துன்பத்திற்கு காரணம் என்று உலகுக்கு போதித்த ஒரு புனிதரான கௌதம புத்தரின் வழியைப் பின்பற்றும் சிங்களப் பேரினவாதம், தன் மகாவம்சக் கனவு




லகச் சாம்ராஜ்யித்திற்காக ஓர் இனத்தை மிக மோசமாக அழித்தது. இத்தனை பேரழிவை ஏற்படுத்தியதன் பின்னரும் அதற்காக வருத்தப்படவோ, மன்னிப்பு கேட்கவோ அது தயாராக இல்லை. 'மன்னிக்கிறவன் பெரிய மனிதன், மன்னிப்புக் கேட்கிறவன் அதைவிடப் பெரிய மனிதன்' என்று சொல்வார்கள். மன்னிப்புக் கேட்கிற அளவிற்கு சிங்களப் பேரினவாதம் பெரிய மனிதர்கள் இல்லை என்பதையும் விட்டுவிடுவோம். இப்போதும் கூட தமிழினத்தை அழிப்பதில் தனது சிங்கத்தின் கூர்வாளைத் தொடர்ந்து கூர்மைப்படுத்திக் கொண்டிருக்கும் நிலையில் அவர்களை எப்படி மன்னிக்க முடியும்..?

ஞானம் பெற்ற கௌதம புத்தர் 12 வருடங்கள் கழித்து மீண்டும் மனைவியை சந்திக்கச் செல்கின்றார். புத்தரின் இந்த முடிவு சீடர்களுக்கு மிகுந்த அதிர்ச்சியை கொடுத்தது. 12 வருடங்களுக்குப் பிறகு மனைவியிடம் தாங்கள் செல்ல வேண்டும் என்றால் மக்கள் உங்களைப் பற்றி தவறாக நினைப்பார்கள் என சீடர்கள் கூறுகின்றனர். அவர்களின் புரிதலையும் புறந்தள்ளிவிட்டு 12 வருடங்கள் கழித்து மீண்டும் அரண்மனைக்கு புத்தர் வருகின்றார். மனைவி யசோதராவைச் சந்திக்கின்றார். கோபமாக இருந்த அவளிடம் சாந்தமாக, 'தவறு செய்து விட்டேன். இப்போது தவறை உணர்ந்து மன்னிப்பு கேட்கின்றேன். அப்போது புரியாத நிலையில் செய்து விட்டேன். இன்று புரிந்த



நிலையில் இருக்கின்றேன்' என்கின்றார் கௌதம புத்தர். அவரது மன்னிப்பை யசோதரா ஏற்றுக் கொண்டு, அவரின் சீடர்களில் ஒருவராக அவளும் மாறுகின்றாள்.

ஆனால், அந்தக் கௌதம புத்தரைப் பின்பற்றும் சிங்களப் பேரினவாதிகளுக்கு அந்தப் புரிதலும் இல்லை, மன்னிப்பு வழங்குவதற்கான தகுதியும் கிடையாது.

'ஆயுதத்தின் மூலமாக அமைதியை ஏற்படுத்த முடியாது, புரிதல் மட்டுமே அமைதிக்கான நிரந்தர வழி' என்று கூறினார் மிகப்பெரும் அறிவியல் மேதை அல்பேர்ட் ஐன்ஸ்டீன். அவரது அறிவியல் கருத்துகளை ஏற்றுக் கொண்ட உலகம், அதற்குப் பின்னணியில் உள்ள அவரது தத்துவங்களை மட்டும் புரிந்துகொள்ளவில்லை.

இத்தனை பேரழிவுகளை ஏற்படுத்திவிட்டு இன்னமும் தமிழர் தாயகம் எங்கும் ஆயுதங்களுடன் படைகளை நிறுத்திவைத்துக்கொண்டு, அமைதி வழியில் தீர்வு காணப்போவதாகக் கூறும் சிங்களப் பேரினவாதிகளை மன்னிப்பது எப்படிச் சாத்தியம் தம்பி..?

**கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

இலத்திரனியல் முகவரி : eelamurazu@gmail.com
தபால் முகவரி : Media Centre, BP 40, 93141 Bondy pdc
குறுந்தகவலாக (கைபேசி SMS) : 00 33 7 81 80 81 16



# புலம்பெயர்ந்தவர்களின் வலி சொல்லும் ஒருத்தி

## திரை விமர்சனம்

**கிருபா**

**கனாடாவில் வாழும் PS. சுதாகரன் என்பவர் இயக்கி வெளிவந்த 'ஒருத்தி' திரைப்படம் கடந்த 5ம் திகதி பிரான்சில் திரையிடப்பட்டது. 1999ல் ITBC வானொலியில் ஒலிபரப்பாளராக ஆரம்பித்து, தொடர்ந்து 2001 முதல் TVI, CMR ஊடகங்களில்பணியாற்றி, 2016 தொடக்கம் வண்ணத்தமிழ் வானொலியிலும், 2018 தொடக்கம் CTBC வானொலியிலும் பணியாற்றிக்கொண்டிருக்கும் ஒலி-ஒளிபரப்புத்துறை கலைஞனான இவர், கடந்த 20 வருடங்களில், பல வானொலி நிகழ்ச்சிகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், இவற்றோடு 12க்கும் மேற்பட்ட குறுந்திரைப்படங்களை எழுதி இயக்கியுள்ளார். இவரது 5ற்கும் மேற்பட்ட குறுந்திரைப்படங்களுக்கு கனடா, ஐரோப்பிய நாடுகளில் விருதுகளும் கிடைத்துள்ளன.**



**இத்தனை வருட கலைத்துறை அனுபவங்களைக் கொண்டு, கதை, திரைக்கதை, இயக்கத்தில் உருவாகியுள்ள முழு நீளப் படம்தான் 'ஒருத்தி'. யாழ்ப்பாணத்திலும், கனடாவிலும் படமாக்கப்பட்ட முதலாவது கனேடிய திரைப்படமாகவும் இது அமைகிறது. மேலும், கனேடிய, ஐரோப்பிய, தமிழக, தமிழீழ கலைஞர்களின் பங்களிப்புகள் நடிப்பு, இசை, பாடல்கள், தொழில்நுட்ப ரீதியில் இடம்பெற்றுள்ளன. இத்திரைப்படம் பிரான்சில் மண்டபம் நிறைந்த காட்சியாகதிரையிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.**

போருக்கு பிந்தைய ஈழத்தமிழர் வாழ்வியல் தனக்கு சற்றும் பொருத்தமற்ற கலாச்சார சூழ்நிலைகளை எதிர்கொள்ள வேண்டியதொரு காலகட்டம். அதை திரை வடிவில் தர முயற்சித்திருக்கின்றார் இயக்குநர்.

தமிழீழ தேசத்தில் தன்னிறைவான பொருளாதாரத்தைக்கொண்டது அரசியின் குடும்பம் (அதாவது கதையின் நாயகியின் பெயர்) அவரின் தந்தை கடும் உழைப்பாளி. அரசிக்கு ஒரு தம்பியும் உண்டு. சகோதரர்கள் இருவரும் பாடசாலையில் கல்வி கற்றுவரும் சூழ்நிலையில் அரசி பூப்பெய்துகிறாள்.

தாயகத்தில் வழமைபோல் சிங்கள இனவெறி இராணுவம் ஆட்கடத்தல், வலிந்து காணாமல் ஆக்கல், இளம் தமிழச்சிகளின் கற்பை சூறையாடுதல் எனும் கோரத்தாண்டவமாடுவது ஒரு பெண் பாத்திரப்படைப்பு மூலம் சூசகமாக பார்வையாளருக்கு உணர்த்தப்படுகிறது.

அந்த வீட்டிற்கு செல்லும் அரசியின் தந்தை அந்தப் பெண்ணின் மகள் கடத்தப்பட்டு காணாமல் போனதை அதிர்ந்து கவலை கொள்கிறார். அந்தப் பெண்மணியோ அரசியின் தந்தையிடம் உங்கள் குழந்தைகளை எங்காவது வெளிநாடு அனுப்பும்படி கண்ணீரோடு கட்டளையிடுகிறார். அரசியின் தாய்மாமன் கனேடிய மண்ணில் புலம்பெயர்ந்து வாழ்வதால் இவர்களுக்கு புலம்பெயர்தல் எளிதாகின்றது.

தன்னுடைய குழந்தைகளை நன்றாக வாழவைக்க வேண்டுமெனும் அவாவோடு கனேடிய மண் வரும் அரசியின் தந்தை, இங்கு வந்தபின் தான் உணர்கின்றார். பொலிசுக்கு பயந்து விதானை வீட்டை ஓடின கதையை.

ஆமாம் இங்கு வந்த சில நாட்களில் அரசியின் தம்பி மேலைத்தேய கலாச்சார பழக்கவழக்கங்களில் மூழ்கி விடுகிறான். மாதா, பிதா, குரு, தெய்வம் எனும் தமிழர் பண்பாட்டின் மேல் மண் அள்ளிப்போடுகின்றான்.



தந்தையை எதிர்த்து வீட்டை விட்டு கிளம்பிவிடுகிறான். இப்பொழுது அரசியை மலைபோல நம்பியுள்ளது அவளின் குடும்பம். அரசியையும் ஒரு கனடா மண்ணில் பிறந்த தமிழ் பையன் ஒருவன் ஒருதலை காதல் கொள்கிறான். ஆனால் அரசியோ தன் பெற்றோருக்கு உண்மையாக வாழ்வதாக காதலை மறுக்கிறாள்.

பிறிதொரு நாளில் அவனின் அகவைதின நாளுக்கு பெற்றோரிடம் கூறாமலே கிளம்பி விடும் அரசி, அங்கிருந்து வரும்போது வாகன விபத்தொன்றில் சிக்கி காயமடைந்த போது அந்தப்பையனின் பெற்றோரோ அரசி ஊனமானவள் என்றும் அவளை மறக்கும்



படியும் கூற வழமைபோல் அவனும் மறந்துவிட.

இப்போது அரசியின் பெற்றோர் அவளுக்கு தாயகத்தில் ஒருவரை பேசி முடித்து அவளிடம் சம்மதம் கேட்க அவளோ பெற்றோருக்காக சம்மதிக்கின்றாள்.

தாயகத்தில் திருமணம் முடிந்த ஓரிரவில் அரசியின் கணவன் ஏற்கனவே மணமானவன் எனும் குட்டு உடைகிறது. இதை பெற்றோரிடம் கூறாமல் மறைத்து விடும் அரசி, கனடா திரும்பியதும் கூறிவிட அதிர்ந்து போகிறது அந்தக்குடும்பம்.

இப்போது தான் சிக்கலான வேளைகளில் எப்படியான தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டும் எனும் பாடம் நமக்கும் உணர்த்தப்படுகிறது. ஆமாம் அரசியும் அவளின் தந்தை தாயும் கோழைத்தனமான எந்த முடிவையும் எடுக்காமல் ஒரு செய்தியை நமக்கு விட்டுச்செல்கிறார்கள்.

எந்தப் பிரச்சினையையும் தைரியமாக எதிர் கொள்ள அரசி பாத்திரம் நம்மை உந்துகிறது.

நிற்க, இன்று புலம்பெயர் தேசங்களிலும் தாயகத்திலும் மேய்ப்பரற்ற மந்தைகளாய் கலாச்சார சீரழிவுகளால் எமது இனம் படும் அவலங்களை படம் பேசுகின்றது. ஏமாற்றி திருமணம் புரிதல், மிரட்டி பணம் அல்லது வெளிநாடு போதல். இன்னபிற....

தொடர்ச்சி 30ம் பக்கம்

### இலங்கையில் நிரந்..

இந்தப் பேச்சுக்களின் போது, இரண்டு நாடுகளினதும் அதிகாரிகள் மற்றும் பிரதிநிதிகள் இந்தோ-பசுபிக் மூலோபாயம், சிறீலங்கா மற்றும் ஆசியப் பிராந்தியம், இராணுவ - இராணுவ உறவுகள், வருகைப் படைகள் உடன்பாடு மற்றும் சிறீலங்காவின் அமைதிகாப்புக்கான உதவி, கண்ணிவெடிகளை அகற்றும் ஆற்றல்கள் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் கலந்துரையாடுவர் என்று கூறப்படுகிறது.

அத்துடன், மனித உரிமைகள், நிலைமாறுகால நீதி, ஈரான் மீதான தடைகள், மிலேனியம் சவால் நிதிய மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு, வணிக மற்றும் முதலீடு, விஞ்ஞானம், தொழில்நுட்ப, கண்டுபிடிப்பு ஒத்துழைப்பு, இணையவெளிப் பாதுகாப்பு உள்ளிட விவாகரங்கள் குறித்தும் இந்த இருதரப்பு கலந்துரையாடலில் பேசப்படவுள்ளன.

அமெரிக்கா செல்லவுள்ள திலக் மாரப்பன தலைமையிலான இந்தக் குழு இன்று 14ம் திகதி செவ்வாய்க்கிழமை புறப்படுகின்றது.

இதுஇவ்வாறிருக்க, நாட்டில் அண்மையில் நடந்த துரதிஷ்ட சம்பவங்களின் பின்னர் இலங்கை முஸ்லிம்கள் தாம் மேலும் துருவப்படுத்தப்பட்டுள்ளதாக உணர்கின்றனர். அவர்களது அச்சத்தை போக்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதே இன்றைய அவசர தேவையாகும் என சிறீலங்கா முஸ்லிம் கொங்கிரஸ்



தலைவர், நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

சிறீலங்காவிற்கான அமெரிக்க தூதுவர் அலய்னா பீ. ரெப்லிட்ஸ் கடந்த 11ம் திகதி அமைச்சர் ரவூப் ஹக்கீமை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்து அண்மைய தற்கொலைத் தாக்குதல் சம்பவங்களைத் தொடர்ந்து நாட்டின் தற்போதைய நிலைமை குறித்தும், ஏனைய முக்கிய விடயங்கள் குறித்தும் கலந்துரையாடிய போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.



# பொண்டியில் கவனயீர்ப்பு

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் வலி சுமந்த 10வது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு இன அழிப்புக்கு நீதி கோரிய கவனயீர்ப்பும் போராட்டமும் கடந்த 21.04.2019 உயிர்த்த



ஞாயிறு தினத்தன்று தமிழீழம் மட்டக்களப்பிலும் சிறீலங்காவிலும் தற்கொலைத் தாக்குதல்களில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்குமான வணக்க நிகழ்வும் பிரான்சு பரிசுக்கு அண்மையில் உள்ள பொண்டி நகரத்தின் மாநகர சபை முன்றிலில் 08.06.2019 புதன்கிழமை பிற்பகல் 14.00 மணிக்கு இடம்பெற்றது.

பிரான்சு தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு மற்றும் பொண்டி தமிழ்ச்சங்கத்தின்



ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் செயற்பாட்டாளர் கஜன் அவர்களின் முயற்சியினால் தமிழினப் படுகொலையின் சாட்சியங்கள் அடங்கிய நிழற்படங்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

பொண்டி மாநகரசபையின் நகரபிதா திருமதி சில்வின் தொமசின் அவர்களும் துணை நகர பிதா திரு. சார்லி நாபால் ஆகியோர் கொட்டும் மழைக்கு மத்தியில் கலந்துகொண்டு தமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்ததுடன், சுடர் ஏற்றி மலர் வணக்கமும் செலுத்தியிருந்தனர்.

தொடர்ச்சி 21ம் பக்கம்









21.04.2019 உயிர்த்த ஞாயிறு தினத்தன்று தற்கொலைத் தாக்குதல்களில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்குமான வணக்க நிகழ்வு பரிசின் சென்ற்-சுப்ளீஸ் தேவாலயத்தில் கடந்த 28ம் திகதி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், தேவாலயத்திற்கு அருகில் படுகொலையானவர்களின் நினைவு நிகழ்வும் கண்டன ஒன்று கூடலும் இடம்பெற்றது.




பிரான்சு பரிசில் பல்நாட்டவர்களுடன் இடம்பெற்ற தொழிலாளர் நாள் எழுச்சிப் பேரணியில் சில பதிவுகள்!

# பயங்கரவாதத்தில் பலியானவர்களுக்கு

## ஆர்ஜொன்தையில் நினைவு வணக்கம்
















கடந்த 21.04.2019 ஞாயிறு ஈஸ்ரர் பண்டிகையின் போது தமிழர் தாயகமாம் கிழக்கு மாகாணத்திலும் சிறீலங்காவின் தலைநகராம் கொழும்பிலும் பயங்கரவாதிகள் நடாத்திய தற்கொலைத் தாக்குதலில் உயிர்ப்பலியான அனைத்து உயிர்களுக்குமான வணக்க நிகழ்வு 05.05.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு பரிசின் புறநகர்ப்பகுதியில் ஒன்றான ஆர்ஜொன்தை பாடசாலை மண்டபத்தில் நினைவுச்சுடர் ஏற்றி வணக்கம் செலுத்தப்பட்டது.

இந் நினைவு வணக்க நிகழ்வில் ஆர்ஜொன்தை மாநகர உதவி முதல்வர் Nicolas Bougeard அவர்களும் அவருடன் இணைந்து மாநகரசபையைச் சேர்ந்தவர்களும் பங்கு கொண்டனர். உயிர் நீத்தவர்களின் நினைவாக மண்டபத்தில் செய்யப்பட்ட நினைவு இடத்துக்கு முன்பாக சிறியவர்கள் பெரியவர்கள் சுடர் ஏற்றி மலர் கொண்டு வணக்கம் செலுத்தினர். நினைவு நிகழ்வில் மக்கள் பேரவையின் பொறுப்பாளர். திரு. திருச்சோதி அவர்களும், துணை முதல்வர் Nicolas Bougeard, மற்றும் தமிழ்ச்சோலைத் தலைமைப்பணியகம் சார்பாக திரு. அகிலன், தமிழ் இளையவர்கள் சார்பாக செல்வன். திவாகர், தமிழர் ஒருங்கிணைப்புக்குழு சார்பாகவும் பரப்புரைப் பொறுப்பாளார் திரு து.மேத்தா போன்றோர் நினைவு உரையையும், கண்டன உரையையும் ஆற்றியிருந்தனர்.

தமிழின அழிப்பின் அதியுச்ச நாளான முள்ளிவாய்க்கால் 10வது ஆண்டும் அதன் கனதிபற்றியும், தாயகத்தில் பல்கலைக்கழக மாணவர்கள்மீது அபாண்டமான பழியைச் சுமத்தி கைது செய்யப்பட்டுள்ளமையையும், அரசும் அதன் கூலிகளும், தமிழர்களை அழிப்பதையே குறியாக நிற்பதையும் வெளியுலகிற்கு பயங்கரவாதம் என்று கூறிக்கொண்டு பயங்கரவாத செயற்பாட்டுக்குத் துணைபோனவர்களை சுதந்திரமாக திரியவிட்டுக்கொண்டு, சனநாயகவழியில், அரசியல் ரீதியில் போராடுகின்ற தமிழர்களையும், மாணவர்களையும் கைது செய்துள்ளமையானது கடந்து போன அரசுகள் போன்றே தற்போதைய அரசும் மக்களின் கருத்து, பேச்சுச்சுதந்திரத்தைக் கூட பயங்கரவாதம் அதற்கு துணைபோகும் செயற்பாடாகவுமே பார்க்கின்றது என்றும், கடந்த 71 ஆண்டுகளுக்கு மேலாக இந்த தமிழின அழிப்பையும் இவ்வாறான பல ஆயிரம் படுகொலைகளை சிங்கள பௌத்த பேரினவாதம் செய்து வருகின்றது என்றும் அதில் ஒன்றுதான் இது என்பதும் ஆனால் இந்தத் தாக்குதலில் பல வெளிநாட்டுப் பிரசைகளும் உயிரை விட்டது பெரும் வேதனையானதொரு விடயம் என்பதையும் அதற்கான நன்றியாகத் தமிழர்கள்தான் அவர்களை நினைவில் வைத்து வணக்கம் செய்து வருகின்றார்கள் என்றும் குறிப்பிட் டனர்.

சமநேரத்தில் இதே பகுதியில் உள்ள Eglise Saint - Jean Marie Vianney தேவாலயத்திலும் உயிர் நீத்தவர்களின் நினைவாகவும் திருப்பலிப்பூசை ஒப்புக்கொடுக்கப் பட்டது.

### பொண்டியில்...

இவர்களுடன், பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழு பரப்புரைப்பொறுப்பாளர் திரு.மேத்தா, பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழு துணைப் பொறுப்பாளர் திரு.சுரேஸ் மற்றும் செயற்பாட்டாளர்கள், பொண்டி தமிழ்ச்சங்கப் பொறுப்பாளர் திரு.கலைச்செல்வன் மற்றும் செயற்பாட்டாளர்கள், பொண்டி தமிழ்ச்சோலை ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப்



பலரும் கலந்துகொண்டு சுடர் ஏற்றி மலர்வணக்கம் செலுத்தியிருந்தனர்.

நிறைவாக பரப்புரைப் பொறுப்பாளர் திரு.மேத்தா அவர்கள் தெரிவிக்கையில், அசாதாரண காலநிலைக்கு மத்தியிலும் வருகைதந்து சிறப்பித்திருந்த பொண்டி நகர பிதா, துணைநகர பிதா ஆகியோருக்கு நன்றியறிதலைத் தெரிவித்திருந்ததுடன், தொடர்ச்சியாக இவ்வாறான கவனயீர்ப்பு நிகழ்வுகளை ஒவ்வொரு மாநகர சபை முன்றில்களில்



நடாத்தவுள்ளதாகவும் அதற்கு மக்கள் முன்வந்து தமது ஆதரவுகளை வெளிப்படுத்தவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். அத்தோடு வரும் மே 18 அன்று நடைபெறவுள்ள மாபெரும் எழுச்சிப்பேரணியில் அனைவரும் கலந்துகொள்ளவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியிருந்தார். தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் என்ற தாரக மந்திரத்துடன் கவனயீர்ப்பு நிகழ்வு நிறைவடைந்தது.




## இனப்படுகொலை என்றால்...

இனப்படுகொலை என்றால் ஓர் இனத்தை பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ கொல்ல நினைப்பது அல்லது அழிப்பது ஆகும். இன வேற்றுமை, மத வேற்றுமை காரணமாக இனப்படுகொலைகள் உலகில் அதிகளவில் நடக்கின்றன.

இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தம் என்னும் ஐ.நா. ஆவணம் இரண்டாம் உலகப் போரின் முடிவில் 1948இல் கையெழுத்தானது. இனப்படுகொலையை ஐ.நா. பிரதிநிதிகள் சபை தடைசெய்யப்பட்ட, தண்டனைக்குரிய மற்றும் குற்றமுறை செயலாக அறிவித்தது. இதன்படி ஒரு இனத்தை பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ, மனித இனம் சார்ந்த, இன ஒதுக்கல், சமய வேற்றுமை அல்லது தேசிய இன வேற்றுமை போன்ற காரணங்களால், உடல் ரீதியாகவோ, மன ரீதியாகவோ தொல்லை கொடுப்பது, கொல்ல நினைப்பது அல்லது அழிப்பது, இனவேறுபாட்டைக் காரணங்காட்டி குழந்தைப் பிறப்பை தடுப்பது, குழந்தைகளை இடம்பெயரச் செய்வது, வேறு எவ்வகையிலாயினும் இனவேறுபாடு காட்டுவது போன்றவை குற்றமுறை செயல்களாக, இனப்படுகொலைக் குற்றங்களாக சர்வதேச தடைச் சட்டத்தின்படிக் குற்றச்செயலாகும்.

இக்கொடுஞ்செயல் புரிவோரைத் தண்டிக்க சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் 2002ல் கொண்டுவரப்பட்டது. இந்நீதிமன்றம் விசாரணை செய்து தண்டனை அளிக்க உடன்படிக்கையின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வுடன்படிக்கையில் கையொப்பமிட பெருமளவான நாடுகள் முன்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இனப்படுகொலை (Genocide) என்ற வார்த்தை முதன் முதலில் ரபேல் லேம்கின் (Raphael Lemkin) 1944ல் வெளிவந்த




Axis Rule in Occupied Europe என்ற புத்தகத்தில் பயன்படுத்தியுள்ளார்.

தொடர்ச்சி 23ம் பக்கம்




# பல்லுயிர்ப் பெருக்கம் பாதிக்கப்படுமானால்...



இயற்கைக்கு எதிரான எல்லா நடவடிக்கைகளையும் மனித இனம் தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பது வேதனைக்குரிய உண்மை. உலகத்திலுள்ள மொத்தத் தாவர வகைகள் - உயிரினங்களில் எட்டில் ஒரு பங்கு அழிவை எதிர்கொள்வதாகப் பல்வேறு ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. அதற்குக் காரணம், உயிரியல் வேற்றுமைக்கு (பயோ டைவர்சிட்டி) மனித இனம் ஏற்படுத்தும் அச்சுறுத்தல்.

ஐ.நா.வின் சார்பின் பல்வேறு நாடுகளின் உறுப்பினர்கள் அடங்கிய குழு கடந்த திங்கள்கிழமை (06.05.2019) அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது. 130 நாடுகள் அடங்கிய அந்தக் குழுவில் இந்தியாவும் இடம் பெற்றிருந்தது. பாரிஸில் வெளியிடப்பட்ட அந்த அறிக்கையின்படி, பூமியின் நிலப்பரப்பில் 75 வீத இடத்தையும், கடல் சூழலில் 40 வீத அளவிலும், உள்நாட்டு நதிகள், நீர்நிலைகள் போன்றவற்றில் 50 வீத அளவிலும் மனித இனம் மாற்றம் ஏற்படுத்தியிருக்கிறது.

அதிகரித்த நகர்மயமாக்கல், காடுகள் அழிக்கப்படுதல், விவசாய நிலப்பரப்பு அதிகரித்தல் ஆகியவற்றால் இயற்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக அந்த அறிக்கை கூறுகிறது.

உயிரிய வேற்றுமை குறித்த அந்த அறிக்கையின்படி, உடனடியாக இயற்கையைப் பாதுகாக்கும் தொடர் நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம்தான் பேரழிவு ஏற்படுவதைத் தடுக்க முடியும். சர்வதேச அளவில் மட்டுமல்லாமல், கிராம அளவிலிருந்து இதற்கான முயற்சியை மேற்கொண்டால் மிகப் பெரிய இயற்கைப் பேரழிவிலிருந்து பூவுலகைக் காப்பாற்றிவிட முடியும் என்கிறது அந்த அறிக்கை.

உலகில் ஏறத்தாழ 80 இலட்சம் உயிரினங்களும், தாவர வகைகளும் காணப்படுகின்றன. அவற்றில் 55 இலட்சம் பூச்சி வகைகளைச் சேர்ந்தவை. இவற்றில் அடுத்த பத்தாண்டுகளுக்குள் சுமார் 10 இலட்சம் உயிரினங்களும் தாவர இனங்களும் அழிவை எதிர்கொள்ளக் கூடும் என்று கருதப்படுகிறது.

இதற்கு மிக முக்கியமான காரணம், பூமியின் நிலப்பரப்பும், கடலும் அளவுக்கு அதிகமாக மனித இனத்தால் பயன்படுத்தப்படுவதுதான். பருவநிலை மாற்றம், சுற்றுச்சூழல் மாசு ஆகியவையும் காரணங்கள். உயிரினங்கள் தங்களது வாழ்விடங்களிலிருந்து வேறு வாழ்விடங்களுக்கு மாற்றப்படுவது அல்லது அகற்றப்படுவது அல்லது துரத்தப்படுவது அவற்றின் அழிவுக்குக் காரணமாகின்றன.

கடந்த 16-ஆவது நூற்றாண்டிலிருந்து குறைந்தது 680 முதுகெலும்புள்ள விலங்கினங்கள் அழிந்துவிட்டிருக்கின்றன. உணவுக்காகவும் விவசாயத்துக்காகவும் பயன்படும் வளர்ப்பு மிருகங்களில் 9 வீதம் அழிந்திருக்கின்றன. பல உயிரினங்கள் மனித இனத்தால் அவற்றின் வாழ்விடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு அழிவை எதிர்கொள்கின்றன. புதைபடிவ எரிபொருள் (ஃபாஸில் ஃபூயல்), நீர், உணவு, நிலம் ஆகியவற்றில் 2,000-க்கும் அதிகமான மனித இன ஆக்கிரமிப்பு நிகழ்வதால் இயற்கையின் மீது கடுமையான அழுத்தம் ஏற்பட்டிருக்கிறது.

உணவுப் பயிர்களின் உற்பத்தி கடந்த அரை நூற்றாண்டில் 300 வீதம் அதிகரித்திருக்கிறது. அதே நேரத்தில், மண் வளம் குறைந்துவிட்டிருப்பதால் விளைநிலப் பரப்பில் 23 வீதம் அளவில் உற்பத்திக் குறைவு காணப்படுகிறது. பூமியின் மொத்த நிலப்பரப்பில் சுரங்கங்கள் ஒரு சதவீத அளவில்தான் செயல்படுகின்றன என்றாலும், அவற்றின் எதிர்வினைகள் உயிரியல் வேற்றுமை மீது பாதிப்பை ஏற்படுத்துகின்றன. அதனால் நிலத்தடி நீரின் பரப்பிலும், உயிரினங்களின் ஆரோக்கியத்திலும் பாதிப்பு ஏற்படுத்தப்படுகிறது.

கடல் நீர் உட்பட உலகிலுள்ள நீர் வளம் அனைத்துமே மாசுபடுத்தப்படுகிறது என்கிறது அறிக்கை. ஆண்டுதோறும் 30 முதல் 40 கோடி தொன் அளவிலான தொழிற்சாலை நச்சுக் கழிவுகள் நீரில் கலக்கின்றன என்கிறது அந்தக் குழுவின் ஆய்வு. கடந்த 40 ஆண்டுகளில் நெகிழியால் ஏற்படும் மாசு 10 மடங்கு அதிகரித்திருக்கிறது.

கடந்த 20 ஆண்டுகளில் ஆண்டொன்றுக்குச் சராசரியாக கடல் நீரின் அளவு மூன்று மி.மீ. அதிகரித்திருக்கிறது. 1900-ஆம் ஆண்டு முதல் எடுத்துக்கொண்டால், கடல் நீரின் சராசரி மட்டம் 16 முதல் 21 செ.மீ. அதிகரித்திருக்கிறது. அதேபோல, புவி வெப்பம் 0.7 பாகை அதிகரித்திருக்கிறது. உலகில் வாழும் உயிரினங்களுக்கான வாழ்வாதாரம் 20 வீதம் குறைந்திருக்கிறது. அதேபோல, நீர் - நிலவாழ் உயிரினங்கள் 40 வீதம், பவளப் பாறைகள் 30 வீதம், மூன்றில் ஒரு பங்கு நீர் வாழ் உயிர்கள் ஆகியவை அச்சுறுத்தப்பட்டிருக்கின்றன.

**உலகிலுள்ள 50 நாடுகளைச் சேர்ந்த 145 வல்லுநர்கள் கடந்த மூன்று ஆண்டுகளாக நடத்திய ஆய்வின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்கும் அந்த அறிக்கை, மனித இனத்துக்குத் தெரிவிக்கும் செய்தி இதுதான் – உயிரியல் வேற்றுமையும், பல்லுயிர்ப் பெருக்கமும் பாதிக்கப்படுமானால், அதன் தொடர் வினையாக மனித இனமும் அழிவை எதிர்கொண்டாக வேண்டும்!**

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் இன்னொரு முக்கியமான செய்தி, இயற்கையைப் பேணும் ஆர்வலர்களுக்கு எதிராக நடத்தப்படும் வன்முறை குறித்த புள்ளிவிவரம். கடந்த 2002-க்கும் 2013-க்கும் இடையில் சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சனைகளில் குரலெழுப்பிய ஆயிரத்துக்கும் அதிகமான ஆர்வலர்களும், ஊடகவியலாளர்களும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இயற்கைக்கு எதிரான போக்குக்கு முற்றுப்புள்ளி வைக்க நினைப்பவர்களின் உயிருக்கு சுயநல சக்திகள் அரசின் உதவியுடன் முற்றுப்புள்ளி வைப்பதை அந்த அறிக்கை வேதனையுடன் சுட்டிக்காட்டுகிறது.

எந்தவொரு நாட்டையும் குறிப்பிட்டு அந்த அறிக்கை குற்றப்படுத்தவில்லை. சர்வதேச அளவில் உயிரியல் வேற்றுமையின் பாதிப்புக்கான காரணங்களை 15,000 அறிவியல்பூர்வமான தரவுகளுடனும், பல்வேறு அரசுகளின் தகவல் உதவியுடனும் அந்தக் குழு ஆராய்ந்தது. உலகிலுள்ள 50 நாடுகளைச் சேர்ந்த 145 வல்லுநர்கள் கடந்த மூன்று ஆண்டுகளாக நடத்திய ஆய்வின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்கும் அந்த அறிக்கை, மனித இனத்துக்குத் தெரிவிக்கும் செய்தி இதுதான் - உயிரியல் வேற்றுமையும், பல்லுயிர்ப் பெருக்கமும் பாதிக்கப்படுமானால், அதன் தொடர் வினையாக மனித இனமும் அழிவை எதிர்கொண்டாக வேண்டும்!

நன்றி - தினமணி

# வர்த்தகர் மூலதனம்

ஜெகன்

## விமானிகள் போராட்டம் முடங்கியது ஸ்காண்டிநேவியன் விமான சேவை!

ஐரோப்பிய நாடுகளில் ஸ்காண்டிநேவியன் விமான நிறுவன விமானிகள் வேலை நிறுத்தத்தினால் சுமார் 3 ஆயிரம் விமானங்களின் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. ஊதிய உயர்வு தொடர்பாக ஸ்காண்டிநேவியன் விமானிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததைத் தொடர்ந்து சுவீடன், டென்மார்க் மற்றும் நோர்வே நாடுகளில் உள்ள அந்த விமான நிறுவனத்தின் 1409 விமானிகள் கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் காரணமாக ஏற்கனவே 4000 வரையான விமானங்களின் சேவைகள் நிறுத்தப்பட்டதால் சுமார் மூன்றரை இலட்சத்துக்கும் அதிகமான பயணிகள் அவதிக்குள்ளாயினர். இந்நிலையில் 3 நாடுகளிலும் தொடர்ந்தும் விமானங்கள் இயங்காது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் வேலைநிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர நோர்வே அறிவுறுத்தி உள்ளது. மேலும் ஐரோப்பிய நாடுகளில் இயக்கப்படும் ஸ்காண்டிநேவியன் விமானிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுப்பட்டு வருகின்றனர்.




## சீனாவில் இருந்து இந்தியாவுக்கு மாற அமெரிக்க நிறுவனங்கள் திட்டம்!

இந்திய மக்களவைத் தேர்தலுக்குப் பிறகு அமெரிக்காவைச் சேர்ந்த 200 உற்பத்தி நிறுவனங்கள் தங்களது தொழிற்சாலைகளை சீனாவில் இருந்து இந்தியாவுக்கு மாற்றுவதற்கு திட்டமிட்டு வருகின்றன என்று அமெரிக்காவைச் சேர்ந்த ஆலோசனை அமைப்பு தெரிவித்துள்ளது. அமெரிக்க – இந்திய திட்டமிடல் மற்றும் ஒத்துழைப்புக்கான ஆலோசனைக் குழு (யு.எஸ்.ஐ.எஸ்.பி.எஃப்) என்ற அந்த அமைப்பின் தலைவர் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது: அமெரிக்காவைச் சேர்ந்த நிறுவனங்கள், இந்தியாவில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் அதிக அளவில் இருப்பதாக கருதுகின்றன. அந்த நிறுவனங்கள் சீனாவுக்கு மாற்றாக இந்தியாவில் முதலீடு செய்வது குறித்து எங்களிடம் ஆலோசனை கேட்டு வருகின்றன. அந்த முதலீடுகளைக் கவர்வதற்காக, இந்தியாவில் மக்களவைத் தேர்தலுக்குப் பிறகு அமையும் புதிய அரசு சில சீர்திருத்தங்களைக் கொண்டுவர வேண்டியுள்ளது. மேலும், முடிவுகளை எடுப்பதில் வெளிப்படையான நடைமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. அதாவது, அமெரிக்க நிறுவனங்களுக்கு நிலம் வழங்குவது முதல் வரி விதிப்பு வரை பல்வேறு விவகாரங்கள் குறித்து விரிவாக விவாதிக்க வேண்டியுள்ளது. அமெரிக்க நிறுவனங்கள் தங்களது உற்பத்தி தொழிற்சாலைகளை இந்தியாவில் தொடங்கினால், அதிக அளவு வேலை வாய்ப்புகள் உருவாகும் என்று அவர் தெரிவித்துள்ளார். இதுஇவ்வாறிருக்க, அமெரிக்க பொருள்களுக்கு இந்தியா அதிக வரி விதிப்பதாக, அமெரிக்க அதிபர் டிரம்ப் மீண்டும் குற்றம்சாட்டியுள்ளார்.



## இலண்டனில் அதிகரிக்கும் இந்திய முதலீடுகள்

பிரித்தானியாவின் தலைநகர் இலண்டனில் இந்தியர்கள் அதிக அளவில் கடந்த ஆண்டில் முதலீடு செய்துள்ளது புதிய ஆய்வில் தெரியவந்துள்ளது. London & Partners என்ற அமைப்பு வெளியிட்ட ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: இலண்டனில் 52 திட்டங்களில் இந்தியர்கள் அந்நிய நேரடி முதலீடு செய்துள்ளனர். வெளிநாடுகளைப் பொறுத்தவரை பிரித்தானியாதான் இந்தியர்கள் அதிக முதலீடு செய்துள்ள நாடுகளின் பட்டியலில் முதலிடம் பெற்றுள்ளது. அடுத்தபடியாக அமெரிக்கா (51 திட்டங்கள்), ஐக்கிய அரபு அமீரகம் (32 திட்டங்கள்) அடுத்தடுத்த இடங்களை வகிக்கின்றன. 2017ம் ஆண்டிலிருந்து 2018ம் ஆண்டுக்குள் இலண்டனில் இந்தியர்களின் அந்நிய நேரடி முதலீடு 255 சதவீதம் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டில் இலண்டனில் மட்டும் 60 சதவீத அந்நிய நேரடி முதலீடு அதிகரித்தது. ஒட்டுமொத்த பிரித்தானியாவிலும் 2016ம் ஆண்டில் இந்தியர்களின் அந்நிய நேரடி முதலீடு 100 சதவீதம் இருந்தது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய நிறுவனங்கள் இலண்டனில் கடந்த 10 வருடங்களில் 2.46 பில்லியன் பவுண்சுகளை முதலிட்டுள்ளது. இதனால் 5691 வேலை வாய்ப்புக்கள் ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

# மது அருந்துவதில் ஐரோப்பாவை பின் தள்ளும் ஆசியா!





சர்வதேச மருத்துவ வார இதழான லேன்செட் ஜேர்னல், சர்வதேச அளவில் மதுப் பழக்கம் எந்த அளவுக்கு அதிகரித்து வருகிறது என்பது தொடர்பாக ஒரு கட்டுரை வெளியிட்டுள்ளது. ஜேர்மனியைச் சேர்ந்த ஆய்வாளர்கள் நடத்திய அந்த ஆய்வில், 189 நாடுகளில் 1990 முதல் 2017ம் ஆண்டு வரை மதுப் பழக்கம் எந்த அளவுக்கு அதிகரித்துள்ளது, அதனால், ஒவ்வொரு நாட்டிலும் மக்கள் எந்த அளவுக்கு பாதிக்கப்படுகிறார்கள் என்பது குறித்து விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

மதுப் பழக்கம் 200–க்கும் மேற்பட்ட நோய்களையும், உடல் உபாதைகளையும் ஏற்படுத்தி ஒரு கட்டத்தில் மரணம் வரை கொண்டு செல்கிறது. இது தவிர பல்வேறு சமூகத் தீங்குகளுக்கும் மதுப் பழக்கமே காரணமாக உள்ளது. 1990ம் ஆண்டுக்கு முன் செல்வவளமிக்க நாடுகளில்தான் மது விற்பனை அதிகம் இருந்தது. ஆனால் இப்போது நடுத்தர வருமானம் பெறுவோர் அதிகம் வசிக்கும் இந்தியா, வியட்நாம், மியான்மர் உள்ளிட்ட நாடுகளில் மது நுகர்வு வேகமாக அதிகரித்து வருகிறது. இதே நிலை தொடர்ந்தால், 2030ம் ஆண்டு மது நுகர்வில் ஆசிய நாடுகள் முன்னிலை வகிக்கும். இப்போது ஐரோப்பிய நாடுகள்தான் மது நுகர்வில் முன்னிலையில் உள்ளன.

2030ம் ஆண்டில் உலக மக்கள் தொகையில் பாதி பேர் மதுப்பழக்கம் உடையவர்களாக இருப்பர். இதில் 23 சதவீதம் பேர் மாதம் ஒருமுறையாவது மது அருந்துபவர்களாக இருப்பார்கள். வட ஆபிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளில் மதுப் பழக்கம் குறைவாக உள்ளது.

கிழக்கு ஐரோப்பிய நாடான மோல்டோவாவில் மதுப் பழக்கம் அதிகம் உள்ளது. அங்கு ஒரு நபர் சராசரியாக ஆண்டுக்கு 15 லீற்றர் மது அருந்துகிறார். குவைத்தில் மதுப் பழக்கம் குறைவாக உள்ளது. அங்கு ஆண்டுக்கு ஒரு நபரின் சராசரி மது நுகர்வு 0.005 லீற்றராக உள்ளது. அஜர்பைஜான், கிர்கிஸ்தான், உக்ரைன், பெலாரஸ், ரஷ்யா ஆகிய நாடுகளில் மதுப் பழக்கம் குறைந்து வருகிறது. இந்தியா, வியட்நாம், மியான்மரில் மதுப் பழக்கம் வேகமாக அதிகரித்து வருகிறது.

இந்தியாவில் 2010 முதல் 2017ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் மது குடிக்கப்படும் அளவு 38 சதவீதமாக அதிகரித்துள்ளது. 2010ம் ஆண்டில் சராசரியாக ஒரு நபர் ஆண்டுக்கு 4.3 லீற்றர் என்ற அளவில் மது குடித்துள்ளார். இதுவே 2017ம் ஆண்டில் ஆண்டுக்கு 5.9 லீற்றராக அதிகரித்துவிட்டது.

இதே காலகட்டத்தில் அமெரிக்காவில் 9.3 லீற்றரில் இருந்து 9.8 லீற்றராகவும், சீனாவில் 7.1 லீற்றரில் இருந்து 7.4 லீற்றராகவும் மதுப்பழக்கம் அதிகரித்துள்ளது.

# சாம்பலில் இருந்து உயிர்த்தெழ...

2009ஆம் ஆண்டு வைகாசி மாதம் 26ஆம் திகதி, சேக்மஸ் அகமட் என்ற குர்திஸ் எழுத்தாளர் தமிழர்களின் சுதந்திரப் போராட்டத்தை எல்லா சுதந்திரப் போராட்டங்களையும் அளவீடு செய்கிற தங்க முத்திரை என்று குறிப்பிட்டார் என்றால் பாருங்கோவன். அந்த நேரத்தில் நாங்கள் எல்லாம் தோல்வி மனப்பான்மையில் மூழ்கியிருக்கேக்குள்ளை அந்த மனுசன் எழுதினார், ‘யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டதை நினைச்சுத் தமிழர்கள் வெட்கப்படத் தேவையில்லை: ஏனென்றால் அது புகழுக்கும், பெருமைக்குரிய தோல்வி. தாங்களும் 1925ஆம் ஆண்டு, 1938ஆம் ஆண்டு, 1946ஆம் ஆண்டு, 1975ஆம் ஆண்டு, 1988ஆம் ஆண்டு, 1991ஆம் ஆண்டு, 1999ஆம் ஆண்டு என்று ஏழு தடவைகள் தோல்வியைத் தழுவினாலும் தமிழர்கள் தழுவியது எதிரியிடம் மண்டியிடாத தோல்வி என்று அவர் எழுதினார் பிள்ளையள். அதோடை மனுசன் தன்ரை கட்டுரையை முடிக்கவில்லை பிள்ளையள். கடைசியில் மனுசன் எழுதினார்: தமிழீழ மக்களாகிய நீங்கள் புத்திக்கூர்மையும், ஆளுமையும், வள ஆற்றலும் கொண்டவர்கள். நீங்கள் மீண்டும் சாம்பலில் இருந்து உயிர்த்தெழுவீர்கள். உங்கள் கனவுகளையும், நம்பிக்கைகளையும் நீங்கள் உயிர்ப்புடன் வைத்திருக்கும் பட்சத்தில் என்றோ ஒரு நாள் உங்கள் வாக்கு சக்தி ஊடாகவோ அல்லது துப்பாக்கி ரவைகள் மூலமாகவே தமிழீழத்தை உங்களால் சாத்தியப்படுத்த முடியும்.’

பத்து வருசத்துக்கு முதல் குர்திஸ் மக்களுக்கு உதாரணமாக இருந்த நாங்கள் இன்றைக்கு குர்திஸ் மக்களை உதாரணமாகக் கொண்டு கதைக்க வேண்டிய நிலைக்கு வந்திருக்கிறம் என்றால் நாங்கள் எந்த இடத்தில் நிற்கிறம் என்பதைப் புரிந்து கொள்ளலாம் பிள்ளையள். உதைத் தான் என்ரை ஆச்சி அந்த நாட்களில் அடிக்கடி என்னட்டை சொல்கிறவா, ‘முற்றத்து மல்லிகை மணக்காது’ என்று.

எது எப்படியோ, அண்டைக்கு சேக்மஸ் அகமட் என்கிற அந்த குர்திஸ் எழுத்தாளர் எழுதின அந்த வசனம் தான் இன்றைக்கும் என்ரை மனதில் பதிஞ்சு கிடக்குது. நாங்கள் திரும்பவும் சாம்பலில் இருந்து உயிர்த்தெழ வேண்டும் பிள்ளையள். அப்பத் தான் எங்களுக்கு விடிவு கிடைக்கும். சரி, வரட்டே பிள்ளையள்?

## இனப்படுகொலை...

*1933ம் ஆண்டில் நடைபெற்ற நாடுகள் கூட்டமைப்பின்* (League of Nations)*, சட்ட அவையின் அனைத்துலகக் குற்றவியல் சட்டம் தொடர்பான மாநாட்டில், லெம்கின் ஒரு முன்மொழிவைச் செய்தார். இதற்காக அவர் காட்டுமிராண்டித் தனமான குற்றம்* (Crime of Barbarity) *உலகச் சட்டங்களுக்கு எதிரான ஒரு குற்றம் என்னும் பொருளில் கட்டுரை ஒன்றை எழுதினார். இக் குற்றம் தொடர்பான கருத்துரு பின்னர் இனப்படுகொலை தொடர்பான எண்ணமாக உருவானது. இது, 1933ம் ஆண்டில், ஈராக்கில் அசிரியர்கள் கொலை செய்யப்பட்ட அனுபவத்தில் இருந்து உருவானதாகும். லெம்கினுக்கு, ஈராக்கில் நடைபெற்ற இச் சம்பவம், முதலாம் உலகப் போரின்போது ஆர்மீனியர்கள் படுகொலை செய்யப்பட்டதை நினைவுபடுத்தியது. அந்த ஆண்டிலேயே லெம்கின், இத்தகைய காட்டுமிராண்டித்தனமான செயல்களைச் சட்டத்துக்குப் புறம்பானதாக ஆக்கும்படியான தனது முன்மொழிவை, நாடுகள் கூட்டமைப்பின் சட்ட அவையிடம் கையளித்தார். இம் முன்மொழிவு ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதுடன், அப்போது நாஸி ஜேர்மனியுடன் சமாதானம் செய்து கொள்ள விரும்பிய போலந்து அரசும், லெம்கினின் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. எனினும் லெம்கின் தொடர்ந்தும் தனது நோக்கங்களுக்காகப் பல வழிகளிலும் போராடி வந்தார்.*








## வெர்சைல் தேவாலயத்தில் நினைவேந்தல்!

கடந்த 21.04.2019 உயிர்த்த ஞாயிறு அன்று கொழும்பு நீர்கொழும்பு மற்றும் தமிழீ



ழம் மட்டக்களப்பில் இடம் பெற்ற பயங்கரவாத தாக்கு



தலில் படுகொலை செய்யப் பட்டவர்கள் நினைவாக 29.04.2019 திங்கட்கிழமை பிரான்சு வெர்சைல் பகுதியில் அமைந்துள்ள செய்ன் எலிச



பெத் தேவாலயத்தில் பிற்பகல் 15.30 மணிக்கு நடைபெற்ற நினைவேந்தலின் பின் தேவாலயத்தில் நினைவுத் திருப்பலி இடம்பெற்றது. இந்நிகழ்வில் பலர் கலந்துகொண்டு வணக்கம் செலுத்தினர்.




# பயங்கரவாதிகள் போர்...

மகிந்த ராஜபக்ச கொம்பனியைப் பொறுத்தவரை அவர்களுக்கு தமிழ் மக்களில் துளியளவும் அக்கறை இல்லை. இறுதி யுத்தத்தின் போது கொத்துக் குண்டுகள், இரசாயனக் குண்டுகளை வீசி ஒரு இலட்சம் வரையான தமிழர்களைப் படுகொலை செய்த அவர்களுக்கு இவ்வாறு நூற்றுக்கணக்கான மக்கள் இறப்பது என்பது பெரிதாகத் தெரியப்போவதில்லை.

தற்போது முஸ்லிம் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்திய காலத்தையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். இறுதி யுத்தத்தில், தமிழ் மக்கள் கொத்துக் கொத்தாகப் படுகொலை செய்யப்பட்ட 10 ஆம் ஆண்டு நினைவேந்தல் நெருங்கும் காலத்தில் இது நடத்தப்பட்டிருக்கின்றது.

கடந்த சில வருடங்களாக தமிழ் மக்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், தமிழீழ மாவீரர் தினம், தியாக தீபம் திலீபனின் நினைவு தினம் போன்றவற்றை பேரெழுச்சியாகவும் உணர்வு பூர்வமாகவும் நடத்தியிருந்தனர். இந்த மாதமும் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை உணர்வெழுச்சியுடன் அனுட்டிக்க தமிழர் தரப்பு தயாராகியிருந்தது. கடந்த வருடமே இதற்கான திட்டங்கள் போடப்பட்டன.

இவ்வாறான களச் சூழ்நிலைகளுக்கு மத்தியிலேயே முஸ்லிம் பயங்கரவாதிகளின் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டு தமிழர் தேசம் எங்கும் படையின் களம் இறக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்கள் எதைச் செய்கிறார்களோ இல்லையோ, யாழ். பல்கலைக்கழகத்தினுள் தமிழீழ விடுதலைப் புலிகளின் எந்தவொரு நினைவேந்தலோ நிகழ்வுகளோ நடத்தப்படாமல் விடப்படுவதில்லை. விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலத்தில் இருந்து இன்று வரை இந்த உணர்வெழுச்சிப் பாரம்பரியம் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுடன் கூடப் பிறந்ததாக இருந்துவருகின்றது. கடந்த வருடம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை பல்கலைக்கழக மாணவர்களே தலைமை தாங்கி நடத்தியிருந்தனர்.

இந்தச் செயற்பாடுகள் சிங்கள தேசத்தில் பெரும் கிலேசத்தை - அச்சத்தை - ஏற்படுத்தியிருந்தது. இது இப்படியே தொடருமாயின் மீண்டும் தமிழீழ விடுதலைப் போராட்டம் உயிர்பெற்றுவிடும் என ஒட்டுமொத்த சிங்களத் தலைவர்களும் அஞ்சினர். இதற்காகவே தற்போது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலின் பின்னர் பல்கலைக்கழகத்திற்குள் படையினர் புகுந்து இரு மாணவர்களைக் கைது செய்திருக்கின்றனர். யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றார்.

அதைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக பீடாதிபதிகள் மற்றும் நிர்வாகத்தை பலாலி படைத் தலைமையகத்திற்கு அழைத்த யாழ். படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹெட்டியாராட்சி, இனிமேல் பல்கலைக்கழக வளாகத்திற்குள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான செயற்பாடுகள் இடம்பெறக்கூடாது என எச்சரித்திருக்கின்றார்.

இந்த அனைத்துச் சம்பவங்களையும் நோக்குகின்றபோது பயங்கரவாதிகள் என்ற போர்வையில் இந்தக் குண்டுத் தாக்குதல்கள் ஏன் நடத்தப்பட்டன என்ற உண்மை எவரும் சொல்லித்தான் தெரியவேண்டும் என்றில்லை. ஆக, தமிழர் தேசத்தை தொடர்ந்தும் அடிமைப்படுத்தவேண்டும் என்பதிலேயே சிங்கள தேசம் குறியாக இருக்கின்றது.

இது முக்கியமான காலம். இதுவரை தமிழர் தரப்பு தமிழ் மக்களில் அக்கறையுடன் செயற்பட்டதா இல்லையா என்பது எல்லாம் இப்போது தேவையில்லை. இனிமேல் தமிழர் தரப்பு என்ன செய்யப்போகின்றது என்பதே முக்கியமான கேள்வியாக இருக்கின்றது.

தமிழ் மக்களின் பிரச்சினை வேறு, புலிகளின் பிரச்சினை வேறு எனக் கூறிய சிங்கள தேசம் அனைத்துலக நாடுகளின் ஆதரவையும் உதவியையும் பெற்று புலிகளின் ஆயுதப் போராட்டத்தை மௌனிக்கச் செய்தது. புலிகளின் ஆயுதங்கள் மௌனித்து 10 ஆண்டுகள் கடந்திருக்கின்றன. சிங்கள தேசம் தமிழ் மக்களுக்கான தீர்வை இதுவரை முன்வைக்கவில்லை.

புலிகள் தமிழ் மக்களுக்காகவே போராடினார்கள் என்பதில் யாரும் மாற்றுக் கருத்தைக் கொண்டிருக்க முடியாது. புலிகள் போராடினார்கள் என்பதற்கு அப்பால் இன விடுதலைக்காக தமிழ் மக்களே 30 ஆண்டு காலம் போராடினார்கள். இப்போது நிலைமை தலைகீழாக மாற்றப்பட்டிருக்கின்றது. 8 இடங்களில் குண்டுகள் வெடித்தவுடன் முப்பது ஆண்டு கால தமிழரின் போராட்டம் பின்தள்ளப்பட்டிருக்கின்றது.

சிங்களவர்களினதும் அவர்களுக்கு சார்பான சில மேற்குலக நாடுகளினதும் இந்தியாவினதும் பார்வையில், தற்போது தமிழர்களின் கனவுகள் சிதைக்கப்பட்டிருக்கின்றன. தமிழர்களின் இலட்சியம் குழி தோண்டிப் புதைக்கப்பட்டிருக்கின்றது. தமிழர்களின் இருப்பு கேள்விக்குறியாக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் குண்டுகள் வெடிக்காது என்றில்லை, வெடிக்கும். அதனோடு தமிழர்களுக்கான தீர்வு என்ற கதை இப்போதைக்கு எடுபடப் போவதில்லை.

சுமந்திரனும் சம்பந்தனும் கூறிய புதிய அரசமைப்பு மாற்றமும் ஏற்படப்போவதில்லை. எக்கிய ராஜ்ஜியம் என்ற சொற் பதத்திற்கான இழுபறிகளும் இனி இருக்கப்போவதில்லை. சிங்கள தேசம் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்குமே தவிர, தமிழ் மக்களில் கிஞ்சித்தும் அக்கறை எடுக்காது.

இந்த நிலையில், தமிழ் மக்கள் அடுத்து என்ன செய்யப்போகின்றார்கள்?

முஸ்லிம்களுக்கு ஆபத்து ஏற்படப்போகின்றது என்பதால் ஒட்டுமொத்த முஸ்லிம் தலைவர்களும் ஓரணியில் திரளத் தொடங்கிவிட்டனர். அவர்கள் சிங்களத்தின் காலில் வீழ்ந்து தங்களை மீண்டும் நிலைப்படுத்திக்கொள்வார்கள். ஆனால், தமிழர்கள் அவ்வாறு சிங்களத்தின் கால்களில் விழ முடியாது. தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய இனம். தனித்துவத்தை விட்டுக்கொடுக்க முடியாது.

ஆக, என்ன செய்யப்போகின்றோம்?

'நீ பெரிது நான் பெரிது என வாழாமல் நாடு பெரிதென வாழுங்கள். ஏனெனில், நாட்டின் வாழ்வு எமது நிலையற்ற வாழ்விலும் மேலானது' இது தமிழினத்தின் தேசியத் தலைவரது வேத வாக்கு. இந்த வாக்கை நாம் மெய்ப்பிக்க வேண்டும். தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் வாழ்கின்ற தமிழர்கள் ஓரணியில் திரளவேண்டும்.

கடந்த காலத்தில் களமுனையில் நின்ற, கடந்த காலத்தில் தேசியத்திற்காய் நிதி திரட்டிய, கடந்த காலத்தில் ஆயுதங்களைக் கொள்வனவு செய்த, கடந்த காலத்தில் படைத்துறைக்கு தலைமை தாங்கிய முன்னாள் தளபதிகள், போராளிகள், தேசிய செயற்பாட்டாளர்கள், அரசியல்துறைப் போராளிகள் பலர் தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் இருக்கின்றனர். தெரிந்தோ தெரியாமலோ, விரும்பியோ விரும்பாமலோ அவர்களில் பலருக்கு இடையே முரண்பாடுகள் தலைதூக்கி இருக்கின்றன. இதில் இருந்து நாம் விடுபடவேண்டும்.

ஒரே தலைவன், ஒரே இலட்சியம், ஒரே தேசம், ஒரே கொடி என்ற எண்ணக்கருக்களை எம் மனதில் சுமப்போம். அனைவரும் அணிதிரண்டு உலகின் மனச்சாட்சியை மீண்டும் ஒரு தடவை தட்டி எழுப்பவேண்டும். இப்படிச் செய்தால் மட்டுமே தமிழினத்தின் முப்பது ஆண்டு காலப் போராட்டத்திற்கும், அதற்கு விலையாகிப்போன நாற்பதாயிரத்திற்கு மேற்பட்ட மாவீரர்களுக்கும் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களுக்கும் நாம் கொடுக்கும் மதிப்பும் மரியாதையும் ஆகும். அவர்களின் இலட்சியக் கனவை எம் தோள் மேல் சுமப்போம். ஒன்றுபடுங்கள்.



ஒரு கதை

## ஒரு கை ஓசை கேட்குதா?



ஜப்பானில் ஒரு புகழ்பெற்ற ஜென் குரு அவர். அவருக்கு சுவோ என்று ஒரு சீடர். அவர் நல்ல ஆசிரியரும்கூட. ஒரு கோடையில், ஜப்பானின் தென் தீவிலிருந்து ஒரு மாணவன் வந்தான், தத்துவம் பயில.

அவனை சுவோவிடம் அனுப்பினார் தலைமை குரு. மாணவனுக்கு முதல் பரீட்சை வைத்தார் சுவோ.

'உனக்கு ஒரு கை ஓசை கேட்கிறதா?' இதுதான் அந்த சோதனை.

அவனுக்குக் கேட்கவில்லை. அந்த சோதனையில் தேர்ந்தால்தான் சுவோவிடம் பயிற்சி பெற முடியும். எனவே ஒரு கை ஓசையைக் கேட்க அவன் காத்திருந்தான்?. வாரக் கணக்கில் அல்ல? மாதக் கணக்கில் அல்ல.. ஆண்டுக் கணக்கில். ஆண்டுகள் மூன்று முழுசாய் ஓடின! ஒரு இரவில், சுவோவிடம் வந்தான் மாணவன்.

'என்னால் உங்கள் சோதனையில் தேர்ச்சி பெற முடியவில்லை. அவமானம், தர்மசங்கடத்தைச் சுமந்தபடி என் தீவுக்குச் செல்கிறேன்' என்றான்.

'தம்பி.. அவசரப்படாதே.. இன்னும் ஒரு வாரம் எடுத்துக் கொள். நன்றாக தியானம் செய்..' என்றார் சுவோ.

ஒரு வாரம் கழிந்தது. மாணவனுக்கு ஒரு கை ஓசை கேட்கவே இல்லை. மீண்டும் சுவோவிடம் வந்தான். அவர் 'இன்னும் ஒரு வாரம் முயற்சி பண்ணுப்பா' என்றார். ஆனால் அவன் முயற்சிக்கு வெற்றி கிட்டவில்லை. மேலும் ஒரு வாரம் கெடு கொடுத்தார் சுவோ. அப்போதும் விடை கிடைக்கவில்லை மாணவனுக்கு.

தொடர்ச்சி 30ம் பக்கம்

ஒரு குறள்

அறத்துப்பால் – கூடாவொழுக்கம்



கணைகொடியது யாழ்கோடு
செவ்விதாங் கனை
வினைபடு பாலாற் கொளல்.

நேராகத் தோன்றும் அம்பு,
கொலைச் செயல் புரியும்.
வளைந்து தோன்றும் யாழ்,
இசை, இன்பம் பயக்கும்.
அது போலவே மக்களின்
பண்புகளையும் அவர்களது
செயலால் மட்டுமே உணர்ந்து
கொள்ள வேண்டும்.

ஒரு மருத்துவம்

### கருஞ்சீரகத்தின் மகத்துவம் !

நம்முடைய வீடுகளில் உணுவு சமைக்கும்போது?பயன்படுத்தப்படுகிற முக்கியமான மூலிகைகளில் ஒன்று தான் கருஞ்சீரகம். தினமும் சிறிதளவு கருஞ்சீரகத்தைச் சாப்பிடுவதை வழக்கமாக வைத்துக் கொண்டால் எத்தனை நோய்களை விரட்டியடிக்க முடியும் தெரியுமா?

புற்றுநோய், நீரிழிவு நோய், இரத்த அழுத்தம், உடல் பருமன், கல்லீரல் ஆரோக்கியம் ஆகியவற்றுக்கு இந்தக் கருஞ்சீரகம் ஒன்றே போதுமானது. இதுவரையிலும் நீங்கள் தினசரி உணவில் கருஞ்சீரகத்தைப் பயன்படுத்தவில்லை என்றால் இன்றிலிருந்து ஆரம்பித்து விடுங்கள். இதை தினமும் சிறிதளவு எடுத்துக் கொள்ளலாம். உலர்ந்த அல்லது லேசாக வறுத்த கருஞ்சீரகத்தை பொடி செய்து வைத்துக்கொண்டு அதை காய்கறிகள் மற்றும் கூட்டு, பொரியல் போன்றவற்றில் தூவிப் பயன்படுத்தலாம்.




கருஞ்சீரகத்தில் உள்ள அதிக அளவிலான அன்டி அக்சிடண்ட்டுகள் நம்முடைய உடலில் உள்ள தேவையில்லாத அதிகப்படியான கொழுப்பின் அளவைக் குறைக்கிறது. அதிலும் கருஞ்சீரக எண்ணெய், பொடியை விடவும் அதிகப்படியான நன்மைகளை மிக வேகமாகக் கொடுக்கும். தினமும் உணவில் இந்த பொடியையோ அல்லது எண்ணெயையோ சேர்த்து வந்தால் மிக வேகமாக உங்களுடைய கெட்ட கொழுப்பின் அளவு குறைவதை உங்களால் நன்கு உணர முடியும். கொடிய புற்றுநோயான கணைய புற்றுநோய் செல்களைத் தாக்கி அழிக்கக்கூடியது தான் இந்த கருஞ்சீரகம். கணையப் புற்றுநோய் மட்டுமல்ல, மற்ற எல்லா வகையான புற்றுநோயையும் தாக்கி அழிக்கக்கூடிய ஆற்றல் கொண்டது.

தொடர்ச்சி 30ம் பக்கம்

ஒரு வரலாறு

## இருமுறை சர்ச்சிலைக் காப்பாற்றியவர்கள்!



பிரித்தானியாவின் மறைந்த பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் சிறுவயதில் ஏரியில் குளிக்கும்போது, ஆபத்தில் மாட்டிக் கொள்ள அவரது வீட்டுத் தோட்டக்காரர்தான் பாய்ந்து சென்று அவரைக் காப்பாற்றினார். சர்ச்சிலின் பெற்றோர் தோட்டக்காரனுக்கு நன்றி தெரிவித்து "என்ன உதவி வேண்டுமானாலும் கேள்.' என்றனர். 'ஐயா, எனது ஒரே மகனின் படிப்புக்கு உதவ வேண்டும்' என்று கோரிக்கை வைத்தார் தோட்டக்காரர். சர்ச்சிலின் பெற்றோர் ஏற்றுக்கொண்டனர்.

ஆண்டுகள் பல கடந்தன. சர்ச்சில் இங்கிலாந்து பிரதமரானார். ஒரு முறை கடுமையான நிமோனியா காய்ச்சலில் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்தபோது ஒரு மருத்துவர் சர்ச்சிலுக்கு வைத்தியம் செய்து சர்ச்சிலைக் காப்பாற்றினார்! பென்சிலினைக் கண்டுபிடித்த அலெக்ஸாண்டர் பிளமிங் தான் அம்மருத்துவர். நுண்ணுயிர் கொல்லியான சிதைநொதியைக் கண்டுபிடித்தவர். மேலும், நுண்ணுயிர் கொல்லியான பெனிசிலினை பெனிசிலியம் நொடேடம் (Penicillium notatum) என்ற பூஞ்சையிலிருந்து பிரித்தெடுத்தார்.

தொடர்ச்சி 30ம் பக்கம்

ஒரு தகவல்

## விக்டோரியா நீர்வீழ்ச்சி

இயற்கை படைத்த அற்புதங்களில் விக்டோரியா நீர்வீழ்ச்சியும் ஒன்று. ஆபிரிக்கா கண்டத்தில், சிம்பாப்வே நாட்டுக்கும் சம்பியா நாட்டுக்கும்எல்லையாக இந்த அருவி அமைந்துள்ளது. விக்டோரியா நீர்வீழ்ச்சியை முதன்



முதலில் கண்டுபிடித்துச் சொன்னவர் இங்கிலாந்தின் ஸ்கொட்லாந்து பகுதியைச் சேர்ந்த புகழ்பெற்ற சுற்றுலாப் பயணி டேவிட் லிவிங்ஸ்டோன் என்பவர். இவர் ஆபிரிக்கக் காட்டுப் பகுதியில் சுற்றி வந்தபோது, 1855ம் ஆண்டு நவம்பர் 16ம் நாள் இந்த நீர் வீழ்ச்சியைப் பார்த்தாராம். மிக உயரத்திலிருந்து விழும் இந்த நீர் வீழ்ச்சியைக் கண்டதும் ஆச்சரியப்பட்டு, இதைப் போல நான் எங்கும் கண்டதில்லை என்றாராம். இவர்தான் இந்த நீர்வீழ்ச்சிக்கு இங்கிலாந்தின் அரசியான விக்டோரியா மகாராணியின் பெயரைச் சூட்டியவர். ஆனால் ஆபிரிக்க மக்கள் இந்த நீர்வீழ்ச்சியை 'மோஷ் ஓயா துன்யா' என்றுதான் அழைக்கிறார்கள். இதற்கு இடி முழக்க புகை மண்டல அருவி என்று பொருள். அவர்கள் இந்தப் பெயரைச் சூட்டியதற்கும் ஒரு காரணம் உண்டு. இந்த அருவி ஏற்படுத்தும் இடிமுழக்கம் போன்ற ஒலியும் நீர் விழுவதால் ஏற்படும் புகைமண்டலத் துளிகளும் இந்தப் பெயர் சரிதான் என்கின்றன. இதன் அகலம் 1708 மீற்றர். உயரம் 108 மீற்றர். இதுதான் உலகின் மிகப் பெரிய நீர்வீழ்ச்சியாகக் கருதப்படுகின்றது.

தொடர்ச்சி 30ம் பக்கம்

ஒரு பொன்மொழி

**வெற்றி என்பது தோல்விகளுக்கிடையேதான் இருக்கிறது.**

- அப்துல் கலாம்

ஒரு பழமொழி

**கைக்கோளனுக்குக் காற்புண்ணும் நாய்க்குத் தலைப்புண்ணும் ஆறா.**

ஒரு ஒரு படமும் விளக்கமும்

**இல்லையென்றால் என்ன?**
**இருப்பதைக் கொண்டு வாழ்வதுதான் வாழ்க்கை.**
**எங்களுக்கு 7ம் அறிவும் வேலை செய்யும்...**



ஒரு விதை


### விடுதலைக்கு விதையாகி 30 ஆண்டுகள்

தமிழீழ எல்லைப் பிரதேசம் மணலாறு. 1977 தேர்தல் மூலம் பதவிக்கு வந்த ஜே.ஆர். அரசாங்கம், மகாவலி அபிவிருத்தி என்பதன் பேரில் மணலாறு பிரதேசத்தில் சிங்கள மக்களைக் குடியேற்றுவதற்கு திட்டங்களை வகுத்தது. மணலாறு என்ற தமிழ்ப்பதம் வெலிஓயா என்று மாற்றம் பெற



**2ம் லெப். குணம்**
**கணேசலிங்கம் ஜெகநாதன்**
**(கின்னியா )**
**03.03.1968 - 15.04.1989**

லாயிற்று. மகாவலி நீரை வட பகுதிக்குக் கொண்டு செல்வதோ அல்லது அப்பிரதேசத்தை வளமுள்ள இடமாக அபிவிருத்தி செய்வதோ சிங்கள அரசின் திட்டமாக இருக்கவில்லை. மாறாக வெலிஓயா என்ற சிங்க



**2ம் லெப். கரன்**
**வேலாயுதம் சசிகரன்**
**( சாம்பல்தீவு )**
**03.10.1971 - 15.04.1989**

ளப் பிரதேசமொன்றை உருவாக்குவதே சிறீலங்காப் பேரினவாத அரசின் திட்டம். இதன் மூலம் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தை இரு துண்டுகளாக பிரித்தெடுக்கும் பாரிய நாசகாரத் திட்டமிது. இதற்கு எதிராக இந்தப் பகுதியில் இராணுவ முகாம்களை அமைத்திருந்தது. அந்த இராணுவ முகாம்கள் மீது விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக தாக்குதலை நடத்திவந்தனர். இந்திய இராணுவத்துடன் மோதல் இடம்பெற்றுக்கொண்டிருந்த நிலையில், சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின் போது இவ்விரு போராளிகளும் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.



### ஞானசாரருக்கு பொதுமன்னிப்பு?

**எதிர்க்கும் எக்னலிகொட மனைவி**

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் சிறைதண்டனை அனுபவித்து வரும் ஞானசாரருக்கு, பொதுமன்னிப்பு வழங்குவது நீதிமன்றத்தை அவமதிப்பதாகுமென சந்தியா எக்னலிகொட தெரிவித்துள்ளார். பொதுபல சேனாவின் பொதுச்செயலாளர் ஞானசார தேரருக்கு பொதுமன்னிப்பு வழங்க வேண்டுமென பலரும் கோரி வருகின்றனர். இந்நிலையில், இது தொடர்பில் ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவின் மனைவி சந்தியா எக்னலிகொட, கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர்,ஞானசார தேரர் நீதிமன்ற அவமதிப்பு வழக்கிலேயே சிறைதண்டனை அனுபவித்து வருகிறார். எனக்கு தெரிந்த வரையில், அவரை விடுதலை செய்ய வேண்டும் என்றால், ஜனாதிபதி அவருக்கு பொதுமன்னிப்பு வழங்க வேண்டும். இதனை தவிர வேறு எந்தவகையிலும் அவரை விடுதலை செய்ய முடியாது. நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில், தண்டனை அனுபவித்து வரும் ஞானசார தேரருக்கு, பொதுமன்னிப்பு வழங்குவது என்பது, நீதிமன்றத்தை அவமதிக்கும் செயற்பாடாகவே நான் பார்க்கிறேன். நீதிமன்ற கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டும். ஞானசார தேரரை பொதுமன்னிப்பில் விடுதலை செய்வது, எனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்குமாக இருந்தால், அதற்கு எதிராக நான் நீதிமன்றம் செல்வேன் என்றார்.

இதேவேளை, ஞானசார தேரரை வெசாக் பண்டிகைக்கு முன்னர் பொதுமன்னிப்பின் பேரில் விடுதலை செய்ய வேண்டும் என்று சிங்கள ராவய அமைப்பின் பொதுச்செயலாளர் மாகல்கந்தே சுதந்த தேரர் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிய தீவிரவாத செயற்பாடுகளினால் சிங்கள, தமிழ் மக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இத்தகைய அடிப்படைவாத செயற்பாடுகளுக்கு எதிராக தைரியமாகக் குரல் கொடுக்கக்கூடியவர் ஞானசார தேரர் ஒருவர்தான் என்ற காரணத்தினால் அவரை விடுதலை செய்ய வேண்டும் என்ற வேண்டுகோள் வலுப்பெற்றுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




# சிங்களம் உருவேற்றிய இஸ்லாமிய...

இதன் பின்னர் அவர்களை சுட்டும் வெட்டியும் படுகொலை செய்தபின் அங்கிருந்த கிறிஸ்தவ தேவாலயத்தை தகர்த்து எறிந்தனர். அவர்களின் பார்வையில் கிறிஸ்தவன் வெள்ளைக்காரனாக இருந்தாலும் ஒன்றுதான் குறவர்களாக இருந்தாலும் ஒன்றுதான். சிலுவையைக் கும்பிட்டால் மரணமே தண்டனை.

இப்படியான இன்னும் பல கொடூரங்கள் இசுலாமிய அடிப்படைவாதிகளால் அரங்கேற்றப்பட்டுள்ளன.

### புலனாய்வுச் சேவையில் முஸ்லீம்கள்

சிறீலங்காவில் தற்போது பல்வேறுபட்ட புலனாய்வு சேவைகள் இயங்கி வருகின்றன. NIB, CID, TID உட்பட படைத்துறைகளில் புலனாய்வுச் சேவைகளிலும் பெருமளவு முஸ்லீம்கள் பணியாற்றுகின்றனர். அனைத்து படைத்துறை புலனாய்வுத்துறை சேவைகளும் தமிழ் மக்களை நோக்கி திருப்பிவிடப்பட்டிருந்த நிலையில் தமிழ் மொழியில் பரிட்சயமுடைய முஸ்லீம் புலனாய்வாளர்கள், சிங்களப் பேரினவாதத்திற்கு நல்வாய்ப்பாய் அமைந்தனர்.

சிறீலங்காவின் படையப் புலனாய்வுப் பிரிவில் (MIC) முஸ்லீம் புலனாய்வாளர்கள் முக்கிய இடத்தை வகித்திருந்தனர். புலிகளுடனும் இராணுவத்தினருடனும் சமநேரத்தில் உறவாடும் இரட்டை முகவர் விளையாட்டில் முஸ்லீம் புலனாய்வாளர்கள் வல்லவர்கள்.

சிறீலங்கா விமானப்படையினரால் வன்னியில் நடத்தப்பட்ட துல்லியமான தாக்குதல்களினதும் பல முக்கிய போராளிகளின் சாவின் பின்னணியிலும் முஸ்லீம் இரட்டை முகவர்களின் மறைமுக கரம் இருந்ததை காலம்பிந்தியே விடுதலைப் புலிகளின் புலனாய்வு அமைப்புக்கள் அறிந்துகொண்டிருந்தன.

இப்படியாக ஈழப்போராட்டம் நடைபெற்ற காலம் முழுவதும் அநேக முஸ்லீம்கள் சிங்களத் தரப்பிற்கே ஆதரவு கொடுத்து வந்தார்கள்.

### தௌகீத் ஜமாத்தும் - சகரான் காசிமும்

**[Tauheed Jamaat - Zahran Hasim]**

இந்த இரண்டு பெயர்களுமே இன்று பலரும் உச்சரிக்கப்படும் பெயர்களாக மாறியுள்ளன. அதுவும் 21.04.2019 அன்று நடைபெற்ற தொடர் தற்கொலைத் தாக்குதல்களின் பின்னர் இந்த இரண்டு பெயர்களும் அச்சத்துடன் நோக்கப்படுகின்றன.

தௌகீத் ஜமாத் என்ற வளர்ப்புக் குழந்தையின் தந்தை யார்?

இந்தக் கேள்விக்கு இப்போது இலகுவில் பதில் சொல்லிவிட முடியாது. ஒருவேளை இலங்கையில் நடைபெற்று வரும் புலனாய்வுகள் நேர்மையாக நடைபெற்று இறுதி அறிக்கை வெளிவரும்போது பல சந்தேகங்கள் தெளிவு பெறலாம்.

ஆனால் மிகப்பெரிய ஆச்சரியம் என்னவெனில் இலங்கைத் தீவு முழுவதும் மறைவிடங்களையும் பயிற்சி முகாம்களையும் ஆயுதக் கையிருப்புக்களையும் பதுக்கி வைத்திருந்த ஒரு அடிப்படைவாத அமைப்பு தொடர்பாக சிறீலங்காவின் புலனாய்வுச் சேவைகள் அறிந்திருக்கவில்லையா..?

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிர் நடவடிக்கை நீட்சியாக, மலேசியா வரை சென்று ஈழப்போராட்ட செயற்பாட்டாளர்களை கைது செய்து இலங்கை வரை கொண்டுவந்த NIB என்ன செய்துகொண்டிருந்தது..?

அல்லது வெளிநாடுகளுக்காக கடல் கடந்த நடவடிக்கை பிரிவு ஒன்றை வைத்திருக்கும் சிறீலங்கா இராணுவத்தின் புலனாய்வு அலகு என்ன செய்துகொண்டிருந்தது..?

இப்போது வரும் செய்திகளை நோக்கும் போது தௌகீத் ஜமாத் அமைப்பு உறுப்பினர்கள் சிறீலங்காப் படையப் புலனாய்வுப் பிரிவினால் (MIC) நெறிப்படுத்தப்பட்டதாக அறியப்படுகின்றது. அதன் உறுப்பினர்களுக்கு புலனாய்வுப் பணியாளர்களின் சம்பளப் பட்டியல் ஊடாக கொடுப்பனவுகள் வழங்கப்பட்டதாகவும் குற்றம்சாட்டப்படுகின்றது.

**தௌகீத் ஜமாத் அமைப்பு உறுப்பினர்கள் சிறீலங்காப் படையப் புலனாய்வு (MIC) பிரிவினால் நெறிப்படுத்தப்பட்டதாக அறியப்படுகின்றது. அதன் உறுப்பினர்களுக்கு புலனாய்வுப் பணியாளர்களின் சம்பளப் பட்டியல் ஊடாக கொடுப்பனவுகள் வழங்கப் பட்டதாகவும் குற்றம்சாட்டப்படுகின்றது.**



2009 மே மாதத்தின் பின்னரான, சூனியத்தன்மையைப் பயன்படுத்தி தமிழர்களைத் தட்டிவைக்க இசுலாமிய இனக்குழுவொன்றை வளர்த்தெடுக்க வேண்டிய தேவை சிங்களப் பேரினவாதிகளுக்கு இருந்தது. இதனால் தமது தத்துப்பிள்ளை தமக்கு துரோகம் செய்ய மாட்டான் என தப்புக் கணக்கு போட்ட சிங்கள புலனாய்வுப்பிரிவுகள் கண்மூடிக்கிடந்து விட்டனவோ..? என எண்ணத்தோன்றுகின்றது.

### அனைத்துலக தொடர்புகள்

ஈஸ்ரர் தின தொடர் குண்டுவெடிப்புக்களை உற்றுநோக்கும்பொது

**01) தாக்குதல் நோக்கம்**

**02) திட்டமிடல்**

**03) தெரிவு செய்யப்பட்ட இலக்குகள்**

**04) ஈடுபட்ட நபர்கள் மற்றும் அவர்களின் பின்னணி**

**05) தாக்குதல் நடத்திய விதம்** (Modus operandi)

ஆகியவற்றின் அடிப்படையிலும் இப்போது நாளந்தம் வெளிவந்துகொண்டிருக்கும் புதிய தகவல்களின் படியும் தௌகீத் ஜமாத் அமைப்பு அனைத்துலக பயங்கரவாத அமைப்பான இசுலாமிய அரசு (ISIS) என்ற அமைப்புடன் தொடர்புகளைப் பேணிவந்துள்ளது புலனாகின்றது.

பெருமளவான போதைப் பொருட்கள் படகுகள் மூலம், இந்தியக் கரைகளில் இருந்தே சிறீலங்காவிற்கு கடத்தப்படுகின்றன. இதே போன்று ஆட்களும், வெடிமருந்துகளும் ஆயுதங்களும் கடத்தப்படுவதற்கு வாய்ப்புக்கள் அதிகமுள்ளன.

தென்னிந்தியாவின் தமிழ்நாடு, கேரளா மாநிலங்களின் கடற்கரை நகரங்கள் பலவற்றிலும், இலங்கையின் புத்தளம், கற்பிட்டி, தலைமன்னார், விடத்தல்தீவு போன்ற மேற்கு கடற்கரை பிரதேசங்களிலும் கணிசமான முஸ்லீம் சமூகத்தினர் வாழ்ந்து வருவது கவனிக்கத்தக்கது. இது ஒரு சமூகத்தைப் பிரித்துப் பார்ப்பதாக அர்த்தப்படமாட்டாது. மாறாக மீனை தண்ணீரிலேயே தேட வேண்டும் என்பது நடைமுறைச் சாத்தியமானதாகும்.

### தமிழர்களை மோதவிடும் பேரினவாதம்

இலங்கையில் ஐஎஸ்ஐஎஸ்இற்கு எதிரான போரில் சிறீலங்கா அரச படைகளுடன், விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகள் இணைந்து செயற்படவுள்ளதாக தகவல்கள் வருகின்றன. கிடைக்கப்பெற்ற தகவல்கள் சரியாக இருப்பின் கிழக்கு மாகாணத்தில் தமிழ் ஊர்காவல் படையொன்று அமைக்கப்பட வாய்ப்புக்கள் உள்ளன. தான் வளர்த்துவிட்ட இசுலாமிய அடிப்படைவாதத்திற்கு எதிரான போரில் தமிழர்களையும் துணைக்களைக்கும் பேரினவாதத்தின் தந்திரோபாய திட்டத்திற்கு தமிழர்கள் ஒருபோதும் உடன்படக்கூடாது.

இசுலாமிய அடிப்படைவாதத்திற்கு எதிரான போர் எனக்கூறிக்கொண்டு சிறீலங்காப் படைகள் மேற்கொள்ளவுள்ள தான்தோன்றித்தனமான வன்முறைகளுக்கும், கொடுமைகளுக்கும் தமிழர்கள் துணை நிற்பார்களானால் தமிழின இனஅழிப்பிற்கான நீதிகோரல் அர்த்தமிழந்து போய்விடும். ஏனெனில் ஈழப்போர் நடைபெற்ற காலத்தில் முஸ்லீம் சமூகம் இழைத்த தவறை தமிழர்கள் செய்யக்கூடாது.

தான் உருவேற்றிவிட்ட இசுலாமிய பூதத்தை, சிங்களமே பார்த்துக்கொள்ளட்டும்.

# உலகின் பாதுகாப்புச் செலவீனம்
# பனிப்போருக்கு பின்னர் மிக மோசமாக அதிகரிப்பு

உலக நாடுகளின் பாதுகாப்புச் செலவீனம் குறித்து ஆராய்ந்த ஸ்டொக்ஹோம் சர்வதேச சமாதான ஆராய்ச்சி நிறுவனம் (Stockholm International Peace Research Institute (SIPRI), 2018ம் ஆண்டிற்கான மதிப்பீட்டு அறிக்கையை தற்போது வெளியிட்டுள்ளது.


இதன்படி பனிப்போருக்கு பின்னர் உலக நாடுகள் பாதுகாப்பிற்கு செலவிடும் தொகை தற்போது தான் மிக அதிகளவில் உயர்ந்திருப்பதாக தெரியவந்துள்ளது. அதாவது 2018ம் ஆண்டு உலக நாடுகள் பாதுகாப்பு செலவீனத்திற்காக 1,822 பில்லியன் டொலர்களை செலவிட்டுள்ளன. அதாவது முந்தைய ஆண்டைக் காட்டிலும் உலக நாடுகள் பாதுகாப்பிற்கு செலவிடும் தொகை 2.6 சதவீதம் அதிகரித்துள்ளது.

இதில் உலகின் இரண்டு மிகப்பெரிய பொருளாதார நாடுகளான அமெரிக்காவும், சீனாவும் தங்கள் பாதுகாப்பிற்காக அதிக தொகையை செலவிடத் தொடங்கியதன் எதிரொலியாக இந்த உயர்வு இருப்பதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஸ்டொக்ஹோம் சர்வதேச சமாதான ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள பட்டியலின்படி முதல் இடத்தை அமெரிக்கா பெற்றுள்ளது. உலக நாடுகளின் மொத்தப் பாதுகாப்புச் செலவீனத்தில் 36 சத வீதம் அமெரிக்கா மட்டுமே செலவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. சுமார் 649 பில்லியன் டொலர்களை அந்நாடு கடந்த ஆண்டு செலவிட்டுள்ளது. அமெரிக்கா செலவிடும் இந்தத் தொகையானது அடுத்த நிலையில் உள்ள 8 நாடுகள் தங்கள் பாதுகாப்பிற்கு செலவிடும் தொகைக்குச் சமமானதாகும்.

இரண்டாவது இடத்தில் சீனா உள்ளது. தொடர்ச்சியாக 24வது ஆண்டாக (1994ல் இருந்து) அந்நாடு பாதுகாப்பிற்காக செலவிடும் தொகையை அதிகரித்துள்ளது. உலக செலவீனத்தில் சீனாவின் பங்கு 13.72 சதவீதம் ஆகும். கடந்த ஆண்டு அதன் பாதுகாப்பு செலவினம் 250 பில்லியன் டொலர்கள்.

3வது இடத்தில் சவுதி அரேபியா (3.71 சதவீதம்) உள்ளது.




4வது இடத்திற்கு இந்தியா உள்ளது. கடந்த முறை 5வது இடத்தில் இருந்த இந்தியா இந்த முறை 4வது இடத்திற்கு செலவு செய்வதில் முன்னேறியுள்ளது. தனது பாதுகாப்பு வலிமையை அதிகரிக்கும் பொருட்டு புதிய போர் விமானங்கள், போர் கப்பல்கள், உலங்குவானூர்திகள், ஏவுகணைகள், ஆட்டிலெறிகள், காலாட்படை ஆயுதங்கள் உள்ளிட்ட இராணுவ தளவாடங்களில் இந்தியா தனது செலவை அதிகரித்து வருவதாகக் கூறப்படுகின்றது. உலக செலவீனத்தில் இந்தியாவின் பங்கு 3.1 சதவீதமாக உள்ளது. கடந்த ஆண்டு அதன் பாதுகாப்புச் செலவீனம் 66.5 பில்லியன் டொலர்கள்.

5வது இடத்தில் பிரான்ஸ் உள்ளது. உலக பாதுகாப்பு செலவினத்தில் 60 சத விகிதத்தை முதலிடத்தில் உள்ள இந்த ஐந்து நாடுகள் மட்டும் செலவிடுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, 6வது இடத்தில் ரஷ்யா உள்ளது. எனினும் ரஷ்யா தனது பாதுகாப்பிற்கு செலவிடுவது 2016ம் ஆண்டிலிருந்து குறைந்து வருகிறது. ரஷ்யாவின் மீதான மேற்கத்தேய நாடுகளின் பொருளாதாரத் தடை, உக்ரைன் விவகாரம் உள்ளிட்டவற்றால் ரஷ்யாவின் பாதுகாப்புச் செலவு குறைந்துள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 30ம் பக்கம்

## ஆயுத விற்பனை ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகல்!



சர்வதேச ஆயுத விற்பனை ஒப்பந்தத்திலிருந்து விலகவிருப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார். இதுகுறித்து, ஆயுத உரிமைகள் அமைப்பான தேசிய துப்பாக்கி சங்கத்தின் ஆண்டுக் கூட்டத்தில் அவர் பேசியதாவது: பாரம்பரிய ஆயுதங்களை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதை ஒழுங்குபடுத்துவதற்கான ஆயுத விற்பனை ஒப்பந்தத்தில் அமெரிக்கா கையெழுத்திட்டுள்ளது. எனினும், அந்த ஒப்பந்தம் தவறான வழிநடத்தலின் பேரில் உருவாக்கப்பட்ட ஒப்பந்தமாகும். எனவே அந்த ஒப்பந்தத்திலிருந்து விலக முடிவு செய்துள்ளேன். பொதுமக்கள் தங்கள் பாதுகாப்புக்காக ஆயுதங்கள் வைத்துக்கொள்ளும் உரிமையை அமெரிக்க அரசியல் சாசனம் வழங்கியுள்ளது. எனினும், அந்த அடிப்படை உரிமையைத் தகர்க்கும் முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால், தேசிய துப்பாக்கிச் சங்கம் போன்று ஆயுத உரிமையை நிலைநாட்டுவதற்காகப் போராடும் அமைப்புகள் இருக்கும் வரை அந்த முயற்சி வெற்றி பெறாது என்றார் அவர். அதிபர் தேர்தலில் டொனால்ட் டிரம்ப் வெற்றி பெறுவதில் தேசிய துப்பாக்கி சங்கம் கணிசமான பங்கு வகித்ததாகக் கூறப்படுகிறது.

உலக அமைதியைப் பாதுகாக்கவும், ஆயுதப் பரிமாற்றத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் நாடுகளிடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்தவும் ஐ.நா. 2013ம் ஆண்டு மேற்கொண்ட முயற்சியின் விளைவாக சர்வதேச ஆயுத விற்பனை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. 2013ல் போடப்பட்ட இந்த ஒப்பந்தம், 2014ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ம் திகதி நடைமுறைக்கு வந்தது. இந்த ஒப்பந்தமானது, சர்வதேச அளவில் மரபு ரீதியிலான ஆயுத வர்த்தகத்தை ஒழுங்குபடுத்தும். குறிப்பாக சிறிய ரக ஆயுதங்கள் தொடங்கி போர் விமானம் வரையான விற்பனைகள் இதன் கட்டுப்பாட்டுக்குள் வரும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த ஒப்பந்தத்தில் அப்போதைய அமெரிக்க அதிபர் ஒபாமா கையெழுத்திட்டார். எனினும், உலகின் மிகப் பெரிய ஆயுத ஏற்றுமதி நாடான அமெரிக்கா, இதுவரை அந்த ஒப்பந்தத்துக்கான நாடாளுமன்ற அனுமதியைப் பெற்று நடைமுறைப்படுத்தவில்லை. எனவே, நடைமுறைப்படுத்தப்படாத ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக டிரம்ப் அறிவித்துள்ளார். அத்துடன், இது தொடர்பான அதிகாரப்பூர்வ அறிக்கையை அமெரிக்காவிடம் இருந்து ஐ.நா. சபை பெற்றுக்கொள்ளும் எனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

நடைமுறைப்படுத்தப்படாத ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகுவது சர்வதேச அரசியலில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது என்று கூறப்படுகின்றது.

## உக்ரைன் மக்களுக்கு ரஷ்ய குடியுரிமை!

உக்ரைனைச் சேர்ந்தவர்களுக்கு விரைவில் ரஷ்ய குடியுரிமை அளிக்கும் சர்ச்சைக்குரிய சட்டத்தில் அதிபர் விளாடிமீர் புட்டின் கையெழுத்திட்டுள்ளார். இதுகுறித்து தகவல்கள் தெரிவிப்பதவது, உக்ரைன் மக்களுக்கு குடியுரிமை வழங்குவது தொடர்பாக புட்டின் கையெழுத்திட்ட புதிய சட்டம், அரசாணையில் கடந்த வாரம் வெளிடப்பட்டது. இந்தத் திட்டத்தின்படி, உக்ரைனைச் சேர்ந்த பல்வேறு பிரிவினரும் ரஷ்யக் குடியுமை பெறுவதற்கு சுலப வழிமுறைகளைப் பயன்படுத்துவதற்கான உரிமை வழங்கப்படுகிறது.

ஏற்கனவே, ரஷ்யாவில் தங்கியிருப்பதற்கான உரிமம் பெற்ற உக்ரைன் நாட்டவர்களுக்கும் இந்தச் சட்டம் பொருந்தும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

உக்ரைன் நாட்டவர்கள் ரஷ்ய குடிமக்களாவதை எளிமையாக்கும் இந்தச் சட்டம், ஏற்கனவே ரஷ்யாவுக்கும், உக்ரைனுக்கும் இடையே உள்ள பதற்றத்தை மேலும் அதிகரிக்கும் என்று கவலை தெரிவிக்கப்பட்ட நிலையிலும் இந்தச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. தற்போது உக்ரைனுக்கு புதிய அதிபர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலையில் புட்டின் இவ்வாறான ஒரு நடவடிக்கையை எடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, உக்ரைன் மக்கள் ரஷ்ய குடியுரிமை பெறும் நடைமுறைகளை எளிமைப்படுத்தத் திட்டமிட்டு வருவதாக அந்நாட்டு அதிபர் விளாடிமீர் புட்டின் தெரிவித்திருந்தார். பொருளாதார வழித்தடத் திட்டத்தின் (பிஆர்ஐ) இரண்டாவது மாநாடு, சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் நடைபெற்றது. இதில் பங்கேற்பதற்காக சீனா சென்றிருந்த ரஷ்ய அதிபர் புட்டின் செய்தியாளர்களிடம் கூறியபோது, உக்ரைன் நாட்டு மக்கள், ரஷ்யக் குடியுரிமையை எளிமையாகப் பெறும் நோக்கில், அதற்கான நடைமுறைகளைத் தளர்த்த ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது. ஈரான் மீது பொருளாதாரத் தடை விதித்துள்ள அமெரிக்கா, அந்நாட்டிடமிருந்து மசகு எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு இந்தியா, சீனா, துருக்கி உள்ளிட்ட நாடுகளுக்கு அளிக்கப்பட்டிருந்த 6 மாத காலஅவகாசத்தை நீடிக்காது எனத் தெரிவித்துள்ளது. இந்த விவகாரத்தை ரஷ்யா உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. உடனடியாக மசகு எண்ணெய் உற்பத்தி அளவை ரஷ்யா அதிகரிக்காது. சவூதி உள்ளிட்ட எந்த நாடும் மசகு எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்காது என்றே நினைக்கிறேன் என்றார் அவர்.

இதேவேளை, பீஜிங்கில் எகிப்து அதிபர் அப்தெல் பட்டாசிசியை ரஷ்ய அதிபர் புட்டின் சந்தித்துப் பேசினார். அப்போது எகிப்தில் ரஷ்ய பங்களிப்புடன் அணுமின் நிலையம் அமைப்பது தொடர்பாக இரு தலைவர்களும் விவாதித்துள்ளனர் என தெரியவந்துள்ளது.

## இஸ்ரோ முன்னாள் தலைவருக்கு பிரான்ஸ் கௌரவம்

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோவின் முன்னாள் தலைவர் ஏ.எஸ்.கிரண் குமாருக்கு பிரான்ஸ் அரசு, உயரிய விருதான செவாலியர் விருதை வழங்கி கௌரவித்துள்ளது. விண்வெளித் துறையில் இந்தியா – பிரான்ஸ் இடையே ஒத்துழைப்பை வலுப்படுத்தியதில் சிறப்பாக பங்காற்றியதற்காக இந்த விருது அளிக்கப்பட்டுள்ளது.



டில்லியில் உள்ள பிரான்ஸ் இல்லத்தில் கடந்த 2ம் திகதி நடைபெற்ற நிகழ்வில், பிரான்ஸ் அதிபர் இமானுவல் மக்ரோன் சார்பில், இந்தியாவுக்கான பிரான்ஸ் தூதர் அலெக்ஸாண்டர் ஸீக்ளர், கிரண் குமாருக்கு விருதை வழங்கி கௌரவித்தார். இந்த நிகழ்வில், பிரான்ஸ் விண்வெளி ஆய்வு மையத்தின் தலைவர்

தொடர்ச்சி 28ம் பக்கம்

## சூடானில் இராணுவ, மக்கள் ஆட்சி!

அண்மையில் ஆட்சி கவிழ்க்கப்பட்டு இராணுவ ஆட்சி நடைபெறும் சூடானில் இடைக்கால இராணுவ சபையின் பிரதிநிதிகள் மற்றும் மக்களாட்சி கோரி போராட்டம் நடத்தி வரும் மக்களிடையே நடந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது. அதன்படி மக்களும், இராணுவமும் இணைந்து இடைக்கால ஆட்சியை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

## எபோலா பாதிப்பால் 1,000 பேர் பலி

ஆபிரிக்காவின் கொங்கோ நாட்டில் மட்டும் எபோலா பாதிப்பு காரணமாக 1,008 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதல் அங்கு இந்தக் கிருமித் தொற்று ஏற்பட்டுள்ள நிலையில், கடந்த ஒரு வாரமாக அதன் தாக்கம் அதிகரித்துள்ளதாக உலக சுகாதார மையம் தெரிவித்துள்ளது. இது மேலும் அதிகரிக்கக்கூடும் எனவும் எச்சரித்துள்ளது. தடுப்பு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக கொங்கோ அரசு தெரிவித்துள்ளது. 2014ம் ஆண்டு மேற்கு ஆபிரிக்க பகுதியில் மட்டும் 28,600 பேருக்கு எபோலா நோய் தொற்று ஏற்பட்டதில் 11 ஆயிரம் பேர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.

## எண்ணெய் வண்டி வெடித்து 55 பேர் பலி

ஆபிரிக்காவின் நைஜர் நாட்டின் தலைநகரான நியாமி நகரின் சர்வதேச விமான நிலையம் அருகே எரிபொருள் கொண்டுசென்ற பாரவண்டி திடீரென வெடித்துச் சிதறிய விபத்தில் 55 பேர் உயிரிழந்ததாக அந்நாட்டின் உள்துறை அமைச்சகத்தின் செய்தி



தொடர்பாளர் தெரிவித்தார். எரிபொருள் எடுத்துச் சென்ற பாரவண்டி, விமான நிலையம் அருகே இருந்த தொடருந்துப் பாதையைக் கடக்கும் போது கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானது. அந்த வண்டியில் இருந்து கசிந்த எரிபொருளை சேகரிக்க மக்கள் அங்கு குவிந்தனர். அப்போது எதிர்பாராத விதமாக பாரவண்டி வெடித்துச் சிதறியதில் 55 பேர் உயிரிழந்தனர். மேலும் 36 பேர் படுகாயமடைந்தனர்.



# ஜப்பானில் வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வு

## மன்னர் பதவி துறந்தார் 10 நாட்கள் அரச விடுமுறை

உலகெங்கும் மன்னராட்சி வழக்கொழிந்து போய் ஜனநாயகம் தழைத்தோங்கும் இந்த நாட்களிலும் இன்னும் உலகநாடுகளில் சில மன்னராட்சியின் மகத்துவத்தை அடுத்தடுத்த தலைமுறைகளுக்குக் கடத்துவதை விரும்பியே ஏற்றுக்கொண்டிருக்கின்றன. அதில் பிரதான இடம் வகிப்பது இங்கிலாந்து. அங்கே பிரதமர் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் இங்கிலாந்து அரச குடும்பத்தாருக்கும் அளப்பரிய மரியாதை அளிக்கப்பட்டு வருவது உலகறிந்த உண்மை. இங்கிலாந்து தவிர கனடாவிலும் இங்கிலாந்து அரச குடும்பத்தினருக்கு அதிகாரம் உண்டு என்கிறது அந்நாட்டு அரசுமுறை நியதிகள். சில வளைகுடா நாடுகளிலும் மன்னராட்சி இன்னும் அற்றுப் போகவில்லை. மேலும் ஆபிரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் இன்னும் மன்னர்கள் இருக்கின்றார்கள். இந்த மன்னர்களில் பலருக்கும் இப்போது அரசியல் அதிகாரங்கள் இல்லையென்ற போதும் பிறவியிலேயே கிடைத்து விடக்கூடிய குலப்பெருமைகளை அவர்கள் இப்போதும் கட்டிக் காத்து வருவதோடு அவற்றுக்குண்டான வசதிகளையும், மரியாதைகளையும் அனுபவிக்கத் தவறுவதில்லை. உலகின் மன்னராட்சி முறையை வழுவாது பின்பற்றி வரும் மற்றொரு நாடு ஜப்பான்.



ஜப்பான் நாட்டின் மன்னர்களுக்கு எவ்வித அரசியல் அதிகாரமும் கிடையாது. எனினும் அவர்கள் நாட்டின் அடையாளமாகப் பார்க்கப்படுகின்றனர். அந்நாட்டை பொறுத்த வரை மன்னராக இருக்கும் நபர், தனது மரணம் வரை மன்னராகவே இருப்பார். அவரை தொடர்ந்து, அவரது வாரிசு அரியணை ஏறுவார்.



ஆனால், ஜப்பானின் 125வது மன்னரான அகிடோ, வயது மூப்பு மற்றும் உடல் நிலை காரணமாக மன்னர் பதவியை துறப்பதாக 2016ம் ஆண்டு அறிவித்தார். ஜப்பானிய அரச குடும்பத்தைப் பொருத்தவரை இதுவரை மன்னர்கள் யாரும் தாமாக முன்வந்து முடி துறந்ததில்லை. ஜப்பானின் 200 ஆண்டுகால வரலாற்றில் பதவியை துறக்கும் முதல் மன்னர் இவர் ஆவார். அங்கு கடைசியாக 1817ம் ஆண்டு, கொகக்கு என்ற மன்னர்தான் பதவி விலகி உள்ளார். அதன்பின்னர் யாரும் பதவி விலகியது இல்லை. அகிடோவின் நிலைமையை உணர்ந்து, குடும்பத்தினர் பதவி விலக ஏற்றுக்கொண்டதையடுத்து 2019ம் ஆண்டு ஏப்ரல் 30ம் திகதி, மன்னர் அகிடோ முறைப்படி பதவி விலகினார். அதனை தொடர்ந்து அவரது மகன் நருகிடோ புதிய மன்னராக பதவி ஏற்றுள்ளார்.

ஜப்பானில், ஒவ்வொரு மன்னரின் காலமும் ஒரு சகாப்தமாக வரையறுக்கப்படும். அந்த வகையில், அகிடோவின் காலம் 'ஹெய்செய்' என்று கூறப்பட்டது. அகிஹிட்டோ 1989ல் மன்னராக பதவியேற்கையில் துவங்கிய ஹெய்சே யுகம் முடிவுற்றது. தற்போது நருகிடோவின் ஆட்சிக்காலம் 'ரெய்வா' என்று அழைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரெய்வா என்றால் ஜப்பானிய மொழியில், நல்லிணக்கம் என்று பொருள். இந்த நிலையில், மன்னர் அகிடோ தனது பதவியை துறக்கும் வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வு தலைநகர் டோக்கியோவில் கடந்த 30ம் திகதி நடைபெற்றது.

முதலில் ஜப்பானின் அரச குடும்ப மூதாதையர்களுக்கு தான் பதவியில் இருந்து இறங்குவதை அறிவிக்கும் சடங்கில் மன்னர் அகிடோ பங்கேற்றார். அதனை தொடர்ந்து, மத்திய டோக்கியோவில் உள்ள அரண்மனையில் பதவியை துறக்கும் விழா நடைபெற்றது. இதில் இளவரசர் நருகிடோ, இளவரசி மசாகோ, பிரதமர் சன்ஜோ அபே உள்பட 300ற்கும் மேற்பட்ட முக்கிய பிரமுகர்கள் பங்கேற்றனர். அப்போது மன்னர் அகிடோ, தனது ஆட்சி காலத்தில் தனக்கு ஆதரவு அளித்த நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவித்து, மன்னராக தனது கடைசி உரையை நிகழ்த்தினார்.

தனது உரையில் அவர் ஜப்பான் உள்பட உலகம் முழுவதற்கும் அமைதி மற்றும் வளம் வேண்டும். என்னை அடையாளமாக ஏற்றுக்கொண்டு எனக்கு ஆதரவு வழங்கிய மக்களுக்கு நன்றியுடன் இருப்பேன் என குறிப்பிட்டார். மேலும், அடுத்துவரக்கூடிய ரெய்வா சகாப்தம் அமைதியாகவும், பயனுள்ளதாகவும் இருக்கும் என நம்புகிறேன். இந்த உலகில் உள்ள மக்களின் நலன் மற்றும் மகிழ்ச்சிக்காக வேண்டிக் கொள்கிறேன் எனவும் அவர் தெரிவித்தார். அதன் பிறகு புனித வாள், ஆபரணங்கள் உள்ளிட்டவற்றை அகிடோ ஒப்படைத்தார். அத்துடன் அந்த நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

இதனையடுத்து மறுநாள் முதலாம் திகதி ஜப்பானின் 126வது மன்னராக நருஹிட்டோ பதவியேற்றார். அகிஹிட்டோ மூத்த மகனான 89 வயதான பட்டத்து இளவரசர் நருஹிட்டோ சம்பிரதாயப்படி பதவியேற்றார்.

பதவியேற்பின் பின்னர் ஆற்றிய உரையில், மக்களின் மகிழ்ச்சி, நாட்டின் முன்னேற்றம் மற்றும் உலக சமாதானம் ஆகியவற்றை தான் எதிர்பார்ப்பதாக கூறினார். புதிய மன்னர் பதவியேற்பை முன்னிட்டு அந்நாட்டில் பத்து நாட்களுக்கு பொது விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது. கடுமையான உழைப்புக்குப் பெயர் பெற்ற ஜப்பானில் அரசு விடுமுறைகள் மிகவும் அரிதாகவே அளிக்கப்படுவதாகக் கூறப்படுவது உண்டு. இந்த விடுமுறையால் பொதுப் போக்குவரத்துக்கள் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமான சேவைகள் பெரும் வருமானத்தை ஈட்டியுள்ளதாக கூறப்படுகின்றது.

## தாய்லாந்து மன்னர் 4வது திருமணம்

### பெண் பாதுகாப்பு அதிகாரி ராசகுமாரியானார்

தாய்லாந்து மன்னர் வஜிரா லோங்கார்ன் தனது பெண் பாதுகாப்பு அதிகாரியை 4வதாக திருமணம் செய்து கொண்டுள்ளார். சுஜிதா திட்ஜாய் என்ற அந்த பெண் உடனடியாக தாய்லாந்து ராசகுமாரியாக (தாய்லாந்து மொழியிலும் தமிழில் உள்ளதுபோல் ராசகுமாரி என்றே கூறப்படுகின்றது) அறிவிக்கப்பட்டார். தாய்



லாந்தில் 70 ஆண்டுகளாக ஆட்சி புரிந்து வந்த மன்னர் அதுல்யதேஜ் 2016ம் ஆண்டு மரணமடைந்தார். தனது தந்தையின் மறைவுக்கு பின் தாய்லாந்து நாட்டின் 10வது ராமா என்ற அழைக்கப்படும் 66 வயதான வஜிரா லோங்கார்ன் புதிய மன்னராக பொறுப்பேற்றார்.



கடந்த 4ம் திகதி வஜிரா லோங்கார்ன் அதிகாரப்பூர்வமாக பட்டம் சூட்டும் விழா நடைபெற்ற நிலையில், அவர் தனது பெண் பாதுகாப்பு அதிகாரியை அதிரடியாகத் திருமணம் செய்து கொண்டுள்ளார். மேலும் அந்த பெண் உடனடியாக தாய்லாந்து நாட்டின் ராசகுமாரியாக அறிவிக்கப்பட்டுள்ளார். முன்னாள் தாய் ஏர்வேஸ் நிறுவனத்தில் விமானப் பணிப் பெண்ணாக பணியாற்றிய சுஜிதா திட்ஜாய் பின்னர் மன்னரின் பாதுகாப்பு பிரிவில் அதிகாரியாக பணியாற்றினார். அப்போது மன்னருக்கும் சுஜிதா திட்ஜாய்க்கும் காதல் ஏற்பட்டதாகவும், அதன் விளைவாக இந்த திருமணம் நடைபெற்றுள்ளதாகவும் அரண்மனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. திருமண விழாவில், தாய்லாந்தின் இராணுவ ஆட்சியாளரான பிராயுத் சான் ஒச்சா உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் கலந்து கொண்டனர். இவர்களது திருமணம் புத்த மதம் மற்றும் இந்து முறைப்படி பொட்டு வைத்து விமரிசையாக நடந்தது.

மன்னர் வஜிரா லோங்கார்ன் 3 முறை திருமணம் செய்து கொண்டு விவாகரத்து பெற்றவர் என்பதும் அவருக்கு 7 பிள்ளைகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.






ஜான்–ஈவ்–லகால் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இஸ்ரோ என்றழைக்கப்படும் இந்திய விண்வெளி ஆய்வு மையத்தில் பணியாற்றிய கிரண்குமார், 2015ம் ஆண்டு முதல் 2018 வரை, இஸ்ரோவின் தலைவராகப் பதவி வகித்தார். இந்தக் காலகட்டத்தில் விண்வெளித் துறையில் இந்தியா – பிரான்ஸ் இடையே ஒத்துழைப்பு மேம்படுவற்கு கிரண் குமார் முக்கியப் பங்காற்றினார் என்று இதுதொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்க தடைப்பட்டியலில் பாகிஸ்தானும் கானாவும் சேர்ந்தது!

உலகின் பல்வேறு நாடுகளையும் சேர்ந்தவர்கள் கல்வி, வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களை காட்டி அமெரிக்காவிற்கு விசா பெற்று செல்கிறார்கள். ஆனால் விசாக் காலம் முடிந்தும் அவர்களில் பலரும் தாய்நாடு திரும்புவதில்லை. அவர்கள் அமெரிக்காவிலேயே தங்கி விடுகின்றனர். இது அமெரிக்காவுக்கு பெரும் சுமையாக அமைகிறது. அப்படி காலம் கடந்து அமெரிக்காவில் தங்கியுள்ள பிற நாட்டினர்களை அவர்களது சொந்த நாட்டுக்கு நாடு கடத்துவதற்கு அமெரிக்கா நடவடிக்கை எடுப்பது வாடிக்கை.

இப்படி ஏராளமான பாகிஸ்தானியர்கள் அமெரிக்காவில் விசா காலம் முடிந்து இன்னும் அங்கு தங்கி உள்ளனர். அவர்களை நாடு கடத்த அமெரிக்கா நடவடிக்கை எடுத்தது. ஆனால் பாகிஸ்தான், கானா நாடுகள் தம் நாட்டு மக்களை அமெரிக்காவிடம் இருந்து திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு மறுத்து விட்டன. இது அமெரிக்காவுக்கு சினத்தை ஏற்படுத்தி உள்ளது.

இப்படி ஏற்கனவே கயானா, கம்பியா, கம்போடியா, எரித்ரியா, கினியா, சியரா லியோன், மியன்மார், லாவோஸ் ஆகிய 8 நாடுகள் செய்தபோது, அந்த நாடுகளை அமெரிக்கா தடை பட்டியலில் சேர்த்தது. இப்போது இந்த நாடுகளுடன் 9வது நாடாகச் சேர்த்து பாகிஸ்தானையும் அத்துடன் 10வது நாடாக கானாவையும் தடைப்பட்டியலில் அமெரிக்கா சேர்த்துள்ளது. இதற்கான நடவடிக்கை கடந்த மாதம் 22ம் திகதி எடுக்கப்பட்டுள்ளது.

இனி பாகிஸ்தானியர்கள், கானா நாட்டவர்கள் அமெரிக்க விசாவைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதே நேரத்தில் பாகிஸ்தானுடனான தூதரக உறவில் மாற்றம் ஏதும் இல்லை என்று அமெரிக்கா அறிவித்துள்ளது. அமெரிக்காவின் குடிவரவு மற்றும் தேசிய சட்டம் பிரிவு 243 (டி) படி, தடை விதிக்கப்பட்டுள்ள நாடுகளுக்கு வெளியுறவுத்துறை அமைச்சர் மற்றும் குடியேற்ற விசாக்கள் வழங்குவதை நிறுத்தி விடுவார். எனவே பாகிஸ்தானியர்கள் அமெரிக்க விசா பெற முடியாத அவலம் ஏற்படும். இதுதொடர்பாக அமெரிக்காவுக்கான பாகிஸ்தான் முன்னாள் தூதர் உசேன் ஹக்கானி கருத்து தெரிவிக்கையில், பாகிஸ்தானை அமெரிக்கா தடை பட்டியலில் சேர்த்துள்ளதால் பாகிஸ்தானியர்களுக்கு சிக்கல். நிலைமை கடினமாகி விடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னர் இந்தியர்கள்கூட கடந்த காலத்தில் இப்படி விசா காலம் முடிந்தும் அமெரிக்காவில் தங்கி இருந்த நிலையில் அவர்கள் நாடு கடத்தப்பட்டனர். இந்தியாவில் இருந்து விமானங்கள் போய் அவர்களை மீட்டுக் கொண்டு வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐரோப்பிய தேர்தல்களில் பிரித்தானியா பங்கேற்கும்

ஐரோப்பிய தேர்தல்களுக்கு முன்னர், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா விலகுகின்ற

தொடர்ச்சி 29ம் பக்கம்

# பாதுகாப்பு இரகசியங்கள் கசிவு

## பிரித்தானிய பாதுகாப்புத்துறை அமைச்சர் பதவி நீக்கம் முதல் பெண் பாதுகாப்பு செயலாளர் நியமனம்

பிரித்தானிய அரசின் திட்டம் குறித்த இரகசிய தகவல்களை கசியவிட்ட குற்றச்சாட்டில், அந்நாட்டு பாதுகாப்பு செயலாளர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். பாதுகாப்பு செயலாளர் கெவின் வில்லியம்சனை பிரித்தானியப் பிரதமர் தெரசா மே பதவி நீக்கியுள்ளார். சீனாவின் பன்னாட்டு தொலைத்தொடர்பு





நிறுவனமாக ஹுவாய் மூலமாக பிரித்தானியாவில் 5ஜீ என்னும் 5ம் தலைமுறை தொலைத்தொடர்பு சேவையை வழங்க பிரதமர் தெரசா மே–இன் அரசு திட்டமிட்டது. இந்த நிலையில், இந்த திட்டம் குறித்த அரசின் உயர்மட்ட இரகசிய தகவல்கள் தேசிய பாதுகாப்பு சபை வாயிலாக கசிந்ததாக செய்திகள் பரவின. 5ஜீ தொழிநுட்பத்தை மேம்படுத்த சீனாவின் ஹுவாவே நிறுவனத்துக்கு நிபந்தனையுடன் கூடிய அனுமதி வழங்கப்பட்டது தொடர்பாக தேசியப் பாதுகாப்பு சபையில் விவாதிக்கப்பட்ட தகவலை கசிய விட்டமை தொடர்பாக பாதுகாப்பு அமைச்சர் கவின் வில்லியம்சன் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட போதும், அதை அவர் திட்டவட்டமாக மறுத்தார்.

இந்த நிலையில், அரசின் திட்டம் குறித்த இரகசியத் தகவல்களை கசிய விட்ட குற்றச்சாட்டின் பேரில், கவின் வில்லியம்சனை பிரதமர் தெரசா மே பதவியில் இருந்து நீக்கியுள்ளார். அதனை தொடர்ந்து, பென்னி மோர்டன்ட் Penny Mordaunt புதிய பாதுகாப்பு செயலாளராக பொறுப்பேற்றுள்ளார். இவர் பிரித்தானியாவின் முதல் பெண் பாதுகாப்பு செயலாளர் என்ற சிறப்பையும் இதன் மூலம் பெற்றுள்ளார். கொன்சர்வேட்டிவ் கட்சியை சேர்ந்த இவர், 2010ம் ஆண்டு நாடாளுமன்றத்திற்குத் தெரிவானார். 2017ம் ஆண்டு முதல் சர்வதேச அபிவிருத்தி அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றி வந்தார்.

இதற்கிடையில் அமைச்சரவைச் செயலாளரும், இராணுவ பாதுகாப்பு ஆலோசகருமான சர் மார்க் செட்வில், இரகசிய தகவல்களை கசிய விட்ட விவகாரம் தொடர்பாக விசாரணையை தொடங்கியுள்ளார். எனினும் தன் மீதான குற்றச்சாட்டை தொடர்ந்து மறுத்து வரும் கவின் வில்லியம்சன், இது பழிவாங்கும் நடவடிக்கை என தெரிவித்துள்ளார்.

இதுஇவ்வாறிருக்க, பிரித்தானியாவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரை மக்களே பதவி நீக்கம் செய்துள்ளனர். 35 வயதான ஃபியோனோ ஒனாசான்யா (Fiona Onasanya) 2017ம் ஆண்டு பீட்டர்ப்ரோ தொகுதியில் இருந்து தொழிலாளர் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக தேர்வானார். இந்த நிலையிலோ காரை வேகமாக இயக்கியது தொடர்பான வழக்கில் ஃபியோனோ ஒனாசான்யா உண்மைக்கு மாறான தகவலை கூறியது தெரிய வந்ததால் கடந்த ஜனவரி மாதம் அவர் கைது செய்யப்பட்டார். உடனடியாக தொழிலாளர் கட்சியில் இருந்து அவர் நீக்கப்பட்டார். எனவே அவர் சுயேச்சை நாடாளுமன்ற உறுப்பினராக செயல்பட்டு வந்தார். இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினரை மக்களே திரும்பபெறும் சட்டத்தின் படி பீட்டர்ப்ரோ தொகுதியில் வாக்கெடுப்பு நடைபெற்றது. ஃபியோனோ ஒனாசான்யாவை திரும்பப் பெறும் மனுவில் 27.64 வீதமான பேர் கையெழுத்திட்டனர். எனவே அவர் பதவியை இழந்ததாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.



அந்த தொகுதிக்கு இடைத் தேர்தல் நடத்துவதற்கான பணிகளும் தொடங்கியுள்ளது. பிரித்தானியாவில் 2015ம் ஆண்டு அப்போதைய பிரதமர் டேவிட் கமரூன் மக்களே நாடாளுமன்ற உறுப்பினரை திரும்பப்பெறும் சட்டத்தை கொண்டு வந்தார். குற்றவழக்குகளில் கைது செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களை மக்களே பதவி நீக்கம் அதிகாரம் வழங்கப்பட்டது. 10 வீதத்திற்கும் அதிகமான வாக்காளர்கள் ஆதரவு இருந்தால் மட்டுமே நாடாளுமன்ற உறுப்பினரை பதவி நீக்கம் செய்ய

(பிரெக்சிற்) ஒப்பந்தமானது இணங்கப்பட்டு விடும் என பிரித்தானியா அரசாங்கம் எதிர்பார்க்கின்றபோதும், ஐரோப்பிய தேர்தல்களை பிரித்தானியா நடத்த வேண்டும் என பிரித்தானிய அமைச்சரவை அலுவலகத்தின் அமைச்சர் டேவிட் லிடிங்டன் தெரிவித்துள்ளார். ஐரோப்பியத் தேர்தல்களுக்கான வாக்களிப்பானது எதிர்வரும் 23ம் திகதி இடம்பெறவுள்ள நிலையில், முதலில் பிரெக்சிற் ஒப்பந்தத்துக்கு பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணங்கினால், ஐரோப்பிய தேர்தல்களில் பிரித்தானியா பங்கேற்கத் தேவையில்லை எனப் பிரித்தானியப் பிரதமர் தெரேசா மே தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், ஐரோப்பிய தேர்தல் வாக்களிப்புத் தினத்துக்கு முன்னர், பிரெக்சிற் ஒப்பந்தத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணங்கும் நடைமுறையை முடித்துக் கொள்வது சாத்தியமில்லை என வருத்தத்துடன் தற்போது தெரிவித்துள்ள டேவிட் லிடிங்டன், சட்டரீதியாக ஐரோப்பிய தேர்தல்களில் பிரித்தானியா பங்கேற்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து இவ்வாண்டு மார்ச் 29ம் திகதி பிரித்தானியா வெளியேறுவதாக இருந்தபோதும், பிரித்தானியா நாடாளுமன்றத்தில் எந்தவொரு ஒப்பந்தமும் இணங்கப்படாத நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா வெளியேறுவதை இவ்வாண்டு ஒக்டோபர் 31ம் திகதி வரை ஐரோப்பிய ஒன்றியம் நீடித்திருந்தது.

குறித்த திகதிக்கு முன்னரும் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா வெளியேறலாம் என்றபோதும், இம்மாதம் 23ம் திகதிக்கு முன்னர் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா வெளியேறாவிட்டால், ஐரோப்பிய ரீதியாக இடம்பெறும் நாடாளுமன்றத் தேர்தலில் பிரித்தானியா பங்கேற்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஆளும், எதிர்க்கட்சிகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள பிரித்தானிய உள்ளாட்சித் தேர்தல்

பிரித்தானியாவில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் ஆளும் கொன்சர்வேடிவ் கட்சியும், முக்கிய எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியும் பின்னடைவைச் சந்தித்துள்ளன. பிரெக்ஸிட் விவகாரத்தில் தொடர்ந்து நிலவி வரும் இழுபறியான நிலையே இரு கட்சிகளுக்கும் உள்ளாட்சித் தேர்தலில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இது அந்த இரு கட்சித் தலைவர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பிரித்தானியாவிலுள்ள 248 நகர சபைகள், வடக்கு அயர்லாந்து பகுதியில் உள்ள 6 நகர பிதாக்களுக்கான பதவியிடங்கள், 11 நகர சபைகள் மற்றும் மாவட்ட சபைகள் பதவியிடங்களுக்கு கடந்த 2ம் திகதழ தேர்தல் நடைபெற்றது. இதில் பிரித்தானியாவின் மூன்றாவது பெரிய கட்சியும், தாராளமயக் கொள்கையை முன்னெடுக்கும் கட்சியுமான லிபரல் ஜனநாயகக் கட்சி குறிப்பிடத்தக்க இடங்களில் வெற்றி பெற்றது. சிறிய கட்சியான பசுமைக் கட்சி அதிக அளவிலான நகரசபை உறுப்பினர்களைப் பெற்றுள்ளது.

அதே நேரத்தில் தீவிர வலதுசாரிக் கட்சியான யூகே சுதந்திரக் கட்சி (யூகேஐபி) அதிக இடங்களை இழந்துவிட்டது. வெற்றி குறித்து கருத்து தெரிவித்த லிபரல் ஜனநாயகக் கட்சியின் தலைவர் சர் வின்சி கேபில், எங்கள் கட்சிக்கு கிடைத்துள்ள ஒவ்வொரு வாக்கும் பிரெக்ஸிட்டுக்கு எதிரானவை. ஆளும் கொன்சர்வேடிவ் கட்சி மீது தங்களுக்கு நம்பிக்கையில்லை என்பதையும் மக்கள் தெளிவாக உணர்த்திவிட்டனர். அதே நேரத்தில் அவர்கள் பிரதான எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியையும் விரும்பவில்லை என்றார்.

தேர்தல் முடிவுக்குப் பிறகு தனது கொன்சர்வேடிவ் கட்சிக் கூட்டத்தில் பேசிய பிரதமர் தெரஸா மே, தேர்தல்களை எதிர்கொள்வது இப்போது நமக்கு கடினமானதாக மாறி வருகிறது. தேர்தல் முடிவுகள் சவாலானதாக உள்ளன. அதே நேரத்தில் முக்கிய எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியும் பின்னடைவைச் சந்தித்துள்ளது என்றார். அப்போது கூட்டத்தில் பங்கேற்ற சிலர், பிரதமர் பதவியில் இருந்து வெளியேறுங்கள் என்று தெரஸா மேயை நோக்கி கோசமிட்டனர்.

### ரம்ழான் நோன்பு சீனாவில் தடை

#### முஸ்லிம்கள் வசிக்கும் பகுதிகளில் உணவகங்களைத் திறக்கவும் உத்தரவு

சீனாவில் அரசு ஊழியர்கள், மாணவர்கள் ரம்ழான் நோன்பு மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் இஸ்லாமியர்கள் அதிகம் வசிக்கும் ஸிங்ஜியாங் மாகாணத்தில் இயங்கும் அனைத்து உணவகங்களையும் திறந்து வைக்க வேண்டும் என்றும் சீன அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இஸ்லாமியர்கள் தங்களின் புனித நோன்பான ரம்ழானில் அதிகாலை முதல் மாலை வரை நோன்பு மேற்கொள்வது வழக்கம். இந்த ஆண்டுக்கான ரம்ழான் ஆரம்பித்துள்ள நிலையில், சீனாவின் ஸிங்ஜியாங் மாகாணத்தில் இஸ்லாமிய மதத்தை சேர்ந்த அரசு ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் நோன்பு மேற்கொள்ள சீன அரசினால் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதோடு மட்டும் அல்லாமல் அம்மாகாணத்தில் இயங்கிவரும் அனைத்து உணவகங்களையும் திறந்து வைக்க வேண்டும் என்றும் அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக பேசிய அரசு அதிகாரி ஒருவர் ரம்ழான் மாதத்தில் இஸ்லாமியர்கள் நோன்பு மேற்கொள்ள கூடாது, இறை வழிபாடு மேற்கொள்ள கூடாது மேலும் மதம் சார்ந்த எந்த நடவடிக்கையிலும் ஈடுபடக் கூடாது என்று ஆலோசனை கூட்டத்திற்கு பிறகு உள்ளூர் அரசு வலைதளத்தில் பதிவிடப்பட்டுள்ளதாக கூறினார்.

ஒவ்வொரு ஆண்டும் ஸிங்ஜியாங் மாகாணத்தில் இஸ்லாமியர்கள் நோன்பு மேற்கொள்ள அரசு தடை விதிப்பதாக விமர்சனங்கள் எழுந்து வருகின்றன. இஸ்லாமியர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டால் சீனாவில் பதற்றமான நிலை ஏற்பட்டுள்ளதாக யுகுர் இஸ்லாமிய உரிமை குழு தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக சமீககாலமாக ஏற்பட்ட மோதல்களில் நூற்றுக்கானோர் கொல்லப்பட்டுள்ளதாகவும் அந்த குழு கூறியுள்ளது.

ஆனால் சீன அரசோ ஸிங்ஜியாங்கில் தீவிரவாத அச்சுறுத்தல் இருப்பதாகவும் மத தீவிரவாதம் வன்முறைகளை தூண்டுவதாகவும் குற்றம்சாட்டியுள்ளது. யுகுர்ஸை வலுக்கட்டாயமாக விரட்டியடிக்க வேண்டும் என்பதே நோன்பு நோற்க தடைவிதிக்கும் சீனாவின் நோக்கம் என்று நாடுகடத்தப்பட்ட உலக உய்குர் கொங்கிரசின் செய்தித் தொடர்பாளர் தில்சாத் ரெக்ஸிட் தெரிவித்துள்ளார். ஸிங்ஜியாங்கில் உள்ள பல பாடசாலைகளின் வலைதளங்களிலும் இஸ்லாமிய மாணவர்கள் நோன்பு நோற்க தடைவிதித்து அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

### அமெரிக்கா ஏவுகணை விற்பனை

ஐக்கிய அரபு அமீரகத்துக்கும், ஃபாரைனுக்கும் அமெரிக்கா 5 பில்லியன் டொலருக்கும் அதிகமான பட்ரியாட் ஏவுகணைகளை விற்பனை செய்ய உள்ளது. இதற்கான ஒப்புதலை அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் அளித்துள்ளது.

### இராணுவத்தில் அதிகரிக்கும் பாலியல் குற்றங்கள்

அமெரிக்க இராணுவத்தில் பாலியல் குற்றங்கள் அதிகரித்துள்ளதாக தரவுகள் கூறுகின்றன. கடந்தாண்டு எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்



தையும் கடந்து குற்றங்கள் அதிகரித்துள்ளன. 2016ம் ஆண்டு 14,900 என்ற அளவில் இருந்த முறையற்ற பாலியல் உறவுகள், 2018ம் ஆண்டு 20,500 என்ற அளவில் உள்ளது.

குறிப்பாக பணிக்கு எடுக்கப்படும் 17 – 24 வயதுடைய பெண்கள் அதிகளவில் ஆபத்தில் இருப்பதாக தகவல்கள் கூறுகின்றன. மூன்றில் ஒரு பங்கு குற்றத்திற்கு மதுபானமே காரணமாக இருப்பதாகக் கூறப்படுக்கிறது.

### பூனையின் அஸ்தி விண்வெளிக்கு!

அமெரிக்காவை சேர்ந்த ஒருவர், உயிரிழந்த தனது வளர்ப்பு பூனையின் அஸ்தியை விண்வெளிக்கு அனுப்பி வைத்து பிரமாண்ட இறுதிசடங்கு நடத்த உள்ளார். அமெரிக்காவின் ஓரேகான் பகுதியை சேர்ந்த ஸ்டன்ட் மன்ட் என்பவர், பிக்காச்சு என்று பெயரிட்டு பூனை ஒன்றை வளர்த்து வந்தார். பூனை கடந்த இரு மாதங்களுக்கு முன் உயிரிழந்த நிலையில், அதன் அஸ்தியை விண்வெளிக்கு அனுப்பி வைத்து பிரமாண்ட இறுதி சடங்கு நடத்த தீர்மானித்தார். இதற்கென பலரிடம் நிதி திரட்டிய அவர், தனது சேமிப்பு பணத்தையும் சேர்த்து, பூனையின் அஸ்தியை விண்வெளிக்கு அனுப்புவதற்காக செலஸ்டிஸ் பெட்ஸ் நிறுவனத்திடம் அனுமதிச்சீட்டு வாங்கியுள்ளார்.



## அமெரிக்கா – ஈரா...

இதேவேளை, ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை சீனா மிகக் கடுமையாக எதிர்த்து வருகின்றது. ஈரான் மீது அமெரிக்கா ஒருதலைப்பட்சமாக விதித்து வரும் தடைகளை சீனா மிகக் கடுமையாக எதிர்ப்பதாகவும், இந்த விவகாரத்தில் இரு தரப்பினரும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் பேச்சுவார்த்தைக்கான முக்கியத்துவத்தை அதிகரித்து, பதற்றத்தைத் தவிர்க்க வேண்டும் என்றும் சீன வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் கெங் வாங் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தைப் பாதுகாப்பதில், ரஷ்ய அதிபர் விளாடுமீர் புட்டின் உறுதியாக உள்ளதாகவும், அந்த நாட்டின் மீது அர்த்தமற்ற அழுத்தத்தைத் திணிப்பதால் ஏற்படக்கூடிய எதிர்விளைவுகள் குறித்து அவர் ஏற்கனவே எச்சரித்துள்ளார் என்றும் கூறியுள்ள ரஷ்ய அரசு செய்தித் தொடர்பாளர் டிமித்ரி பெஸ்கோவ், இந்த விவகாரத் துக்குத் தீர்வு காண, பிற ஐரோப்பிய நாடுகளுடன் ஒருங்கிணைந்து பணியாற்றவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

இதற்கிடையே, அணு ஆயுதங்கள் தயாரிப்பதற்கான தங்களது திட்டத்தை ஈரான் தொடர்ந்து நிறைவேற்ற முடிவு செய்துள்ளதாகவும் ஆனால் அந்த நாடு அணு ஆயுத பலம் பெறுவதற்கு ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என்று ஈரானின் பரமவைரி நாடான இஸ்ரேலின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு சூளுரைத்துள்ளார்.?

இவ்வாறான தமக்கு ஆதரவான, எதிரான கருத்துக்களுக்கு பதிலளிக்கும் வகையில் கருத்து வெளியிட்டுள்ள ஈரான் அதிபர் ஹஸன் ரௌஹானி, அமெரிக்கா விலகியதால் நோய்வாய்ப்பட்ட அணுசக்தி ஒப்பந்தம், கடந்த ஓராண்டாக படுக்கையில் கிடத்தப்பட்டுள்ளது. இதனால், எந்த முன்னேற்றமும் இல்லை. அதன் காரணமாகத்தான் நிபந்தனைகள் புறக்கணிப்பு என்ற அறுவை சிகிச்சை செய்துள்ளோம். இந்த சிகிச்சை அணுசக்தி ஒப்பந்தத்தைக் காப்பாற்றுவதற்குத்தானே தவிர, மரிக்கச் செய்வதற்கில்லை என்று கூறியுள்ளார். இதனை அமெரிக்கா எவ்வாறு புரிந்து கொள்ளப் போகின்றது என்பது தெரியவில்லை.




# அவலச் சாவுகளும்...

அவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். படுகாயமடைந்தவர்களில் ந.வளர்மதி, செ.குமார் மற்றும் கணேசமூர்த்தி ஆகியோர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். கொடிகாமம் பாலாவி மற்றும் கெற்பேலிப் பகுதிகளில் ஒரு வாரத்திற்குள் இது மூன்றாவது வாள்வெட்டுச் சம்பவமாகும். கடந்த 29ம் திகதி கெற்பேலியில் உள்ள வீடொன்றிற்குள் நுழைந்த வாள்வெட்டுக் கும்பல் வீட்டில் இருந்த பெறுமதியான பொருள்களை அடித்து நொருக்கி சேதமாக்கியமை குறிப்பிடத்தக்கது.

முகத்தை மூடிக் கட்டியவாறு கெல்மட் அணிந்து உழவு இயந்திரத்தில் சென்ற 15க்கும் மேற்பட்ட கும்பல் வீடு ஒன்றினுள் புகுந்து வீட்டையும் தளபாடங்களையும் வீட்டில் இருந்த பெறுமதியான பொருட்களையும் ஆறு உந்துருளிகளையும் அடித்தும் வெட்டியும் சேதமாக்கியுள்ளனர். இதனைத் தடுக்கச் சென்ற குடும்பஸ்தர் க.கனகசிங்கம் (35) என்பவர் வாள் வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளார். அண்மையில் கச்சாய் வீதியில் நிதர்சன் என்பவரை வெட்டிக் காயப்படுத்தியவர்களே மேற்படித் தாக்குதல் நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. சிறீலங்கா முப்படைகளின் பலத்த தேடுதல்களுக்கும் மத்தியில் இவ்வாறான வாள் வெட்டு குழுக்கள் மிகவும் சுதந்திரமாக இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

### தெல்லிப்பளையில் தனிமையிலிருந்த மூதாட்டி கொலை

வீட்டில் தனித்திருந்த மூதாட்டி கொலை செய்யப்பட்டு, நகை மற்றும் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது. மூதாட்டியின் கழுத்தில் காணப்படும் அடையாளத்தை வைத்தே கழுத்து நெரித்து அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிட்டுள்ள சிறீலங்காக் காவல்துறை, அவர் அணிந்திருந்த நகை மற்றும் வீட்டிலிருந்த பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர். தெல்லிப்பளை மகாதனையைச் சேர்ந்த சுந்தரலிங்கம் கமலாதேவி (வயது 70) என்ற மூதாட்டியே கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் கடந்த 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது. மூதாட்டியின் வீட்டுக்கு மறுநாள் காலை சென்ற உறவினர்கள், அவர் சடலமாகக் காணப்பட்டார் என விசாரணையில் தெரிவித்துள்ளனர்.

### மின்சாரம் தாக்கி ஒருவர் பலி!

முல்லைத்தீவு, முத்துஐயன்கட்டு, ஜீவ நகரில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த 7ம் திகதி நடந்துள்ளது. பழனியாண்டி குமாரவேல் (வயது 60) என்பவரே உயிரிழந்துள்ளார்.

### மீன்பிடிக்கச் சென்ற இளைஞன் சடலமாக மீட்பு!


மீன்பிடிக்கச் சென்ற இளைஞர் ஒருவர் வலையை இழுப்பதற்கு படகில் இருந்து கடலுக்குள் குதித்தபொழுது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் கடந்த 8ம் திகதி வாகரை மாங்கேணியை அண்டிய கடல் பகுதியில் இடம்பெற்றிருந்ததுடன் சடலமும் அன்றைய தினமே மீட்கப்பட்டது. உயிரிழந்தவர் மாங்கேணி மாவடியோடையைச் சேர்ந்த கே.தவசீலன் (வயது 18) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

### வாகன விபத்தில் ஒருவர் பலி

களுவாஞ்சிக்குடியில் இடம்பெற்ற விபத்தில் 42 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளார். களுவாஞ்சிக்குடி கல்முனை மட்டக்களப்பு பிரதான வீதியில் கல்முனை நோக்கி சென்ற உந்துருளி வேகக்கட்டுப்பாட்டை இழந்தமையால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதன் போது பலத்த காயங்களுக்குள்ளான உந்துருளியைச் செலுத்திச் சென்றவர் களுவாஞ்சிகுடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். இவரது பெயர் விபரம் தெரியவரவில்லை.

# உலகின் பாதுகாப்புச்...

7வது இடத்தில் பிரித்தானியா, 8வது இடத்தில் ஜேர்மனி, 9வது இடத்தில் ஜப்பான் மற்றும் 10வது இடத்தில் தென் கொரியா போன்ற நாடுகள் உள்ளன.




கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் போலந்து, உக்ரைன், பல்கேரியா நாடுகள் தங்கள் பாதுகாப்பு செலவினத்தை அதிகரித்துள்ளன.

இதேவேளை, ஆசிய மற்றும் ஆவுஸ்திரேலியக் கண்ட நாடுகள் பாதுகாப்பு செலவினத்தை அதிகரித்துள்ள அதேவேளை, ஆபிரிக்க மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் பாதுகாப்பு செலவினத்தை குறைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக அல்ஜீரியா, அங்கோலா, சூடான் நாடுகள் தங்கள் பாதுகாப்பு செலவினத்தை அதிகளவில் குறைத்துள்ளன எனவும் கூறப்பட்டுள்ளது.

# புலம்பெயர்ந்தவர்களின்...

இந்தப்படத்தில் இன்றைய காலகட்டத்தின் பிள்ளைகளைப் பெற்ற ஒரு தந்தை எப்படி வாழ்வார் அல்லது அவர் படும் அவஸ்தை என்னவென அரசியின் தந்தையாக நடித்தவர் அத்தனை உணர்வுகளையும் இயல்பாக மிகச்சிறப்பாக உணர்ந்து நடித்திருக்கிறார். புலம்பெயர் தேசம் அவரைப்பயன்படுத்த வேண்டும்.

சிறந்த நடிகர். அரசியாக இளைய தமிழச்சி முதல் படம் என சொல்வதற்கில்லை. அத்தனை சிறப்பு

வாழ்த்துக்கள் மகளே.

மற்றும் சில காட்சிகள் வலிந்து திணிக்கப்பட்டாலும் இன்றைய காலகட்டத்திற்கு சொல்ல வேண்டிய செய்தியை சொன்ன இயக்குநர் சுதாகரன் பாராட்டுக்குரியவர். பெரும் தொழில்நுட்ப வளர்ச்சி எம்மிடம் இல்லாவிடினும் சொல்லப்படவேண்டிய கதைக்களங்கள் ஏராளம் ஏராளம். மனித வாழ்வியலுக்கு சற்றும் சம்பந்தமில்லாத தமிழ்நாட்டு குப்பைகளை பணம் கொடுத்து பார்ப்பதை விட எம்மவர் படைப்புக்களை கனம் பண்ணவேண்டியது தமிழர்களின் கடமையாகும்.

அனைத்து கலைஞர்களும் சிறப்பு...

**ஒருத்தி ஒவ்வொரு புலம்பெயர் தமிழர்களும் காணவேண்டிய எச்சரிக்கை படைப்பு.**

## இருமுறை சர்ச்சிலைக்...

***1945ம் ஆண்டில் அலெக்ஸாண்டர் ஃப்ளெமிங் நோபெல் பரிசு வழங்கப்பட்டது. அலெக்சாண்டர் பிளெமிங்கின் ஞாபகார்த்தமாக வான்வெளியில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு சிறுகோளுக்கு 91006 பிளெமிங் எனப் பெயரிடப்பட்டது.***

***அதைவிட ஆச்சரியம் என்ன தெரியுமா? சிறு வயதில் சர்ச்சிலை ஏரியில் குளிக்கும்போது காப்பாற்றிய தோட்டக்காரரின் மகன்தான் இந்த அலெக்ஸாண்டர் பிளமிங்.***

### கருஞ்சீரகத்தின் மகத்துவ...

நம்முடைய உடலில் இருக்கிற கொஞ்சம் அதிகப்படியான எடையையும் தேங்கியிருக்கும் சதைகளையும் எந்த சிரமமும் இல்லாமல் குறைக்க உதவுவது இந்த கருஞ்சீரகம். இந்த கருஞ்சீரகத்தை வெறும் சட்டியில் போட்டு வறுத்தெடுத்து அதை பொடி செய்து கொள்ள வேண்டும். பொடி செய்து வைத்திருப்பதை தினமும் காலையில் ஒரு கரண்டி பொடியை எடுத்து அப்படியே சாப்பிட்டாலும் சரி, வெதுவெதுப்பான நீரில் கலந்து குடித்தாலும் சரி சரசரவென்று வேகமாக எடை குறையும். நீரிழிவு நோயினால் நமக்கு ஏற்படுகின்ற அதிகப்படியான அழுத்தத்தை மிகவும் எளிதாக குறைக்கக் கூடியது தான் இந்த கருஞ்சீரகம். இந்த கருஞ்சீரகம் இரத்தத்தில் குளுக்கோசின் அளவைக் கட்டுக்குள் வைக்கிறது. இந்த நீரிழிவு நோய், அஜீரணக் கோளாறு, உடல் எடை அதிகரிப்பது போன்ற பிரச்சினைகளும் வரக்கூடும். இதை தடுத்து நிறுத்தும் ஆற்றல் கொண்டதாக இருக்கிறது. கல்லீரல் மிக ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென்றால் அந்த கல்லீரல் மிக சுத்தமாக இருக்க வேண்டும். இதிலுள்ள அன்டி அக்சிடண்ட்டுகள் கல்லீரலை சுத்தம் செய்ய உதவுகிறது.

## விக்டோரியா நீர்வீழ்...

இந்த நீர்வீழ்ச்சிக்குக் காரணமான ஜாம்பஸி நதி 1000 மைல் தொலைவிற்குத் தடையின்றி ஓடி வருகிறது. இப்படி ஓடிவந்து அதலபாதாளத்தை நோக்கி விழும் இதன் ஓசை இடிமுழக்கம் போலக் கேட்கும். இது கீழே வீழ்ச்சியடையும்போது எழும் சாரலும் நீர்த்திவலைகளும் புகை போல எழும்பும். இது 60 கிலோ மீற்றர்களுக்கு அப்பாலும் நன்றாகத் தெரியும். இப்படிச் சிதறி விழும் நீர்த்திவலைகளில் சூரிய ஒளி படுவதால் எப்போதும் வானவில்லைக் காணலாம். சில சமயங்களில் இரண்டு வானவில்கள் தோன்றி வர்ணஜாலம் புரிந்து கண்ணைக் கவரும். பௌர்ணமி இரவில்கூட இங்கு வானவில் தோன்றி அதிசயம் புரியும்.

ஜாம்பஸி நதி, விக்டோரியா நீர்வீழ்ச்சியாக விழுந்து மீண்டும் அடர்ந்த காடுகளின் வழியே மிகப் பெரிய நதியாகப் பாய்ந்து ஓடுகிறது. இந்த அருவியைக் காண ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் இங்கு வந்து போகின்றனர். இதனால் சிம்பாப்வே மற்றும் சம்பியா நாடுகளுக்கு ஏகப்பட்ட வருமானம்.

## ஒரு கை ஓசை...

மிகுந்த ஏமாற்றமும் சோர்வுமாக வந்த மாணவன், ‘போதும் குருவே, நான் போகிறேன்’ என்றான்.

சரி, ஒரு ஐந்து நாள் மட்டும் இருந்து பார்த்துவிட்டுப் போ என்றார் சுவோ. அந்த ஐந்து நாட்களில் அவனால் எதையும் உணர முடியவில்லை. மீண்டும் சுவோவிடம் வந்து உதட்டைப் பிதுக்கினான்.

இந்த முறை சுவோ இப்படிச் சொன்னார்:

‘சரி, கடைசியாக மூன்று தினங்கள். இந்த மூன்று தினங்களில் உன்னால் இந்த சோதனைக்கான விடையைக் காண முடியாவிட்டால், செத்துப் போ’ என்றார் கண்டிப்பு மிக்க குரலில்.

மாணவன் தன் அறைக்குத் திரும்பினான். இரண்டாம் நாள் வந்தான்.. ‘குருவே.. ஒரு கை ஓசை கேட்டது. நான் தேடி வந்தது கிடைத்தது,’ என்றான்.

- ஜென் கதைகள்


À PARTIR DU
17 MAI
AANNA FILMS
GAUMONT ST-DENIS
MEGARAMA VILLENEUVE LA GARENNE
PARKING GRATUIT
MEGARAMA MONTIGNY
EUROPACORP AÉROVILLE*
MEGARAMA CHAMPIGNY
GAUMONT DISNEY *
PATHÉ BELLE ÉPINE THAIS*
PATHÉ MASSY
KINEPOLIS BRÉTIGNY
PATHÉ LA VILLETTE PARIS
PUBLICIS PARIS
* en attente de confirmation
Consultez notre site web pour les salles de province
சிவகார்த்திகேயன்
Mr.லோக்கல்
VOSTF
ராஜேஷ். M
INFORMATIONS
AANNAFILMS.FR
RÉSERVATIONS


SURIYA
NGK
NANDHA GOPALAN KUMARAN
À PARTIR DU
31 MAI

# Vijay Jewellery
## VJ விஜய் நகை மாளிகை

புதுப்பொலிவுடன் லாச்சப்பலில்
05/05/2019 ஆரம்பம்

அன்றைய தினம் நகை வாங்குபவர்களுக்கு
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

புதிதாக ஆரம்பமாகும் நகைச்சீட்டில்
இணைந்து கொள்ளும் அனைவருக்கும் 100€ இலவசம்.

சகல விதமான நகைகளும் குறித்த தவணையில்
உங்கள் எண்ணத்திற்கேற்ப வடிவமைத்து தரப்படும்.





51, Rue Louis Blanc 75010 Paris
Tel : 09 80 79 21 37
Port : 06 23 68 24 53
M° : Gare du Nord / La Chapelle / Louis Blanc
Vijay_Jewellery
Vijay Jewellery Shop

---

பிரெஞ்சு அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்!

## திரு.சகாதேவன்

- எமது மொழிபெயர்ப்புக்கள் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும்.
- நீங்கள் வழங்குபவர்களுக்கு தாம் ஏனம் மொழிபெயர்ப்புக்கள் அனுப்பி வைக்கப்படும்.

தொடர்பு கொள்ள
SAGADEVAN Pierre
26, rue Philippe de Girard,75010 Paris
Tél: 01 46 07 50 23 Mobile: 06 81 34 41 06
E.mail: saga_de_van@yahoo.fr

---

## 3i Conduite
லா சப்பலில்
சாரதி பயிற்சிநிலையம்

CODE DE LA ROUTE பயிற்சி வகுப்புகள்
CONDUITE பயிற்சி வகுப்புகள்
CONDUITE EXAM அனுமதி பெற்றுக்கொள்ளலாம்
சகல பயிற்சிகளும் உங்கள் நேர வசதிக்கு ஏற்ப அமைத்துத்தரப்படும்

57 RUE LOUIS BLANC - 75010 PARIS
SRUTHI STUDIO வின் உள்ளும்
Tél : 06 51 38 87 33

---

பாரிஸ் லா சப்பலில்
## AMBAAL STORE



பல் பொருள் அங்காடி
Tél: 01 42 05 41 85
192, rue du Fbg.st.Denis 75010 Paris

---

Neuilly sur marne, Meaux, Torcy, Lagny
வாழ் மக்களின் வசதிக்கேற்ப Chelles மாநகரிலே


## EURO SAGEN

மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள்
மற்றும் கடலுணவு வகைகள்
Ria MoneyGram WESTERN UNION
Import & Export
62 av du Maréchal Foch, 77500 Chelles
Tél: 0160202947 | Port: 0667204000

---

## பாலன்ஸ் சலூன்

தமிழர்களால்
நடத்தப்படும்
ஆண்கள்
அழகு நிலையம்



29 rue Philippe de Girard,
75010 Paris. M° La Chapelle
Tél: 06 63 01 75 80

---

உங்கள் உணவுவிடுதி மற்றும்
உங்கள் இல்ல வைபவங்களிற்கான பொருட்களை
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

## RAPID EMBALLAGES

1 bis, rue du chemin vert
93800 Epinay sur seine
Tél./Fax: 01 39 83 68 81 Rép.: 01 58 34 04 22
Port: 06 66 79 56 89 / 06 16 81 22 00

---

## EURO RESTO SERVICE

உணவு விடுதிகளுக்கான உபகரணங்கள், மற்றும் உங்கள் இல்ல, மண்டப வைபவங்களுக்கான பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அனைத்து விதமான பிளாஸ்ரிக் பைகளும் மிகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்

48, RUE DU CHÂTEAU LANDON - 75010 PARIS
TÉL: 01 40 36 00 09 / 06 68 67 15 55 M°: STALINGRAD / LA CHAPELLE

---

## VICHNESH SHOP


அனைத்து வகையான மளிகைப் பொருட்கள்
மற்றும் அனைத்து நாடுகளுக்கான தொலை
பேசி அட்டைகள் மலிவு விலையில்
பெற்றுக்கொள்ளலாம்



8 Esplanade de l europe
95100 Argenteuil
Tel: 01 39 81 35 60

---

ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான
சிகையலங்கார நிலையம்.



## COIFFURE VITHUSA

TÉL: 06 52 44 89 27
40, RUE HENRI BARBUSSE
93300 AUBERVILLERS
M° : Aubervilers 4 chemmins
Bus : 170,150,249,152

---

## S.P.Raju Jewellery

பழைய நகைகளுக்கு
புதிய நகைகள் மாற்றிக்கொள்ள!!!!



199 rue du Fbg St Denis,
75010 Paris
Tél: 01 58 20 17 33

13 rue cail, 75010 Paris
Tél: 01 46 07 43 42

---

## மாலா மளிகை
மலிவிற்கு மறுபெயர் மாலா

அனைத்து
மளிகைப் பொருட்களும்
ஒரே இடத்தில் - உயர் தரத்தில்

மாலா மார்க்
2Kg றால் 13€95
2Box நண்டு 10€95
2Kings மிளகாய்த்தூள் 11€90
2Kg றால் 10€99

60 Rue Louis Blanc, 75010 Paris
Tél : 01 40 34 42 49 M°: La Chapelle ou Gare du Nord